www.onlineuthayan.com

பக்கங்கள் : 24
சிறப்பிதழ் : 8

# உதயன்

சுடர் 27
கதிர் 149

வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 11 திங்கட்கிழமை (23/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### கடத்தல்கள் பற்றி ஹக்கீமுக்கு தெரியுமாம்

கடத்தல்களில் ஈடுபடுவோர் யார் என்ற விவரங்களை அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. அமெரிக்கத் தூதரகத்தினால் அந்நாட்டு இராஜாங் கத் திணைக்களத்திற்கு அனுப்ப வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கடத்தல் சம்பவங்களுக்கும் மிகவும் உயர் மட்டத்தினருக்கும் தொடர்பு இருக்கின்றது என ஹக்கீம் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

### சடலம் மீட்பு

குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் தொங்கிய நிலையில் நேற்று மானிப்பாய்ப் பொலிஸாரால் மீட்கப்பட்டது. சுதுமலை மேற்கைச் சேர்ந்த கந்தையா தவராசா (வயது-63) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இவர் அச்சகம் ஒன்றின் உரிமையாளர் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற மானிப்பாய்ப் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

### கிரிக்கெட் வீரர் முபாறக் கைது

இலங்கை கிரிக்கெட் வீரர் ஜெஹான் முபாறக் பயணம் செய்த வாகனம் சிலாபத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனால் ஜெஹான் முபாறக் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுப் பிற்பகல் ஜெஹான் முபாறக் புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம் பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

### லண்டன் ஒலிம்பிக் இலங்கை வீரர் தகுதி

லண்டனில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் மரதன் போட்டியில் பங்குபற்ற இலங்கையின் மரதன் வீரர் அனுராத குரே தகுதி பெற்றுள்ளார். நேற்று இடம்பெற்ற லண்டன் மரதன் போட்டியில் ஓட்ட தூரத்தை 2 மணித்தியாலம் 17 நிமிடம் 50 செக்கன்களில் அனுராத குரே ஓடி முடித்ததாலேயே இந்த வாய்ப்பு அவருக்குக் கிட்டியுள்ளதாக மேஜர் ஜெனரல் பாலித பெனாண்டோ தெரிவித்தார்.

### ஆற்றில் வீழ்ந்த இருவர் சாவு

மட்டக்களப்பு கிரான் பகுதியில் உள்ள ஆற்றில் தவறி வீழ்ந்த இருவர் நேற்று உயிரிழந்தனர். கண்ணகிபுரம் வாழைச் சேனையைச் சேர்ந்த அந்தோனிப் பிள்ளை திலிப்குமார் (வயது 24) அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை கேதீஸ் (வயது 18) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். ஆறு பேர் கொண்ட குழுவினர் ஆற்றங் கரையோரத்தில் இருந்த கல் ஒன்றின் மேலே நின்று புகைப் படம் எடுத்துக்கொண்டிருக்கும் போது ஒருவர் தவறி விழுந்ததை யடுத்து அருகருகே இருந்த மேலும் நால்வரும் தவறி விழுந்துள்ளனர். இதில் இருவர் உயிரிழக்க ஏனையோர் மீட்கப்பட்டனர்.

# வடக்கில் படைகளை வெளியேற்ற முடியாது

## இந்தியக் குழுவிடம் மஹிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஏப்ரல் 23

வடக்கில் இருந்து படைகளை வெளியேற்றக் கோருவது நியாயமற்றது - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியக் குழுவினரிடம் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து ஆராய வந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு நேற்றுமுன்தினம் காலை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது.

இதன்போது வடக்கில் இருந்து இராணுவம் வெளியேறுவதையே அங்குள்ள மக்கள் விரும்புகின்றனர். குறிப்பாக ஆலயங்கள், மக்களின் வாழ்விடங்கள் என்பவற்றில் இருந்து இலங்கை இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்று இந்தியக் குழுவினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்.

எனினும் அவர்களின் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

"தமிழர்கள் வாழும் பகுதிகளில் மாத்திரமல்லாது நாடு முழுவதிலும் தான் நாங்கள் படைகளை நிறுத்தியுள்ளோம். இது இலங்கையின் இறையாண்மையோடும், பாதுகாப்போடும் தொடர்பு பட்ட விடயம். எனவே வடக்கில் நிலை கொண்டுள்ள படையினரை வெளியேற்று வது சாத்தியமான விடயமாக இருக்கப்போவதில்லை.

படையினரை அங்கிருந்து வெளியேற்றி இந்தியாவுக்கா அனுப்ப முடியும்?" என்று இந்தியக் குழுவினரைப் பார்த்து ஆவேசமாக கேள்வி எழுப்பினார் இலங்கை ஜனாதிபதி.

குறிப்பிட்ட இடங்களில் தான் இலங்கைப் படையினர் தளம் அமைத்துள்ளனர். அவர்கள் ஒன்றும் வெளிநாட்டு மண்ணில் நிறுத்தப்படவில்லை. இலங்கையில்தான் நிலை கொண்டுள்ளனர்.

போர் முடிந்த பின்னர் வடக்கு, கிழக்கில் முன்னர் இலங்கைப் படைகள் வசம் இருந்த பெருமளவு பகுதிகளை விடுவித்துள்ளோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### பள்ளிவாசல் இடிப்பு; அரபு நாடுகள் கொதிப்பு

கொழும்பு, ஏப்.23

தம்புள்ளை பள்ளிவாசல் மீதான தாக்குதலுக்கு அரபு நாடுகள் பலத்த கண்டனத்தையும், கடும் விசனத்தையும் வெளிப்படுத்தியுள்ளன.

அத்துடன், குறித்த அரபு நாடுகள் இலங்கையிலுள்ள தமது நாட்டுத் தூதுவர்களிடம் பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பிலான முழு விவரங்களையும் திரட்டி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளன.

இதன்படி இலங்கையிலுள்ள அரபு நாடுகளின் தூதுவர்கள், முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் முக்கிய முஸ்லிம் அரசியல் பிரமுகர்களிடம் தொடர்பு கொண்டு விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளன.

முஸ்லிம் அமைச்சர்களுடனும், முஸ்லிம் அரசியல் பிரமுகர்களுடனும் இது தொடர்பில் அரபு நாடுகளின் தூதுவர்கள் தனித்தனி சந்திப்புகளை மேற்கொண்டு விவரங்களைப் பெற்றுவருகின்றனர் எனவும் தெரிய 04

## இரு ஆண்டுகளுக்குள் இரண்டாகும் இலங்கை

### ஐ.நா. படை இதை அரங்கேற்றும்; எதிரணிக் கட்சிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.23

ஜெனிவாத் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கும், அரசியல் தீர்வை வழங்குவதற்கும் அரசு தவறினால் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நாடு இரண்டாகப் பிளவுபடும் சூழ்நிலை ஏற்படும். ஐக்கிய நாடுகள் அமைதிப்படை வடக்கு, கிழக்கிற்குச் சென்று இதனை அரங்கேற்றும் என்று எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நவ சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திரா இது தொடர்பாகத் தெரிவித்ததாவது-

ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றக் கோரியும், அரசியல் தீர்வை உடனடி 04

## படையினர் எண்ணிக்கை குடாநாட்டில் குறைப்பு

### யாழ். கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்டக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். "27 ஆயிரமாக இருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 16 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது" என்றார் அவர்.

தற்போதுள்ள இந்த எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார். 04

## போர்க் குற்றங்கள் பற்றி வாய்திறக்காத இந்தியக்குழு

கொழும்பு, ஏப்.23

போரின்போது இலங்கைப் படையினரால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கை ஜனாதிபதியிடம் இந்தியக் குழு வலியுறுத்தியதா என்ற கேள்விக்குப் பதிலளிக்காமல், இந்தியக் குழுவில் இடம்பெற்ற தமிழகக் காங்கிரஸ் உறுப்பினர்கள் நழுவிக் கொண்டுள்ளனர்.

இலங்கை சென்று திரும்பிய இந்திய நாடாளுமன்றக் குழுவில் இடம் பெற்றிருந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் மாலை சென்னையில் சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு புனர்வாழ்வு எவ்வளவு முக்கியமோ அதே போல போரின்போது நடந்த மனிதஉரிமை மீறல்களும் முக்கிய பிரச்சினை. இது குறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் இந்தியக் குழு வலியுறுத்தியதா என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதுதொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் மற்றும் குழுவில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சித்தன், 04

## மனித உரிமைகளில் கவனம் செலுத்தும் தொண்டு நிறுவனங்கள் மீது விசாரணை

கொழும்பு, ஏப்.23

வெளிநாட்டவர்களின் கொள்கைகளுக்கு அடிபணிந்து தமது நோக்கங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் அப்பாற்சென்று மனித உரிமைகள் தொடர்பில் செயற்பட்டுவருகின்ற 90 சதவீதமான அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராகக் கடுமையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டின் சுற்றுச்சூழல், கலாசாரம், கல்வி ஆகிய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டே அரச சார்பற்ற நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது நோக்கங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் அப்பாற்சென்று மனித உரிமைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதாகத் தமக்கு கிடைக்கப் பெற 04

### நகரசபைத் தலைவரின் வீட்டில் தாக்குதல்

தென்மராட்சி,ஏப்.23

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளையின் வீட்டுக்குள் நள்ளிரவு வேளையில் புகுந்து இனந்தெரியாத குழுவினர் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியதுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தி விட்டு தப்பியோடி விட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாவை அரசு கூண்டிலேற்றுமானால் நானும் நீதிமன்றத்தில் பிரசன்னமாவேன்

## அரசுக்கு குணரட்ணம் சவால்

கொழும்பு, ஏப்.23

''என்னை நாடு கடத்திய தன் மூலம் மக்களிடமிருந்து என்னை விலக்குவதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முயற்சித்தாலும் மக்களுக்கு நான் அரசியல் ரீதியாக சேவையாற்றுவதைத் தடுக்க முடியாது''- இவ்வாறு ஆஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப்பட்ட முன்னிலை சோசலிஸக் கட்சியின் தலைவர் பிறேமகுமார் குணரட்ணம் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் வருமாறு:

கேள்வி - உங்கள் கட்சியின் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு திரும்பிவர முயற்சிக்கிறீர்களா?

பதில்- நாங்கள் மார்க்ஸிஸம், லெனினிஸம் போன்ற கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நாம் பணியாற்றுகிறோம். உலகில் எந்த பாகத்திலிருந்தாலும் நாம் மக்களுக்காகப் பணியாற்றலாம். மொழி, நாடு, இன அடையாளங்கள் எம்மை பாதிக்காது. ஆனாலும் இலங்கையிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பணியாற்றுவதில் நான் அதிக ஆர்வம் கொண்டுள்ளேன்.

என்னை நாடுகடத்திய தன் மூலம் மக்களிடமிருந்து என்னை விலக்குவதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முயற்சித்தாலும் அந்த மக்களுக்கு அரசியல் ரீதியாக நான் சேவையாற்றுவதைத் தடுக்க அவர்களால் முடியாது. தற்போதைய ஜனநாயக விரோதப் போக்கில் மாற்றமொன்றை ஏற்படுத்திய பின்னர் நிச்சயமாக நான் இலங்கை மக்களுக்காக சேவையாற்ற வருவேன்.

கேள்வி: நீங்களும் திமுது ஆட்டிகலவும் கடத்தப்பட்டமை தொடர்பாக வதந்திகள் உள்ளன. பொது மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் அரசியல் லாபங்களுக்காவும் நீங்கள் இருவரும் கடத்தப்பட்டதாக நாடகமாடியதாகச் சிலர் கூறுகிறார்கள். அது பற்றி...?


பதில்: இந்த நடவடிக்கை அரசின் ஜனநாயக விரோதப் பாதையையே காட்டுகிறது. நாம் ஆயுத குழுவொன்றின் மூலம் கடத்தப்பட்டோம். எனினும் பொலிஸாருக்கூடாக விடுவிக்கப்பட்டோம். இந்த நாடகத்தை யார் நடத்துகிறார்கள் என்பது வெளிப்படை. நாம் இழிவான விடயங்களை செய்வதில்லை. எமக்கு முன்னாலுள்ள சவால் குறித்து எமக்கு ஆழமான அரசியல் அறிவு உள்ளது. அந்த சவாலை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அவற்றை வெற்றிகரமாக முறியடிக்கும் மனோவலிமை எங்களுக்கு உண்டு.

கேள்வி: நீங்கள் பாலியல் ரீதியாக சித்திரவதை செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தியுள்ளீர்கள். இதற்காக நீதி தேடி சர்வதேச அமைப் பொன்றிடம் செல்லும் யோசனை உங்களிடம் உள்ளதா?

பதில்: ஆட்சியாளர்கள் எனது வாழ்க்கையை அழிக்க விரும்பினார்கள். எமது அரசியல் நெறிமுறையை அழிக்கவும் அவர்கள் முயற்சித்தார்கள். எனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்த விடயத்தை உலகெங்கும் உள்ள முற்போக்கு சக்திகளிடம் கொண்டு செல்வேன். ஆனால் முதலாளித்துவ முறைமையின் கீழ் இயங்கும் எந்த நீதிமன்ற அமைப்பிற்கும் நான் செல்லப் போவதில்லை.

கேள்வி: குடிவரவு, குடியகல்வு சட்டத்தை நீங்கள் மீறியதாக குற்றம் சுமத்தப்படுகிறது. இது தொடர்பாக இலங்கை அல்லது நீங்கள் தங்கியிருக்கும் ஆஸ்திரேலியாவில் ஏதாவது விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறீர்களா?

பதில்: முதலாளித்துவ சட்டத்தின்கீழ்கூட உயிர் வாழ்வதற்கான உரிமையானது ஏனைய எல்லாவற்றையும்விட மேலானதாக



உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய ஜனநாயக விரோத ஆட்சியில் அந்த உரிமை ஆபத்துக்குள்ளாகி உள்ளது. இலங்கையில் ஊடகத்துறைக்கு என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். உயிருக்குப் பயந்த ஊடகவியலாளர்கள் சிலர் தலைமறைவாகியுள்ளனர். வேறு சிலர் தமது அடையாளங்களை மறைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமை ஊடகத் துறைக்கும் அரசியலுக்கும் பொதுவானது.

இலங்கையிலோ வெளிநாட்டிலோ எந்த நீதிமன்றத்திலும் முன்னிலையாவதற்கு நான் தயார். அத்துடன் மக்களிடம் சென்று எனது பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கவும் நான் தயார். எனினும் சில வருடங்களுக்கு முன்னர் கருணா அம்மானுக்காக குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி அரசு போலி கடவுச் சீட்டொன்றை பயன்படுத்தியது. அவரை நீதிமன்றம் முன் நிறுத்துமாறு அரசு கோரப்பட வேண்டும். அரசுக்கு ஒரு சட்டம், எதிர்க்கட்சிக்கு வேறு ஒரு சட்டம் இருக்க முடியாது.

பிரதியமைச்சர் கருணாவை நீதிமன்றத்தில் நிறுத்த அரசு முன்வருமானால் நானும் நீதிமன்றத்தில் பிரசன்னமாகத் தயார்.

கேள்வி: நீங்கள் கடத்தப்பட்டு, பின்னர் பொரளையிலுள்ள கொழும்பு குற்றப் பணியகத்திற்கு அனுப்பப்பட்டவுடன் அங்கு உங்கள் கடவுச்சீட்டை கொண்டுவர ஆஸ்திரேலிய தூதுவரால் எப்படி முடிந்தது?

பதில்: இவை அபத்தமான குற்றச்சாட்டுகள். எனது கடத்தலின் பின்னர் காணாமல் போன ஆஸ்திரேலிய பிரஜையின் கடவுச் சீட்டு விவரங்களை ஆஸ்திரேலிய தூதுவர் பாதுகாப்புச் செயலாளர் கோரியதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இந்த செய்திகளை பார்த்த எமது கட்சியின் சக செயற் பாட்டாளர்கள், ஆஸ்திரேலிய தூதரகத்திடம் எனது கடவுச் சீட்டை ஒப்படைத்தனர். அனைத்து ஆவணங்களையும் எனது கட்சி அங்கத்தவர்களிடம் கொடுத்திருந்தேன். அதில் மறைப்பதற்கு எதுவுமில்லை. - என்று அந்த நேர்காணலில் பிறேமகுமார் குணரட்ணம் தெரிவித்துள்ளார். (ங)

# பள்ளிவாசலை அமைப்பதற்கு லஞ்சம் வாங்கினார் அமைச்சர்

### தம்புள்ளை விஹாராதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.23

தம்புள்ள பள்ளிவாசலை அமைப்பதற்காக காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் லஞ்சம் வாங்கியுள்ளார் என்று பௌத்த பிக்கு ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தில் இஸ்லாமிய பள்ளிவாசல் அமைப்பதற்கு காணி அமைச்சர் லஞ்சம் பெற்றுக் கொண்ட பின்னரே அனுமதி வழங்கியுள்ளார் என்று ரன்கிரி தம்புள்ள விகாரையின் பீடாதிபதி இனாமலுவே ஸ்ரீ சுமங்கல தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த பள்ளிவாசலை இடிக்குமாறு அண்மைக் காலமாக தம்புள்ளையில் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு சுமங்கல தேரரே தலைமை தாங்கி வருகின்றார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டு அபாண்டமானது என அமைச்சர் ஜனக பண்டாரதென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சுமங்கல தேரரின் குற்றச்சாட்டுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவோருக்குத் தலையில் இடி விழும் என்றும் அமைச்சர் சாபம் கொடுத்துள்ளார். (ங)



யாழ்.பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டு விளையாட்டுப் போட்டி துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள மைதானத்தில் நேற்று நடைபெற்றது. யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, 521ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி கேணல் அஜித் பல்லாவல ஆகியோர் போட்டிகளை ஆரம்பித்து வைக்கின்றனர். (ங-15)

# காட்டு யானை தாக்கியதில் மூவர் காயம்

கொழும்பு, ஏப்.23

கனேவல்பொல - கெக்கிராவ பிரதான வீதியின் மான்கடவள பகுதியில் காட்டு யானை தாக்கி மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் குறித்த மூவரும் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென எதிர்ப்பட்ட யானை முச்சக்கர வண்டியைப் பந்தாடியது. பின்னர் அங்கிருந்து யானை தப்பியோடி விட்டது. யானையின் தாக்குதல் நடந்த இடம் காட்டுப் பகுதி என்பதால் மக்கள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. முச்சக்கர வண்டிக்குள் காயமுற்ற நிலையில் இருந்தவர்களை பொதுமக்கள் மீட்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

நேற்று நடைபெற்ற காட்டு யானையின் தாக்குதலில் கணவன் - மனைவி மற்றும் அவர்களின் இரண்டு வயது பெண் குழந்தை ஆகியோரே காயமடைந்த நிலையில் கெக்கிராவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக கடவள பகுதியில் காட்டு யானையின் அட்ட காசம் அதிகரித்துள்ளதாக வனவள அதிகாரிகளிடம் முறையிட்டுள்ள போதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ங)

# அரசு உதவவில்லை

### கொள்ளையரிடம் இருந்து மீண்ட மீனவர்கள் வேதனை

கொழும்பு, ஏப்.23

''நாங்கள் கடற்கொள்ளையர்களிடம் பிடிபட்டிருந்த காலத்தில் இலங்கையில் உள்ள எமது குடும்பத்துக்கு இலங்கை அரசிடம் இருந்தோ பிற அமைப்புகளிடம் இருந்தோ எதுவித உதவியும் கிடைக்கவில்லை'' என்று சோமாலியக் கடற்கொள்ளையர்களிடம் இருந்து மீண்ட இலங்கை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடந்த ஒக்டோபர் மாதம் கடத்தப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் ஆறு பேர், ஸ்பெயின் கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில் கடற்கொள்ளையர்களிடம் இருந்து காப்பாற்றப் பட்டு தான்சானியத் தலைநகர் தாரெஸ்ஸலாமுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். குறித்த இலங்கை மீனவர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ங)

# போதைப் பழக்கத்துக்குள் மூழ்கியோரை மீட்டெடுக்கப் புதிய புனர்வாழ்வு முகாம்

### சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஏப்.23

மது போதை, புகைத்தல் போன்ற பழக்கங்களுக்கு அடிமையாகி சீர்கெட்டுள்ளவர்களை மீளவும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் வகையில் புதிய புனர்வாழ்வு முகாம் ஒன்றை அமைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த புனர்வாழ்வு முகாமை அமைக்க தீர்மானித்ததாக சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், இதய நோய், கண்பார்வைக் குறைவு, புற்று நோய் மற்றும் சுவாச நோய் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இதற்குக் காரணம் மது போதை மற்றும் புகைத்தல் என்பவற்றுக்கு அடிமையாகும் செயற்பாடுதான் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கிராமப் பகுதிகளில் வறுமை அதிகரித்துள்ளமைக்குக் காரணமும் மது, புகைத்தல் பாவனை அதிகரித்துள்ளமையே என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலைமைகளை பரிசீலித்த பின்னரே மது மற்றும் புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுத்து அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியது அவசியம் என்ற விடயம் உணரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரிப் பாகங்களின்றி முடங்கிய 30 பஸ்கள் மீண்டும் சேவையில்

## இந்த வாரம் பாவனைக்கு விடப்படும் என்கிறார் வடபிராந்திய பிரதம முகாமையாளர்

*யாழ்ப்பாணம், ஏப்.23*

*உதிரிப்பாகங்கள் கிடைக்காமல் சாலைகளில் முடங்கிக் கிடந்த பஸ்களில் 30 திருத்தப்பட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கி வந்த போக்குவரத்துப் பிரச்சினை சீராகும் - என்று வடபிராந்திய சாலை பிரதம முகாமையாளர் எஸ்.அஸ்கர் தெரிவித்துள்ளார்.*

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவையை முன்னேற்றுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று, நேற்றுமுன்தினம் வடபிராந்திய சாலைத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

வடபிராந்திய பிரதம சாலை பிரதம முகாமையாளர் தலைமையில் வடபிராந்திய சாலையின் உயர் அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போதே உதிரிப்பாகங்கள் இன்றி முடங்கிக் கிடக்கும் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தும் வழிமுறைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கலந்துரையாடலின் முடிவிலேயே எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பஸ்களுக்கான உதிரிப்பாகங்களைக் கடன் அடிப்படையில் பெற்று, முதற்கட்டமாக 30 பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

போதிய பஸ்கள் இன்மையால் பொது மக்களுக்கான போக்குவரத்துச் சேவையை சீராக மேற்கொள்ள முடியாமல் வடபிராந்திய போக்குவரத்துச் சபை திண்டாடிவந்தது. எனினும் மேலதிக பஸ்களை வழங்குமாறு அரசுக்கு பல முறை கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும், ஒரு சில பஸ்களே வழங்கப்பட்டிருந்தன.

அத்தோடு ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்களும் அடிக்கடி பழுதுபட்டதால் நிலைமை இன்னும் மோசமானது. இதே வேளை சாலைகளில் உதிரிப் பாகங்களை பெற்றுக் கொள்ள முடியாமையாலும், அதற்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையாலும் 30இற்கும் அதிகமான பஸ்கள் சாலைகளில் முடங்கிக்கிடந்தன. தற்போது அந்த பஸ்களே திருத்தப்பட்டு மக்களின் போக்குவரத்துச் சேவைக்காக பயன்பாட்டுக்கு விடப்படவுள்ளன. (ம-3)

### யாழ். பொலிஸாரின் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்.பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் புதுவருடத்தை ஒட்டிய விளையாட்டு நிகழ்வுகள் நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்கு அருகில் உள்ள மைதானத்தில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகர தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக 521ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி கேனல் அஜித் பல்லாவலவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி, கிறிஸ் மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல் உட்படப் பல நிகழ்வுகள் இடம்பெற்றன. (15)

## நிகழ்வுகள் இன்று

**நாக விகாரையில் பாராட்டு விழா**

மல்வத்து பீடத்தின் உபபீடாதிபதி அட்டபகஸ்கட சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ சுமண சித்தாந்த கல்யாண திஸ்ஸாபிதான தேரரின் வடமாகாண பிரதி பிரதான சங்கை நாயக்க நியமன பதவிப் பிரமாணத்தை முன்னிட்டு யாழ்.நாக விகாரையில் முற்பகல் 10 மணிக்கு பாராட்டு விழா இடம் பெறவுள்ளது.

யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, மல்வத்த பீடத்தின் சங்க நாயக்க தேரர்கள் உட்படப் பலர் இதில் கலந்துகொள்கின்றனர். (ஒ-3)

**வைத்தியசேவை**

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா மகா சமாதி முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாராட்சி ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்கள் இணைந்து நடத்தும் இலவச வைத்திய சேவை நண்பகல் 12 மணிக்கு பருத்தித்துறை டிப்போவுக்கு முன்பாக அமைந்துள்ள சத்யசாய் மெடிக்கல் வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**காலணி வழங்கல்**

தமிழ், பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு காலணி வழங்கும் நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு யாழ். நாகவிகாரையில் நடைபெறவுள்ளது. இந்து பௌத்த சங்கத்தின் சுவிஸ் கிளையுடன் இணைந்து வழங்கப்படும் இந்த நிகழ்வில் 100 மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப்படவுள்ளன. (ம-3)

**கூட்டம்**

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச நிர்வாக உறுப்பினர்களுக்கான கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-9)

## செல்வா நினைவு நாளில் சொல்லின் செல்வர் உரை

யாழ்ப்பாணம், ஏப்.23

தந்தை செல்வாவின் 35 ஆவது நினைவுநாள் நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த பிரமுகரும் மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சொல்லின் செல்வர் செல்லையா இராசதுரை (வயது 83) நினைவுரை நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெறவுள்ள நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கட்சியின் முக்கிய உறுப்பினரான செல்லையா இராசதுரை கலந்துகொள்ளவுள்ளார்.

செல்வா நினைவு அறங்காவல் குழுவின் தலைவர் அருட் கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், அருட் கலாநிதி அ.பி. ஜெயசேகரம் அடிகள், அருட் தந்தை எம்.வி.இ.ரவிச்சந்திரன் அடிகள், மௌலவி இபுறகிம் முகம்மது பாஹிர் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர்.

வரவேற்புரையை அறங்காவல் குழுவைச் சேர்ந்த பெ. கனகசபாபதியும் நன்றி உரையை அறங்காவல் குழுவின் செயலாளர் ச.சத்தியசீலனும் நிகழ்த்துவர்.

முன்னதாக அன்னாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்படும். (ம-7)

## வலி. மேற்கில் திண்மக் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், ஏப்.23

வலி. மேற்கில் உள்ள திண்மக் கழிவுகள் முழுமையாக அகற்றப்படுகின்றன.

நீண்ட காலமாக அகற்றப்படாது சுகாதாரத்துக்கு பங்கம் விளைவித்த திண்மக் கழிவுகள் முற்றாக அகற்றப் பட்டு வருகின்றன.

வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன் தலைமையிலான குழுவினர் இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரான இவர் தனது சொந்தச் செலவில் 5 டிராக்டர்களை வாடகைக்கு அமர்த்தி 20 லோட் கழிவுகளை அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திண்மக் கழிவு அகற்றும் பணிகளில் 20 பேர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## பண்ணையில் மேம்பாலம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

பண்ணை வீதியில் மண்டைதீவு சந்திக்கு அருகில் மேம்பாலம் ஒன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பாலம் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் திட்டங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த மேம்பாலத்தை விரைவாக நிர்மாணிக்கவும் தற்போது துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் வசதி கருதி அமைக்கப்படும் இந்த மேம்பாலம் பண்ணைப் பாலத்தை விட மிகவும் உயரம் கொண்டதாக அமையவுள்ளது.

மீனவர்களின் மீன்பிடி கலன்கள் இந்தப் பாலத்தின் ஊடாக எதுவித சிரமமும் இன்றி செல்லக் கூடிய வகையில் அமைக்கப்படும் என்றும் மிகவும் ஆழம் கூடிய கடற்பகுதியில் அமைய இருக்கும் இந்த புதிய மேம்பாலத்தினூடாக பெரிய அளவிலான மீன்பிடி கலன்களும் செல்லக் கூடியதாக இருக்கும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

## நீர்வேலிப் பகுதிகளில் திருடர்கள் தொல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.23

நீர்வேலி மற்றும் கோப்பாய் பகுதிகளில் திருடர்களின் தொல்லை மீண்டும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக திருடர்களின் நடமாட்டம் இந்தப் பகுதியில் அதிகரித்திருப்பதால் இரவு வேளையில் மக்கள் பீதியுற்றுக் காணப்படுகின்றனர்.

நீர்வேலி பகுதியில் கடந்த வாரம் இரவு வீடுகளுக்குள் புகுந்த திருடர்கள், சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர் விழிப்படைந்து கூக்குரல் இட்ட நிலையில் தப்பிச் சென்றுள்ளனர்.

அதனைவிட பட்டப் பகலிலும் ஆள் நடமாட்டம் குறைந்த வீதியில் பயணிக்கும் பெண்கள் அணிந்து செல்லும் தங்க நகைகளை மோட்டார் சைக்கிள்களில் பவனி வரும் திருடர்கள் சூறையாடிச் செல்கின்றனர் என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள்களில் இவ்வாறு வரும் திருடர்களால் நண்பகல் வேளையிலும் கூட பெண்கள் வீதிகளில் பயணிப்பதற்கு அச்சமடைகின்றனர். (ம-17)

## வீதிகளின் அகலிப்புப் பணிகள் நிறைவுற்ற பின்னரே குறியீடு

யாழ்ப்பாணம், ஏப்.23

வீதிகளின் அகலிப்புப் பணிகள் நிறைவுற்று காப்பெற் போடப்பட்ட பின்னரே வீதிக்கான வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகள் அமைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

காப்பெற்போடப்பட்ட வீதிகளுக்கு வீதிக் குறியீடுகள் போடப்படாமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தற்போது வீதியின் அகலிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மறுபுறத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பகுதிக்கு காப்பெற் போடும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதியின் அகலிப்புப் பணிகள் இடம்பெற்று காப்பெற் முழுமையாகப் போடப்பட்ட பின்னரே வீதிகளுக்குரிய வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகள் போடப்படும்.

தற்போது இந்த வீதி அகலிப்பு மேற்கொள்ளப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருவதால் வாகனங்கள் தலைதெறிக்க வேகக் கட்டுப்பாட்டையும் மீறி பயணிக்கின்றன.

இப்படி அதிவேகத்தில் பயணிக்கும் வாகனங்களால் அடிக்கடி திடீர் விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

அகலிப்புப் பணிகளுடன் குறியீடுகளை இடும் பணி சாத்தியம் அற்றது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## தமது அடையாளங்களைத் தமிழர்கள் கைகழுவி விடும் சூழல் வந்துள்ளது

### முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் கவலை

யாழ்ப்பாணம், ஏப். 23

இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் அனைத்தையும் கைகழுவி விடும் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று கவலைப்பட்டார் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

''தமிழ் இனம் பல துன்பங்களுக்குள் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. எமது பாரம்பரிய சின்னங்களையும், பண்பாட்டையும், மத அடையாளங்களையும் நாமே கைகழுவி விடும் நிலை ஏற்பட்டுள்ளது. எமது அடையாளங்களை, பாரம்பரியங்களைப் பேணிக் காப்பது ஒவ்வொரு தமிழனுடையதும் கடமை'' என்றார் அவர்.

செ. நிலோத்தமனின் [illegible] அரங்கேற்றம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அந்த நிகழ்வில் அவரது உரை ஒளிநாடா மூலம் ஒளிபரப்பப்பட்டது.

முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனின் உரையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

தமிழர்களுக்கென ஒரு பாரம்பரியம் நிலை நிறுத்தப்பட வேண்டும். இதன் மூலம் நாம் தமிழர் என ஏன் அடையாளங்காட்ட வேண்டும் என்ற எண்ணப்பாடு பலருக்குத் தோன்றும். பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும். அது போல் நாம் தமிழர் என்று தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமாயின் எமது இருப்புக்களைப் பாதுகாக்க வேண்டும்.

எமது பூர்வீகங்கள் அழிந்து சின்னாபின்னமாகி விட்டன. முன்னைய காலத்தில் தமிழர்கள் வாழ்ந்ததற்கு சான்றுகள் இருந்தன. இப்போது தமிழர்கள் பலரும் வெளிநாடு சென்றுவிட்டனர். அவர்கள் தமது குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயர்களை வைப்பதற்குக் கூட மறந்து விட்டனர்.

நாம் தமிழர் என்ற இறுமாப்புடன் இருந்தால் மட்டும் போதாது. எமது சின்னங்களையும் கலைகளையும் தொலைத்து விட்டு கதைப்பதால் பயன் ஏதுமில்லை.

இன்று இசையில், நடனங்களில் ஆர்வம் உள்ளவர்கள் அரங்கேற்றத்துடன் நின்றுவிடுகின்றனர். அது தவறு. அரங்கேற்றம் என்பது, குருவிடம் சீடன் கற்றவற்றைப் பலருக்கும் அறிமுகம் செய்வது மட்டுமே. தொடர்ந்து கலைகளைக் கற்றுப் பேண வேண்டும் - என்றார். (உ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழு பரிந்துரைகள் குறித்து பங்காளிக் கட்சிகள் அறிக்கையிடும்

கொழும்பு, ஏப்.23

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப் படுத்தும் விவகாரம் தொடர்பில் அரசின் பங்காளிக் கட்சிகளிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ நிலைப்பாட்டைக் கோரியுள்ள நிலையில், அது குறித்து தத்தமது கட்சிகளின் நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்தி அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இறங்கியுள்ளன எனத் தெரியவருகின்றது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் எவ்வகையான சிபாரிசுகளைத் தாம் வரவேற்கின்றனர் என்றும், எவற்றை எதிர்க்கின்றனர் என்றும் அறிக்கை வாயிலாக ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டுவதற்கும் இந்தக் கட்சிகள் தீர்மானித்துள்ளன என்றும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, அரசின் முக்கிய பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

எனினும், அமைச்சர் விமல் வீரவன்ஸவை தலைமையாகக்கொண்ட தேசிய சுதந்திர முன்னணி, அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவை பொதுச் செயலாளராகக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளைக் கொள்கையளவில் எதிர்க்கின்றன.

மிக விரைவில் இந்த அறிக்கையை அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கையளிக்க உள்ளதாக அந்தக் கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

(ங-சி)

## விதவைகளைப் பார்த்து இந்தியக் குழு கண்ணீர்

கொழும்பு, ஏப்.23

இலங்கையில் தமிழர் பகுதியில் 45 ஆயிரம் போர் விதவைகளைப் பார்த்து கண்ணீர் விட்டோம்- என்று இலங்கைக்கு பயணம் செய்து திரும்பிய இந்திய மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே. ரங்கராஜன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஊடகவியலாளர்களுக்கு நேற்று அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது-

கடந்த 16ம் திகதி முதல் 21ம் திகதி வரை இலங்கையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தமிழ் மக்களை தனித்தனியாகவும் குழுவாகவும் சந்தித்து பேசுவதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

எந்த இடத்திலும் எங்களுக்கு தடையோ, கட்டுப்பாடுகளோ விதிக்கப்படவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களோடும் வேறு சில தமிழர் அமைப்புகளோடும் கலந்துரையாடினோம்.

அவர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் பகுதிகளுக்கு கூடுதல் அரசியல் அதிகாரம் வேண்டும் என்று எம்மிடம் வலியுறுத்தினார்கள். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மெனிக் பாம், செட்டிக்குளம் பகுதியில் தமிழ் மக்களோடு கலந்து உரையாடினோம். தமிழர் பகுதியில் போரினால் தம் கணவன் மாரை இழந்து நிற்கும் 45 ஆயிரம் விதவைகளை பார்த்தோம்.

அவர்களில் 13 ஆயிரம் பேர் 23 வயதுக்கு உட்பட்டவர்கள். இவர்களை பார்த்து நான் மட்டுமல்லாது, சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட இந்தியக் குழுவில் இருந்த அனைவரும் கண்ணீர் விட்டோம். யாழ்ப்பாணம் பகுதியில் கோவில்களில் இலங்கை இராணுவம் முகாமிட்டுள்ளது. எனவே தமது பகுதிகளில் இருந்து படைகளை வெளியேற்ற வேண்டும் என்று மக்கள் வலியுறுத்தினார்கள். நாங்களும் அதனை இலங்கை ஜனாபதியிடம் வலியுறுத்தினோம்.

தமிழர்கள் பகுதியில் இராணுவத்தினரை வெளியேற்றி விட்டு ஆட்சியாளர்கள் மூலம் சிவில் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம்.

தமிழர்களுக்கு இன்னும் ஏராளமான குறைகள் உள்ளன. கல்வி, மீள் குடியேற்றம், சமூக பொருளாதார முன்னேற்றம் என்பன மந்த கதியிலேயே உள்ளன- என்றார்.

(ங)

## படையினரின் எண்ணிக்கை குடாநாட்டில் குறைப்பு

இராணுவத்தினின் உதவியுடன் ஆசிரி வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட இளம் பெண்ணை வரவேற்கும் நிகழ்வு படையினரின் யாழ்.பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.



இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினர் மக்களின் வாழ்க்கைக்கு உதவுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாண மக்கள் கதைப்பது போன்று நாம் மக்கள் விரோதிகளல்லர். நாம் இங்கு ஆட்சி செய்யப் போவதும் இல்லை.

வசதிபடைத்த பலர் இருக்கிறார்கள். பணம் படைத்தவர்கள் நிறையவே பேசுகிறார்கள். ஆனால் கஜேந்தினி போன்றோரின் மருத்துவத்துக்கு அல்லது உயிர் காக்கும் பணிக்கு உதவக்கூடிய கொடையாளிகளைக் காண முடியவில்லை. ஒரு சிலர் மறைமுகமாக உதவுகிறார்கள். கிருபானந்தன் இதற்கு உதவியுள்ளார்.

வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த கஜேந்தினியைக் காப்பாற்ற உதவியவர்கள் நன்றிக்குரியவர்கள். ஆசிரி வைத்தியக் குழுவினர், சத்திர சிகிச்சைக்கான கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளாது இலவசமாக சிகிச்சை வழங்கிய வைத்திய கலாநிதி குப்தா ஆகியவர்களே இந்தப் பிள்ளையின் உயிரைக் காத்தவர்கள். இவற்றையெல்லாம் முன்னின்று நடத்த உதவிய யாழ்.படை அதிகாரி விஜய குணதிலகவையும் பாராட்டுகின்றேன். அவரின் முயற்சி, உழைப்பு என்பன இதில் மிக முக்கியமானது.

இராணுவம் யாழ்ப்பாண மக்களுக்கு உத்வுகிறது என்பதற்கு இந்த ஒரு சம்பவமே நல்லதொரு எடுத்துக்காட்டு. இங்குள்ள மக்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டும். அதற்கான உதவிகளை நாங்கள் செய்யத் தயாராகவே உள்ளோம். என்றுமே மக்களுக்கு உதவியானவர்களாகவே இருக்கின்றோம் - என்றார்.

ஆசிரி இருதய சத்திர சிகிச்சை நிபுணர் குப்தா, இருதய சிகிச்சைப் பிரிவு இயக்குநர் அனில் பெரேரா, யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோரும் நிகழ்வில் பேசினார்கள். (உ-7)

## போர்க் குற்றங்கள் பற்றி வாய்திறக்காத இந்தியக்குழு

சுதர்சன நாச்சியப்பன், மாணிக்தாகூர், கிருஸ்ணசாமி ஆகியோரிடம் செய்தியாளர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர்கள் எவரும் நேரடியாகப் பதில் அளிக்காமல் நழுவிக் கொண்டனர்.

தொடர்ந்து, செய்தியாளர்கள் அதே கேள்வியைக் கேட்டபோது, அவர்கள் பாதியிலேயே செய்தியாளர் சந்திப்பை முடித்துக் கொண்டு எழுந்து சென்று விட்டனர். (ங-சி)

## பள்ளிவாசல் இடிப்பு; அரபு நாடுகள் கொதிப்பு

வருகின்றது.

இதேவேளை, தம்புள்ளை ஹைரியா ஜும்ஆ பள்ளிவாசல் தாக்கப்பட்டமைக்கு இலங்கையிலுள்ள இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள் கடும் கண்டனமும் விசனமும் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் முஸ்லிம் அரசியல் பிரமுகர்களைத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டே தமது கண்டனத்தை இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

முஸ்லிம்களின் புனித இடமான பள்ளிவாசல் தாக்கப்படுவது அபூர்வமான நிகழ்வென சுட்டிக்காட்டியிருக்கும் தூதுவர்கள், இலங்கையில் இவ்வாறான - இதையொத்த சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவது தம்மைக் கவலையில் ஆழ்த்தியுள்ளன என்று தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம்களின் கலாசார விழுமியங்கள், இஸ்லாமியக் கடமைகளைச் சரிவர மேற்கொள்வதில் இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும், இது ஒரு ஆரோக்கியமான செயற்பாடல்ல என்றும் அத்தூதுவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தம்புள்ளை ஜும்ஆ பள்ளிவாசல் மீதான அச்சுறுத்தல் தொடர்பில் முற்கூட்டியே அறிவிக்கப்பட்டும் உரிய பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமையானது பெரும் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன என்றும் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஈரானியத் தூதுவர் அவசர கடிதமொன்றை பிரதமர் டி.எம். ஜயரத்னவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், இலங்கை முஸ்லிம்களின் கலாசாரம் மற்றும் வழிபாட்டு விழுமியங்களுக்குத் தனித்துவமும் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டுமென ஈரான் தூதர் கேட்டுக் கொண்டுள்ளார்.

முஸ்லிம்களின் கலாசார, வணக்க வழிபாடுகள் தனித்துவம் மிக்கவை. இதனை உறுதிசெய்து பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வது அரசின் பொறுப்பும் கடமையுமாகும் என்றும் அக்கடிதத்தில் தூதர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஈரான் தூதுவரால் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள இக்கடிதத்தின் பகுதிகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், ஆளுநர் அலவி மௌலானா மற்றும் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ங-சி)

## மனித உரிமைகளில் கவனம் செலுத்தும் தொண்டு நிறுவனங்கள் மீது விசாரணை

றுள்ள தகவல்களை அடுத்தே அரசு மேற்படி தீர்மானம் மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கையானது சட்டவிரோதமானது. இதுவரையில் நமது நாட்டில் 967 அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் 90 சதவீதமான நிறுவனங்கள் தமது நோக்கங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் அப்பால் செயற்பட்டுவருகின்றன.

அத்தோடு, இவை வெளிநாட்டவர்களின் கொள்கைகளுக்கு அடிபணிந்து செயற்படுகின்றன எனவும் அதற்கான சாட்சிகள் தம்வசம் உள்ளன எனவும் அரசு கூறியுள்ளது.

## நகரசபைத் தலைவரின் வீட்டில் தாக்குதல்

அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது.

நான்கு மோட்டார் சைக்கிளில் பெற்றோல், கற்கள், பொல்லு ஆகியவற்றுடன் வந்த எட்டுப் பேர் வெளிக் கதவுக்கு மேலாக ஏறி உள் நுழைந்துள்ளனர்.

அங்கிருந்த நாயைத் தாக்கி விட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை உடைத்துவிட்டு அங்கிருந்து மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் ஊற்றி தீயிட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டனர்.

சத்தம் கேட்டு தலைவரும் அவரது குடும்பத்தினரும் கதவைத் திறந்து வந்து பார்த்தபோது குறித்த நபர்கள் கொண்டு வந்த போத்தல், கற்கள், பெற்றோல் போன்றவற்றை அவ்விடத்தில் போட்டுவிட்டு தப்பி ஓடியிருந்தமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக நகர சபை தலைவரும் உறுப்பினர் [illegible] செய் [illegible] பகைமை காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று நகரசபைத் தலைவர் சந்தேகம் தெரிவித்துள்ளார். (ம-9)

## இரு ஆண்டுகளுக்குள் இரண்டாகும் இலங்கை

யாக முன்வைக்கக் கோரி யும் நாம் நாடெங்கிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றோம்.

கொழும்பில் மாத்திரம் குவிந்து கிடக்கும் அதி காரம், மாவட்ட மட்டத்தில் பகிரப்படவேண்டும். வடக்கு, கிழக்கிற்குத் தேவையான அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

ஜெனிவாத் தீர்மானத்திற்கமைய நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக் கையை நடைமுறைப் படுத்த முடியாவிட்டால், அரசு அந்தப் பணியை எம்மிடம் ஒப்படைத்து விட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

அரசியல் தீர்வை வழங்கினால் விமல் வீரவன்ஸ மற்றும் குணதாஸ அமரசேகர ஆகியோர் தன்னை ஆட்சியிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்று ஜனாதிபதி அஞ்சுகிறார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நிச்சயம் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜெனிவாவில் அடித்துக்கூறிவிட்டு மீண்டும் சர்வதேசத்தையும், நாட்டு மக்களையும் ஜனாதிபதி ஏமாற்றிக்கொண்டிக்கின்றார் - என்றார்.

ருஹுணு மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் அருண சொய்சா கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாட்டைப் பார்க்கும்போது இரண்டு அல்லது மூன்று வருடங்களில் இந்த நாடு இரண்டாகப் பிரியும் அபாயம் உள்ளது. அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று சர்வதேசத்திடம் கூறிவிட்டு அதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கொடுத்த வாக்குறுதியை அப்படியே கிடப்பில் போடும் செயலில்தான் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

ஜெனிவாத் தீர்மானத்தை தொடர்ந்து சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. ஒரு கட்டத்தில் பொறுமை இழக்கும் சர்வதேசம் எமது நாட்டுக்குள் ஐ.நா. அமைதிப் படையை அனுப்பி வடக்கு, கிழக்கு மக்களின் அபிலாஷைகளை அறிவதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்தலாம். அப்போது அந்த மக்கள் வடக்கு, கிழக்கைப் பிரித்துத் தருமாறு கூறுவர். இந்த நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் அரசு அரசியல் தீர்வை வழங்கவேண்டும் - என்றார். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பதின்மூன்று + படும் பாடு!

அரசமைப்புச் சட்டத்திற்கான பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று, இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக மீண்டும் ஒரு தடவை திருவாய் மலர்ந்துள்ளார் இலங்கையின் அதிஉத்தம ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இப்போதும், இந்தியாவிடமே மீண்டும் இந்த வாக்குறுதியை அள்ளி வீசியுள்ளார் அவர். மூன்று மாதங்களுக்கு முன்னர், ஜனவரி நடுப்பகுதியில், இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் தெரிவித்த அதே உறுதிமொழியையே, அட்சரம் தவறாமல் கடந்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்த அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடமும் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி.

கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக, கொழும்புக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் விஜயம் செய்திருந்தார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையில் அன்னியோன்னியமான, பிசிறற்ற நல்லுறவு மேலோங்கி இருந்தது.

இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் செல்ல வேண்டும் என்ற தமிழ்த் தரப்பின் நிலைப்பாடு, கோரிக்கை குறித்துத் தாம் வலியுறுத்திய போது, ஜனாதிபதி அதற்கு இணங்கியதாக கிருஷ்ணா தகவல் வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி தம்மிடம் அது குறித்து உறுதி அளித்ததாக அமைச்சர் ஊடகவியலாளர் மாநாட்டில் மிகத் தெளிவாகத் தெரிவித்துப் போனார்.

ஆனால் சில நாள்களுக்குப் பின்னர், இந்தியாவைப் பார்த்து "உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே" என்ற பேச்சு வழக்கு முறையில் பதின்மூன்று + என ஒன்றில்லை என்று கையை விரித்தார் எமது நாட்டு ஜனாதிபதி.

அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதில் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை விருப்பமே எனது விருப்பம். பதின்மூன்று + என்ற எனது நிலைப்பாடு புதிய தீர்மானம் அல்ல. இதனை அன்றிலிருந்து கூறிவருகிறேன் - என்று பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பு ஒன்றின்போதும் (ஜனவரி இறுதியில்) ஜனாதிபதி திட்டவட்டமற்ற நழுவல் வழுவல் பாணியில், இது விடயத்தில் தாம் விருப்பமற்றவர் என்று காட்டிக்கொண்டார்.

நான் தனியே நின்று தீர்வு எதனையும் வழங்க முடியாது. அவ்வாறு செய்தால் அதற்கு நிச்சயம் எதிர்ப்பு வரும். ஒருவர் ஒன்றைச் செய்ய முற்பட்டால், எல்லோரும் அதனை எதிர்ப்பார்கள். அதுவே வரலாறு. 13 "பிளசோ", 13 "மைனசோ" எது வேண்டுமானாலும் என்னால் தனித்துத் தீர்மானம் மேற்கொள்ள முடியாது. இது தேசியப் பிரச்சினை. எனது தனிப்பட்ட பிரச்சினை அல்ல - என்றும் தனது நிலைப்பாட்டை மறைபொருளில் பறைசாற்றினார். மொத்தத்தில், 13+ விடயத்தில் "பல்டி" அடித்தார்.

இப்போது, மூன்று மாதங்களின் பின், மனது மாறியவர் போன்று, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வு காண்பேன் - என்று சுஷ்மா குழுவினரிடம் உறுதி அளித்திருக்கிறார். இந்த வாக்குறுதியையேனும் அர்த்தபுஷ்டியுடன் செயலாக்க அவர் முனைவாரா அல்லது இந்தியாவையும் ஏனைய நாடுகளையும் நம்ப வைத்துக்கொண்டே, காலத்தை வாங்கும் புதிய உத்தியாகவே இதனை கைக்கொள்கிறாரோ என்று கருதவும் இடமுண்டு.

அறுபது ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற விவகாரம், இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் ஊடாக சுமாராகவேனும் அனைத்துலக மயப்பட்டுவிட்டது என்ற புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு ஒன்று அவசியம் என்பதனை ஜெனிவாத் தீர்மானமும் விசாலமாக விதந்துரைக்கிறது.

இத்தகைய அழுத்தங்களை அசட்டை செய்தால், அல்லது காலம் வாங்கிக் கடத்த முயன்றால், அனைத்துலக மட்டத்தில் இலங்கை பல பின்னடைவுகளை எதிர்கொள்ள நேரிடலாம் என்ற அச்சம் அரசிடம் உள்ளூர உண்டு.

இனப்பிரச்சினைக்கு உகந்த உரிய தீர்வை முன்வைப்பதற்கு இலங்கை அரசு பின்னடித்தால், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வாசல்தேடி வரக்கூடும். இது தொடர்பிலும் அரசுக்கு உள்ளார்ந்த பயம் உண்டு என்பது நிராகரிக்கக் கூடியதோ அன்றித் தட்டிக்கழிக்கக் கூடியதோ அல்ல.

இவற்றை நெருங்கவிடாது தடுப்பதற்கு, பதின்மூன்றுக்கும் கூடுதலாகச் செய்வதற்குத் தயார் என்ற மந்திரம் தடுத்துவிடும் என்ற நம்பிக்கையிலேயே, அதனை முன்னெடுத்து உச்சாடனம் செய்யும் தந்திரத்தையும் ஜனாதிபதி இப்போது கையில் எடுத்திருக்கக் கூடும். விளைவில்லாமல் வினை இல்லையே! எதற்கும் முன்னோட்டமாக முடிவு செய்யாமல் பொறுத்திருப்போமே...

# வாக்குப் பெட்டியை நிரப்பும் அரசியலுக்கு திரும்புகின்றனவா தமிழ்த் தலைமைகள்?

### புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 23

தமிழ்த் தலைமைகள் எந்த விதமான சுய விமர்சனமோ சுய அரசியல் மதிப்பீடுகளோ இன்றி வாக்குப் பெட்டி நிரப்பும் அரசியலுக்கு திருப்பிச் செல்ல நினைக்கிறார்கள்.

- இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் குற்றம் சாட்டினார்.

யாழ். நகரிலுள்ள கட்சியின் வடபிராந்திய பணிமனையில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரையான அரசியல் அனுபவங்கள் வரலாற்றுப் பட்டறிவுகள் மூலம் சமகாலத்துக்கான தூர நோக்குடைய கொள்கையும் அதற்கான தந்திரோபாயங்களையும் வகுத்து முன்னெடுக்க முடியாது.

தமது நம்பிக்கை முழுவதையும் இந்தியாவிடமும் அமெரிக்க மேற்குலகத்திடமும் எதிர்பார்த்து நிற்கும் கையறு நிலையில் காணப்படுகின்றனர் தமிழ்த் தலைமைகள்.

இந்தியாவையும் மேற்கு உலகத்தையும் நம்பி இருப்பது தமிழ் மக்களுக்கு மேன்மேலும் நெருக்கடிகளையும் அழிவுகளையுமே தேடித்தரவல்லது.

பரந்த அடிப்படையிலும் தூர நோக்குடனும் யதார்த்த பூர்வமானதுமான குறைந்த பட்ச முற்போக்கான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அத்துடன் நாட்டின் இடது சாரி ஜனநாயக சக்திகளுடன் இணைந்து நிற்கும் ஒரு பொது வேலைத் திட்டத்துக்கு வரவேண்டும்.

அதுவே தமிழ்த் தேசிய இனத்தின் மீது அக்கறை கொண்ட சக்திகளின் இன்றுள்ள கடமையாகும்.

இல்லையேல் பழைய பாதையில் சென்று அழிந்து கொண்ட கொள்கைகளைத் தூக்கி நிற்பதாகவே இருக்கும். இதனை இளம் தலைமுறையினர் அறிவியல் பூர்வமாகவும் அறிவு ரீதியாகவும் சிந்தித்து முன்னெடுக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடி, தீர்க்கப்படாமல் உள்ள தேசிய இனப் பிரச்சினை. இவை இரண்டாலும் சிறுபான்மை இன மக்கள் ஒடுக்கப்படுகின்றனர்.

இவற்றின் மத்தியில் கூறப்படும் சுதந்திரம் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு தனிநபர் சர்வதிகாரமே கோலோச்சுவதைக் காணமுடிகிறது. இதைப் பற்றி மஹிந்த அரசு கவலைப்படுவதாகவோ உரிய தீர்வுகளை கொண்டு வர முயற்சிப்பதாகவோ இல்லை. இங்கே குடும்ப சர்வதிகாரமே மேலோங்கி அதிகாரத்தின் உச்சமாக காணப்படுகிறது.

இவற்றுக்கு எதிராக கட்சிகள், தொழில் சங்கங்கள் மனித உரிமை அமைப்புகள் சில ஊடகங்கள் தத்தமது எல்லைக்குள்ளேநின்றவாறு எதிர்ப்புகள் கண்டனங்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டு வந்த போதும் அவை ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் இணைக்கப்படவில்லை.

இந்தப் பலவீனத்தை ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசு தனக்குச் சாதகமானதாக பயன்படுத்தி வருகிறது. தேசிய இனப்பிரச் சினைக்குரிய தீர்வை கொண்டு வர விடாப் பிடியாக மறுத்து தனது பேரினவாத நிலைப்பாட்டை முன்னெடுத்தும் வருகிறது. அதன் மூலம் ஜெனிவாத் தீர்மானத்தை தானே வரவழைத்து தன் தலையில் தன் கைகளாலே மண்ணைப் போட்டு நிற்கிறது.

தமிழ்த் தலைமைகள் இன ஒடுக்க முறையில் இருந்து விடுபடுவதற்கு சரியானதும் யாதார்த்த பூர்வமான கொள்கைகளுடனும் தந்தி ரோபாயங்களுடனும் முன் வைக்க வேண்டும் அதைவிடுத்து பேரின வாதத்துக்குப் பதில் கூறும் தமிழ் தேசியமாகவே முன்னெடுத்து வந்துள்ளன.- என்று அவர் மேலும் கூறினார்.

கட்சியின் மே தினக் கூட்டங்கள் யாழ்ப்பாணம், ஹட்டன், கொழும்பு, வவுனியா ஆகிய நான்கு இடங்களில் நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

பொது மண்டபங்களை அரசியல் கூட்டங்களுக்காக வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எமது மேதினக் கூட்டத்தை யாழ். நகரிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் நடத்த வேண்டிய நிலைமை உள்ளது.- என்று மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் போது கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன், அரசியல் உறுப்பினர் சோ. தேவராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ம-3)

# வடக்கின் வளங்களை சுரண்டவே அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஏப்.23

அபிவிருத்தி என்ற பெயரில் வடக்கிலுள்ள வீதிகள் அகலிப்புச் செய்வதும் செப்பனிடுவதும் வடக்கின் வளங்களைச் சுரண்டுவதற்கே.

அத்துடன் ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதும் நோக்கமாக உள்ளது எனக் குற்றம் சாட்டினார் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தொடக்கம் மஹிந்த அரசினர்வரை அனைவரையும் மேற்குலக சக்திகளே இயக்கி வருகின்றன.

மேற்குலகின் நிகழ்ச்சி நிரலிலே இயங்கும் அரசுகளிடம் தூர நோக்குடைய நீண்ட கால பொருளாதார முறை இருக்காது.

இதன் காரணமாக எமது பகுதி விவசாயம், மீன்பிடி, உள்ளிட்ட உள்ளூர் உற்பத்தித் துறைகள் வீழ்ச்சி கண்டுள்ளன.

இந்த நிலையில் வடக்கிலுள்ள வளங்களைச் சுரண்டி உள்ளூர் பொருளாதாரத்தைச் சிதைப்பதுக்கும் மேற்குலக சக்திகளின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதுக்கும் மஹிந்த அரசு முன்னின்று உழைக்கிறது.

அதற்காகவே அபிவிருத்தி என்ற பெயரில் வடக்கில் வீதிகள் அகலிக்கவும் செப்பனிடவும் மும்முரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதை விடுத்து வடக்கின் வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதுக்கு அல்ல. - என்றார்.

(ம-3)

# எவரெஸ்ட் சிகரத்தில் ஆய்வகம்

காத்மண்டு, ஏப். 23

இமயமலை மீதுள்ள எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஆய்வகம் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் நிறுவியுள்ளனர்.

மனிதர்களை மிக உயர்ந்த பகுதிகள் எந்த விதத்தில் பாதிக்கின்றன என்பது குறித்து இந்த ஆய்வகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இது குறித்து மின்னசோட்டாவிலுள்ள மேயோ கிளினிக்கைச் சேர்ந்த குழு "மிக உயர்ந்த பகுதியில் மனித உடற்கூறுகள் இயங்கும் விதம் குறித்து ஆய்வு செய்யவுள்ளோம். இதய நோய் மற்றும் வேறு சில பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்த ஆராய்ச்சி மூலம் உதவமுடியும்.- என்றது.

(ம)

# யாழ்ப்பாணத்துக்கு யாழ்தேவி அடுத்த ஆண்டு சேவைக்கு வரும்

### போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

யாழ்தேவி ரயிலை அடுத்த ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

களுத்துறை தெற்கிலிருந்து மாத்தளை வரையிலான நவீனமயப்படுத்தப்பட்ட ரயில் மார்க்கத்தை மக்கள் போக்குவரத்துக்குத் திறந்து வைத்தார். பின்னர் அளுத்கமை ரயில் நிலையத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் புதையிரத மார்க்கம் மூன்று கட்டங்களாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முழுமையான பணிகள் 13 மாதங்களுக்கும் குறைவான காலத்தில் மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியில் முழுமையான அக்கறை செலுத்தி அர்ப்பணிப்புடன் செயலாற்றிய இந்திய நிறுவனத்துக்கு நன்றி கூறுகிறேன்.

இந்த மார்க்கத்தில் உள்ள அனைத்து ரயில் கடவைகளுக்கும் தடைகள் நிறுவப்பட்டதன் பின்னர் மணிக்கு நூறு மீற்றர் வேகத்தில் இந்த மார்க்கத்தில் ரயில் சேவையை நடத்த எதிர்பார்க்கிறோம்.

இந்த மார்க்கத்தில் ரயில் சமிக்ஞை தொகுதியில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவுள்ளன.

மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரையிலும், ஓமந்தையில் இருந்து பளை வரையிலும், பளையில் இருந்து காங்கேசன்துறை வரையிலும் ரயில் சேவையை நடத்துவதற்கு எதிர்பார்ப்பு நிலவுகிறது.- என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை வந்திருந்த இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் உள்ளிட்ட இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

(ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இத்தாவில், வேம்பொடுகேணியில் 15 ஆம் திகதி மீளக்குடியமர்வு

**போர் மோசமாக நடைபெற்ற பகுதியாகவும் அதிகளவு வெடி பொருள்கள் நிறைந்த பகுதியாகவும் விளங்கும் இந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்த நிலையில் மீளக்குடியமர்வு இடம்பெறுவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம், ஏப்.23

பளைப் பகுதியின் இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய இரண்டு கிராம சேவகர் பிரிவிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்படவுள்ளனர் என்று கடந்த வெள்ளிக்கிழமை முகமாலையில் இடம்பெற்ற மீளக்குடியமர்வு பற்றிய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் தங்களைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் இத்தாவில், வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களின் மீளக்குடியமர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கூட்டமொன்று முகமாலையில் உள்ள ஹலோரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் அலுவலகத்தின் இணைப்பு அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

போர் மோசமாக நடைபெற்ற பகுதியாகவும் அதிகளவு வெடிபொருள்கள் நிறைந்த பகுதியாகவும் விளங்கும் இந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்த நிலையில் இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்வு இடம்பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் முகமாலைப் பகுதியிலும் விரைவில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி அடையும் பட்சத்தில் அங்கும் அடுத்த கட்ட மீளக்குடியமர்வு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், 551, 552 ஆகிய படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(க-15-06-09)

# நடைபாதை வியாபாரிகளுக்கு புதிய அங்காடித் தொகுதி

### வவுனியா நகர சபையினர் நடவடிக்கை

**ஒவ்வொன்றும் சுமார் 7 லட்சம் பெறுமதியான மூன்று கொட்டகைகள் அமைக்கப்பட்டுச் சிமெந்து இடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

வவுனியா, ஏப்.23

வவுனியா நகர நடைபாதை அங்காடி வியாபாரிகளுக்கென நகர சபையால் அங்காடித் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா நகர வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளினால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டதாலும், இதனால் விபத்துக்கள் இடம்பெறக் கூடிய சூழ்நிலை காணப்பட்டதாலும் நீதிமன்ற உத்தரவை அடுத்து வவுனியா நகர சபையால் நடைபாதை வியாபாரிகள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

பின்னர் வியாபாரிகளின் ஜீவனோபாயத்தைக் கருத்தில் கொண்டு புதுவருட வியாபாரத்துக்கென நகர சபைக்கு முன்பாகவுள்ள வீதியில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரிக்கு முன்பாகவும், வவுனியா நகர சபைக்கு அண்மையிலும் நகரத்தினாலான அங்காடித் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொன்றும் சுமார் 7 லட்சம் பெறுமதியான மூன்று கொட்டகைகள் அமைக்கப்பட்டுச் சிமெந்து இடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பணிகள் நிறைவடைந்ததும் வவுனியா மாவட்டத்தை நிரந்தர முகவரியாகக் கொண்ட நடைபாதை வியாபாரிகளுக்குக் கடைகள் பகிர்ந்து வழங்கப் படவுள்ளன.

இந்தப் பணிகள் தற்போது நகர சபை உறுப்பினர்களின் மேற்பார்வையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-400)

### சுய தொழில் உதவிகள்

வவுனியா.ஏப்.23

வவுனியா மாவட்டத்தில் சமுர்த்தி அதிகார சபையினால் வாழ்வாதார ஊக்குவிப்புக்கான சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

செட்டிகுளம், வவுனியா வடக்கு, வவுனியா, வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கே இந்த வாழ்வாதாரத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு தலா 10 கோழிக் குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டதோடு சமையல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (க-400)

# குடிதண்ணீரின்றித் தவிக்கும் தட்டுவன்கொட்டி மக்கள்

### வாகனம் பழுதடைந்ததால் விநியோகம் இடை நிறுத்தம்

கிளிநொச்சி,ஏப்.23

கரைச்சி பிரதேசத்தில் தட்டுவன்கொட்டிக் கிராமத்துக்கு வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் கடந்த சில தினங்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் சுமார் நூறு குடும்பங்களைச் சேர்ந்த முந்நூறுக்கும் அதிகமான மக்கள் குடிதண்ணீருக்குத் திண்டாடுவதுடன் அதனைத் தேடி மைல் கணக்கில் அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் தட்டுவன் கொட்டிக் கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வரும் இவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமென்று உறுதியளிக்கப்பட்டிருந்தது.

உவர் நிலமான இந்தப் பிரதேசத்தில் நல்ல தண்ணீர்க் கிணறு இல்லாததனால் கரைச்சிப் பிரதேச சபையினால் பௌசர் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. இவர்கள் சிக்கனமாகக் குடிதண்ணீரைப் பாவித்து வந்தனர்.

பிரதேச சபையினால் மட்டுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் கடந்த சில தினங்களாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். இதனைத் தேடி அலையும் இவர்கள் சுமார் 10 மைல்களுக்குச் சென்று வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இந்த நிலை குறித்து கரைச்சிப் பிரதேச சபை அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தியபோது குடிதண்ணீர் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் வாகனம் பழுதடைந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

(க-115)




மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள வங்காலை சரணாலயத்தின் பெயர்ப் பலகை 'தமிழ்க் கொலை'களுடன் காணப்படுகின்றது. (12)

# வவுனியா பம்பைமடுவில் புற்றுநோய் சிகிச்சை நிலையம்

வவுனியா, ஏப்.23

வவுனியா மாவட்டப் புற்றுநோயாளர்களின் நன்மை கருதி புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று பம்பைமடுவில் அமைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பலர் இங்கு போதிய மருத்துவ வசதிகள் இன்மையால் கொழும்பு, யாழ்ப்பாணம், மகரகம போன்ற பகுதிகளுக்குச் சென்றே தமது சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் நோக்கில் பம்பை மடுப் பகுதியில் இப்புற்று நோய்ச் சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள இந்தச் சிகிச்சை நிலையத்துக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாக வவுனியா பிரதேச செயலர் க.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

(க-400)

# பிரதேச சபை உறுப்பினரின் செயலால் மன்னார் பிரதேச சபை முடங்கியது

### அவரின் அநாகரிக நடவடிக்கையைக் கண்டித்து பணியாளர்கள் 'போர்க்கொடி'

மன்னார், ஏப்.23

மன்னார் பிரதேசசபைச் செயலாளரை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் அவதூறாகப் பேசியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், குறித்த சம்பவத்தைக் கண்டித்தும் சபையின் பணியாளர்களும், அலுவலர்களும் கடந்த வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

மன்னார்ப் பிரதேச சபையின் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஏ.எம்.முகமட் றிஸாப்தீன் என்பவர் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகளை மன்னார் பிரதேச சபையிடம் கேட்டுள்ளார். இந்த நிலையில் செயலர் இல்லாததன் காரணத்தால் குறித்த அறிக்கைகளின் பிரதிகள் குறித்த பிரதேச சபை உறுப்பினருக்கு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த உறுப்பினர் மன்னார் பிரதேச சபையின் அலுவலர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு செயலருக்கு எதிராகத் தேவையற்ற அவதூறான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவங்களைக் கண்டித்து மன்னார்ப் பிரதேச சபையின் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேச சபையின் பணியாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதன் போது பணியாளர்கள் சுலோகங்களை ஏந்தியவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பின்னர் சபையின் ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் 5 பேர் புறக்கணிப்பில் ஈடுபட்ட பணியாளர்களுடன் பேச்சு நடத்தினர்.

அத்துடன் பிரதேச சபை உப [illegible] பிரதேச சபையின் உறுப்பினர்கள் 5 பேருடன் அவசர கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெற்றது.

பின்னர் குறித்த பிரதேச சபை உறுப்பினர் அழைக்கப்பட்டுப் பணியாளர்களுடன் பேச்சு நடத்தப்பட்டதோடு இனி வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாது எனவும் உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதன் பின்னர் பணிப்புறக் கணிப்பு கைவிடப்பட்டது. காலை 8 மணிமுதல் பி.ப. 1 மணிவரை பணிப் புறக்கணிப்பு [illegible] மக்கள் பல் [illegible] அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். (க-12)

# முன்னாள் போராளிகளுக்கு சுய தொழில் கடன் உதவிகள்

வவுனியா, ஏப்.23

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த முன்னாள் போராளிகளில் ஒரு தொகுதியினருக்குப் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கடனை வழங்குவதற்கென தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகத் தெரிவு புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் தலைமையில் இடம் பெறும்.

இதற்கான நேர்முகத் தேர்வுகளுக்கான கடிதங்கள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கு உதவிகள் எதுவும் வழங்கப்படாமையால் அவர்கள் மிகப் பெரும் வாழ்வாதார நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகச் செய்திகள் வெளிவந்த நிலையில் இந்தச் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய இரவுத் திருவிழாக்களில் தங்கம் அணிவதைத் தவிருங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.23

ஆலயங்களின் இரவு நேர திருவிழாக்களில் கலந்து கொள்ளும் மக்கள் தமது தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்க்க வேண்டும் என்று ஆலயங்களைச் சேர்ந்த பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். தற்போது குடாநாட்டின் ஆலயங்களில் வருடாந்த திருவிழாக்கள் ஆரம்பமாகியுள்ளன.

சித்திரைப் புத்தாண்டு பிறந்த பின்னர் வரும் முகூர்த்த தினங்களில் ஆலயங்களில் வருடாந்த திருவிழாக்கள் கும்பாபிஷேகங்கள் மற்றும் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்தத் திருவிழாக்களில் திருடர்களும் தமது கைவரிசையைக் காட்டலாம் என்ற அச்ச நிலையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஆலயங்களில் ஒலிபெருக்கி மூலம் இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான ஆலயங்களில் இரவு திருவிழா நிறைவு பெறுவதற்கு இரவு 10 மணிவரை செல்கிறது. கடந்த வருடத்தில் கூட அனேகமான ஆலயங்களில் இரவுத் திருவிழாவில் திருடர் கோஷ்டி தமது கைவரிசையைக் காட்டியிருந்தது.

இதனை அடுத்து ஆலயங்களில் இரவு திருவிழாவில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அதனைவிட பொலிஸாரின் ரோந்துப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

இதேபோன்ற பாதுகாப்பு நடவடிக்கையையும் ஆலயங்கள் இம்முறையும் பின்பற்றவுள்ளன என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். அதனைவிட ஆலய சுற்றாடல் பகுதியில் மின்சார விளக்குகளை அதிகளவில் அமைப்பதற்கும் நடவடிக்கைகளை பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# பளை நகரப் பகுதியில் எரிபொருள் நிலையம்

பளை, ஏப். 23

பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பளை நகரப் பகுதியில் நவீன எரிபொருள் நிலையம் 15 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

சங்கத்தின் முன்னைய எரிபொருள் நிலையக் காணியில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வேலைக்கான ஆரம்ப வேலைக்கென பளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 7.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. எரிபொருள் அமைச்சால் மிகுதி தொகையான 7.5 மில்லியன் ரூபா வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது தற்காலிகமாக இயங்கும் சங்கத்தின் எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் தவிர்ந்த ஏனைய எரிபொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு தெரிவித்தார். (ம-9)

# விடுமுறை முடிந்து வந்தனர் தொழிலாளர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ். குடாநாட்டில் பிரதான வீதிகளின் வீதி புனரமைப்பு மற்றும் அகலிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் சித்திரைப் புத்தாண்டு விடுமுறையில் சென்றிருந்த நிலையில் பணிகள் யாவும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இடம் பெற்று வருகின்றன.

சித்திரைப் புத்தாண்டுக்கான வீதிப் புனரமைப்பில் ஈடுபட்ட தொழிலாளர்களும் விடுமுறை வழங்கியதால் இந்தப் புனரமைப்புப் பணிகள் கடந்த ஒரு வார காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது இந்த வீதிகளின் புனரமைப்பு மற்றும் அகலிப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதி, கே.கே.எஸ். வீதி, மானிப்பாய், கைதடி வீதி, ஏ-9 பிரதான வீதி போன்ற வீதிகளின் அகலிப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-17)



யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவ சங்கத்தின் 'நீதம்' ஆய்விதழ் வெளியீட்டு விழாவும் ஆண்டுவிழாவும் கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வின் போது மேடையில் விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர். (ம-4)

# சாரதிகளின் ஓட்டத்தால் நடத்துநரிடையே முறுகல்

## பஸ் நிலையத்தில் தாக்குதல்

தென்மராட்சி, ஏப்.23

மீசாலையிலிருந்து சாவகச்சேரிவரை முந்திச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் நடத்துநரை மினிபஸ் நடத்துநர் கம்பியால் தாக்கினார் என்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இ.போ.ச. பஸ்ஸின் நடத்துநர் ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவத்தை அடுத்துக் குறித்த இடத்துக்கு வந்த பொலிஸார் பஸ்ஸையும் மினிபஸ்ஸையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

தொடர்ந்தும் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# நகைக்கடைத் தராசுகளுக்கும் நாளை தொடக்கம் முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ். மாவட்டத்தில் உள்ள நகைக் கடைகளில் உள்ள தராசு படிகளுக்கு நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூன்று நாள்களுக்கு முத்திரையிடப்படவுள்ளன.

யாழ்.செயலக நிறுத்தல் அளத்தல் பொறுப்பதிகாரி எஸ்.கிருஷ்ணதாசன் இந்தத் தகவலைக் கூறினார்.

செயலக நிறுத்தல் அளத்தல் பிரிவில் வைத்து இந்தத் தங்க நிறுத்தல் கருவிகளுக்கும் தராசுப் படிகளுக்கும் இந்த ஆண்டுக்கான சீல் வைக்கப்படவுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரைக்கும் இந்த தராசு படிகளுக்கு முத்திரையிடப்படவுள்ளன என்றும் சகல நகை வியாபார நிலையங்களும் தமது தங்க பவுண் நிறுக்கும் தராசுகள், படிகள் என்பனவற்றை எடுத்து வந்து சீல் வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-17)

# யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் நவீன வசதி

## துர்நாற்றத்தை அகற்ற புதிய வழி

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் சடலங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது அதில் இருந்து வீசும் துர்நாற்றத்தை காற்று வசதியுடன் வானை நோக்கி விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரேத அறையில் சடலங்களை திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது அதில் இருந்து துர்நாற்றம் வீசுவதால் இந்தப் பகுதியின் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகிறது. அத்துடன் அந்தப் பகுதிகளைச் சேர்ந்தோரும் சிரமம் அடைய வேண்டியுள்ளது.

இதனைவிட இந்த துர்நாற்றத்தால் ஏனையோர் தொற்றுநோய்களுக்கும் ஆளாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இதற்கான மின்விசிறி மூலம் துர்நாற்றத்தை குழாய் மூலம் வானை நோக்கி விடுவதற்கும் வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# நிலத்தடிக் குழாய் மூலம் 128 குடும்பங்களுக்கு தண்ணீர்

யாழ்ப்பாணம், ஏப்.23

புத்தூர், வாதரவத்தைப் பிரதேசத்தில் உள்ள 128 குடும்பங்களுக்கு நிலத்தடி குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நிலாவரை பகுதியில் இதற்கென அமைக்கப்பட்ட நீர்மட்டம் குறைவாக உள்ள குழாய் கிணறு மூலம் வாதாரவத்தைக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வாதாரவத்தையில் இதற்கென அமைக்கப்பட்ட தாங்கியில் இந்தக் குடிதண்ணீர் நிரப்பப்பட்டுப் பின்னர் அதன் ஊடாக இந்த நிலத்தடி குழாய்கள் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இந்த குடிதண்ணீருக்கு விண்ணப்பிக்கும் மக்களுக்கு இதற்கென விசேட மீற்றர் பம்பியுடன் குழாய் போடப்பட்டு விநியோகம் இடம் பெற்று வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# தீர்ந்தது தார்க் கலவை

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். குடாநாட்டின் வீதிகளில் ஏற்பட்ட சேதங்களை அடைப்பதற்கான தார்க் கலவைக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தார்க் கலவை முடிவுற்றுள்ளதால் வீதிகளில் ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாகச் சீர்செய்யும் பணிகள் தடைப்பட்டுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் இந்தத் தார்க் கலவை இந்த வாரத்தில் எடுத்து வரப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தார்க் கலவை வந்து சேர்ந்ததும் வீதிகளில் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரத்தில் பெய்த மழையால் ஏற்கனவே வீதிகளில் போடப்பட்டு அடைக்கப்பட்ட தார்க் கலவைகள் கிளறப்பட்டு சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# விழிப்புலனற்றோருக்கு ஊதுபத்தி உற்பத்தி பயிற்சி



யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கி வரும் கைதடி தொழிற்பூங்காவில் விழிப்புலனிழந்தோர் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஊதுபத்தி தயாரிக்கும் பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருகிறது.

இந்தப் பயிற்சிநெறியில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றி பயனடைந்து வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள கர்நாடக மாநிலம் மைசூர் மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் இந்தப் பயிற்சி நெறியை வழங்கி வருகின்றனர். பயிற்சிநெறி மூலம் வறுமை நிலையில் இருக்கும் குடும்பங்கள் இந்தத் தொழிலை விருத்தி செய்து முன்னேற வாய்ப்புள்ளதாகச் சங்கத் தலைவர் எஸ்.கனகசபை தெரிவித்துள்ளார். (ம-288)

# கட்டட வேலைகள் நிறைவுற்றும் பாவனைக்கு விடப்படவில்லை

## தென்மராட்சி பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கே இந்த நிலைமை

தென்மராட்சி, ஏப்.23

கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுக் கையளிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகியும் திறக்கப்படாது உள்ளமை குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

உள்ளூர் உட்கட்டுமான மேம்பாட்டு நிகழ்ச்சி திட்ட நிறுவனத்தால் [illegible] ஏ-9 வீதியுடன் அமைக்கப்பட்ட பிரதேச சபை தலைமை அலுவலகக் கட்டடமே நீண்ட காலம் திறக்கப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தை யார் திறந்து வைப்பது என்பது பற்றிய முடிவு இன்னமும் எடுக்கப்படாமையே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

63 சதவீத மானியத்துடன் 30 மில்லியன் ரூபா செலவில் உள்ளூராட்சி உட்கட்டுமான மேற்பாட்டு நிறுவனத்தில் கடந்த டிசெம்பர் மாதம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இந்தக் கட்டடம் கையளிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் பிரதேச சபையினரால் சமய நிகழ்வுகள் நடத்தப்பட்ட போதும் உத்தியோகபூர்வமாகதிறக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெக்ஸிக்கோவின் முன்னாள் ராணுவத் தளபதி சுட்டுக் கொலை

மெக்ஸிக்கோ, ஏப்.23

மெக்சிக்கோவின் முன்னாள் இராணுவத் தளபதி அடையாளம் தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டார். மெக்சிக்கோவின் இராணுவ தளபதியாக இருந்தவர் ஜெனரல் மரியோ அகஸ்டா சப்பாரோ. இவர் மெக்ஸிக்கோ நகரில் அணாயூவாக் நகரில் காரில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது துப்பாக்கியுடன் எதிரில் வந்த மர்மநபர் மரியோ அகஸ்டாவை சுட்டு விட்டுத் தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலையில் மூன்று குண்டுகள் பாய்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். நாட்டில் முக்கிய பகுதிகளில் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களை ஒழிக்க இவர் தீவிர நடவடிக்கை எடுத்து வந்தார் என்றும் அவர்களின் சதித் திட்டமாக இது இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம)

# 127 பயனாளிகளின் உயிரைப் பறித்த விமான விபத்துக் குறித்து விசாரணை

### பாகிஸ்தான் பிரதமர் கிலானி உத்தரவு

இஸ்லாமாபாத், ஏப். 23

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகே போஜா ஏர் எனும் விமானம் வெள்ளிக்கிழமை விழுந்து நொறுங்கியதில் 127 பேர் பலியானது தொடர்பாக, நீதி விசாரணைக்கு அந்த நாட்டுப் பிரதமர் யூசுப் ரசா கிலானி சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளார். கடந்த 2 ஆண்டுகளில் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள மிக மோசமான இரண்டாவது விமான விபத்து இதுவாகும்.

போஜா ஏர் நிறுவனத்தின் உரிமையாளரான ஃபரூக் போஜாவுக்கு, நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே அவரது பெயர் வெளியேறக் கூடாத நபர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

இஸ்லாமாபாத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான பி.ஐ.எம்.எஸ். மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த பலியானவர்களின் உடல்களை கிலானி பார்வையிட்டார்.

இதனையடுத்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

விமான விபத்து தொடர்பாக நீதி விசாரணை நடத்தத் தேவையான அனைத்தையும் செய்யுமாறு உள்துறை அமைச்சரிடம் கூறியுள்ளேன். இந்த விமான விபத்து மிக மோசமான துயர நிகழ்வாகும். புலனாய்வு இல்லாமல், எந்த முடிவுக்கும் நாம் வர முடியாது. விபத்தில் உயிரிழந்த பெரும்பாலானவர்களின் உடல்கள் உரிய உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. மீதியுள்ள உடல்கள் மரபணு பரிசோதனைக்குப் பிறகு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும்.- என்றார்.

விமான விபத்து குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கூறியதாவது:-

நொறுங்கிய விமானத்தின் சிதைவுகள் ஒரு கிலோ மீற்றர் பரப்புக்கு சிதறியிருந்தன. ஹுசைனாபாத் கிராமத்தின் சில வீடுகள் மீதும் விமானத்தின் பாகங்கள் உடைந்து விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தன. பாகிஸ்தான் பொலிஸார் விசாரணையைத் தொடங்கி விட்டனர். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. விமான விபத்துக்கு தொழில் நுட்பக் கோளாறுதான் காரணமா என்பது பற்றி விசாரணைக்குப் பிறகே தெரியவரும்.

10 ஆண்டுகளுக்குப் பிறகு போஜா ஏர் நிறுவனம் மீண்டும் பறக்க அனுமதிக்கப்படுவதற்கு முன் சோதனைக்குட்படுத்தப்பட்டது; தென்னாபிரிக்காவில் உள்ள பாகிஸ்தான் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டுள்ளது என்று சிவில் விமானப் போக்குவரத்தின் இயக்குநர் ஜெனரல் கூறியுள்ளார்.

அதேநேரத்தில், விமான விபத்து குறித்து விசாரணை நடத்துமாறு விமானப்படை அதிகாரிகளுக்கும் பிரதமர் கிலானி உத்தரவிட்டுள்ளார். இந்த விமானம் தயாரிக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலாகிறது.

நவீன வசதிகள் ஏதும் இல்லாத நிலையில் இது எவ்வாறு அனுமதிக்கப்பட்டது என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்படும். விழுந்து நொறுங்கிய விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டுள்ளது. அது விரைவில் ஆய்வுக்கு அனுப்பப்படும்.- என்றார். (ம)

## இரண்டாம் எலிசபெத்துக்கு 86 ஆவது பிறந்த தினம்



பிரிட்டிஷ் அரசி இரண்டாம் எலிசபெத் தனது 86 ஆவது பிறந்த தினத்தை குடும்பத்துடன் கொண்டாடினார். ஹைட் பார்க்கிலும், லண்டன் டவரிலும் 41 பீரங்கிகள் முழங்கின. விண்ட்சர் கோட்டையில் அரச குடும்பத்தினர் அவருடன் எளிமையான நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஆயிரக் கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருந்த போது பீரங்கிகள் முழங்கியதால் பீதியடைந்த ஒரு குதிரை தறிகெட்டு ஓடியது. இதனால் நிகழ்ச்சி சில நிமிடங்களுக்குத் தடைப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம)

## பெருவில் கரை ஒதுங்கும் டொல்பின்கள்

சுற்றுச் சூழல் மாசுபாட்டால் சமீப காலமாக ஏராளமான கடல்வாழ் உயிரினங்கள் இறந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் பெரு நாட்டின் கடற்கரை பகுதியில் நூற்றுக் கணக்கான டொல்பின்கள் இறந்த நிலையில் ஒதுங்கி வருகின்றன.



இதுகுறித்து பெரு நாட்டின் சுற்றுச் சூழல் அமைச்சர் காப்ரியல் குவாங்க்ரியோ கூறுகையில்; "டொல்பின்களின் இந்த இறப்புக் குறித்து உறுதியான எந்தத் தகவலும் இல்லை. கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை சுமார் 877 டொல்பின்கள் இவ்வாறு இறந்து பெரு நாட்டின் கடற்கரையில் ஒதுங்கியுள்ளன". - என்று தெரிவித்தார். இதில் 90 சதவீதம் நீண்ட மூக்குடைய டொல்பின் வகை என்றும், மற்றவை பர்மீச்ட்டர் போர்போசிஸ் வகை டொல்பின்கள் எனவும் கூறினார். (ம)

## ஆப்கானிஸ்தானில் 10 தொன் வெடிபொருள் மீட்பு

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினர் நடத்திய அதிரடி சோதனையில், 10 தொன் எடை கொண்ட வெடிமருந்து பொருள்கள் சிக்கியதால் மிகப் பெரிய பயங்கரவாத தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இராணுவத்தினர் நடத்திய வாகனச் சோதனையில், காய்கறிகள் கொண்டு செல்லும் லொறி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருள்களே இவ்வாறு சிக்கின.

அவற்றை இராணுவத்தினர் கைப்பற்றி விசாரணை நடத்தியதில் ஐந்து பேர் சிக்கினர், அவர்களில் மூவர் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர் என்றும், இருவர் ஆப்கான் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது. (ம)

# மரண அறிவித்தல்

# இராசா சண்முகானந்தன்



17337

18/1, சிவகுருநாதர் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசா சண்முகானந்தன் நேற்று (22.04.2012) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - வள்ளியம்மை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மருமகனும், சுகிர்தமலரின் பாசமிகு கணவரும், உஷாந்தன் (யா/ மத்திய கல்லூரி), சுமிதா (ஆசிரியை - நாரந்தனை கணேசா வித்தியாலயம்), பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயச்சந்திரன், ஆனந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், கஜலக்ஷன், திலக்ஷன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் பரமானந்தன், அருளானந்தன், சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஈஸ்வரி, யோகராணி, மங்களராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18/1, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
(17337) (45.6.7)



அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற உலக வங்கி மற்றும் ஐ.எம்.எப் வருடாந்த கூட்டத்தில் ஐ.எம்.எப் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டின் லகார்டிடம் அளவளாவும் சிங்கப்பூர் மற்றும் ஜேர்மனி நிதியமைச்சர்கள். (ம)

## பப்புவா ரியூகினியில் நிலநடுக்கம் பதிவு

ஜகர்த்தா, ஏப்.23

இந்தோனேஷியாவுக்கு தென். கிழக்கே பாப்புவா ரியூகினிப் பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட நில நடுக்கம், 6.6 ரிச்டர் அளவாக பதிவாகியிருந்தது.

இந்த நில நடுக்கத்தால், எந்தவித அசம்பாவித சம்பவமும் ஏற்படவில்லை. இந்தோனேஷியா அருகே பாப்புவா ரியூகினிப் பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை நில நடுக்கம் ஏற்பட்டது என்றும் அதனை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்றும் அமெரிக்க வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்தோனேஷிய நேரப்படி, வெள்ளிக்கிழமை காலை 10.16 மணிக்கு ஏற்பட்ட நில நடுக்கம் ரிச்டர் அளவில் 6.6 ஆக பதிவானது. இதனால், சுனாமி முன்னறிவிப்பு ஏதுமில்லை.

மேலும் கடலோர பகுதியில் இருந்து, 76 கிலோ மீற்றர் தொலைவில் தென் கிழக்கே மனோக்குவாரி பகுதிதான் நில நடுக்கத்தின் முக்கிய மையமாக இருந்தது.

இந்த நிலநடுக்கத்தால் எவ்வித சேதமோ, உயிரிழப்போ நடந்ததாக தகவல் எதுவும் வெளியாகவில்லை. (ம)

## நாய்களுக்காக புதிய தொலைக்காட்சி சேவை

வாஷிங்டன், ஏப். 23

நாய்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கும் புதிய தொலைக்காட்சி சேவையொன்று அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாய்களை வளர்ப்பது, அவற்றை பராமரிப்பது ஆகியவை குறித்து அறிந்து கொள்ளும் வகையில் இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாய்கள் காணும் வகையில் ஒலி, இசை, வண்ணங்களில் நிகழ்ச்சிகள் 8 மணி நேரம் ஒளிபரப்பப்படும். வர்த்தக நோக்கில் அல்லாமலும், ஏற்கனவே ஒளிபரப்பிய நிகழ்ச்சிகள் மீண்டும் இடம்பெறாத வகையிலும் தொடர்ந்து புதுப்புது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும்.

நாய்கள் குறித்து அனுப்பப்படும் கடிதங்களிலுள்ள கருத்துகளுக்கு ஏற்பவும் நிகழ்ச்சிகளில் மாற்றம் கொண்டுவரப்படும்.

## இராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு எகிப்தில் மீண்டும் கலவரம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முபாரக் ஆதரவாளர்களை நீக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளன.

கெய்ரோ, ஏப். 23

எகிப்தில் 32 ஆண்டுகள் ஜனாதிபதியாகவிருந்த ஹொஸ்னி முபாரக் ஆட்சிக்கு எதிராகக் கடந்த ஆண்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். இதனால் முபாரக் பதவி விலகினார். அதைத்தொடர்ந்து ஆட்சி இராணுவம் வசம் ஒப்படைக்கப்பட்டது.

ஜனநாயக முறையில் மக்கள் வாக்களித்து புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டது. ஆனால், முபாரக் பதவி விலகி ஒரு வருடமாகியும் இன்னும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவில்லை. இதையடுத்து பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

எனவே ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதில் போட்டியிட பதவி விலகிய முபாரக்கின் ஆதரவாளர்கள் மனு தாக்கல் செய்தனர். துணை ஜனாதிபதியாகவிருந்த சுலைமான், விமானப்படைத் தலைமைத் தளபதியாகவும், பிரதமராகவும் இருந்த அகமது ஷபீப், முன்னாள் வெளியுறவு அமைச்சர் அமர் முஷா ஆகியோரும் மனு தாக்கல் செய்தனர்.

இதற்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இவர்களில் ஒருவர் மீண்டும் ஜனாதிபதியானால் வழக்கு விசாரணையிலிருந்து முபாரக் தப்பிவிடுவார். எனவே, அவர்கள் போட்டியிட அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தி போராட்டம் நடத்தினர். அதைத்தொடர்ந்து சுலைமான் மனு மட்டும் நிராகரிக்கப்பட்டது.

அகமது ஷபீப், அமர் மூஷா ஆகியோரின் மனுக்கள் ஏற்கப்பட்டன. இது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இராணுவம் தனது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள முபாரக் ஆதரவாளர்களை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது எனக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, இராணுவ ஆட்சிக்கு எதிராக வெள்ளிக்கிழமை எகிப்தில் மீண்டும் கலவரம்வெடித்தது. தொழுகை முடிந்ததும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் பேரணியாகப் புறப்பட்டு தலைநகர் கெய்ரோ வந்தனர். கடந்த ஓராண்டுக்கு முன்னர் போராட்டம் நடந்த தக்ரீர் மைதானத்தில் திரண்டு இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முபாரக் ஆதரவாளர்களை நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளன. (ம)

## புகைக்கும் பழக்கத்தை கைவிட்ட 8 வயதுச் சிறுவன்

ஜகர்த்தா, ஏப். 23

தொடர் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகியிருந்த இந்தோனேஷியாவைச் சேர்ந்த 8 வயது சிறுவன் இல்ஹாம் புகைப்பிடிக்கும் பழக்கத்தை தற்போது கைவிட்டுள்ளான்.

அவனது பெற்றோரும், உறவினர்களும் கடந்த 4 வருடங்களாக குழந்தையின் இப்பழக்கத்தை நிறுத்த பல முயற்சிகளை மேற்கொண்டும் அவனால் புகைப்பதை நிறுத்தமுடியவில்லை.

சிகரெட் கொடுக்காவிட்டால் அழுது புரண்டு தான் நினைத்ததைச் சாதித்துக் கொள்வான். தினமும் குறைந்தது ஒரு பைக்கெற் சிகரெட் இவனுக்குத் தேவை.

இந்த நிலையில் தனது 4 வருட இந்தப் பழக்கத்தை தற்போது சிறுவன் விட்டுவிட்டான். (ம)

## அமெரிக்காவில் இந்திய மாணவன் சுட்டுக்கொலை



நியூயார்க்,ஏப்.23

அமெரிக்காவில் படித்து வந்த இந்திய மாணவன் ஒருவன் கடந்த 19 ஆம் திகதி இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒரிசாவைச் சேர்ந்த சேஷாத்ரி ராவ்(வயது- 24) என்பவர் அமெரிக்காவில் உள்ள பொஸ்டன் பல்கலைக் கழகத்தில் நிர்வாகவியல் படித்து வந்தார். இவர் கடந்த 19 ஆம் திகதி அதிகாலையில் பல்கலைக்கழகத்துக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கில் இது வரை யாரும் கைது செய்யப் படவில்லை. இது குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இன்னும் ஒரு மாதத்தில் ராவ் தனது படிப்பை முடிக்கப் போகும் நிலையில் நடந்த இச் சம்பவம் மாணவர்கள் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த மாணவன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு இந்த விடயத்தை தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது. இது குறித்து அமெரிக்க அரசுதக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசு வலியுறுத்தும் என்று ஒரிசா முதல்வருக்கு மத்திய வெளியுறுவுத்துறை அமைச்சர்எஸ்எம்.கிருஷ்ணா தெரிவித்தார். (ம)

## சிறந்த கையெழுத்திற்கான தேசிய விருது வென்ற கைகளற்ற சிறுமி

வாஷிங்டன், ஏப். 23

இரு கரங்களின்றிப் பிறந்த சீனாவைச் சேர்ந்த அன்னி கிளார்க் (வயது 7) என்ற சிறுமி மிகச் சிறந்த கையெழுத்திற்கான தேசிய விருதை அமெரிக்காவில் வென்றுள்ளார். மாணவர்களின் கையெழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் அமெரிக்காவில் தேசிய அளவில் கையெழுத்துப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அன்னி கிளார்க் வென்றுள்ள இப்போட்டியில் சுமார் 25 இலட்சம் மாணவர்கள் பங்கேற்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்போட்டியில் வென்றவர்களுக்கு விருதாக ஒரு கேடயமும், ஆயிரம் டொலர்கள் பணப்பரிசும் வழங்கப்படும். இப்போட்டியில் வென்ற அன்னி கிளார்க், எவ்வாறு எழுதுகிறாள் என்பதை அங்குள்ளவர்களுக்கு விளக்கும் முகமாக தனது இரு முழங்கைகளுக்குகிடையிலும் பென்சிலை இறுக பற்றிப் பிடித்து சிறப்பாக எழுதிக் காட்டினார். அனைத் துத்துறையிலும் மிகச்சிறந்த திறமைசாலியாக அன்னி விளங்குகிறார் என்று ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர்.

இரு கைகளும் ஊனமான நிலையிலும் கத்தரிக்கோல், பசை ஆகியவற்றைப் பயன்படுத்தல், ஆடை அணிவது, உணவு உண்பது, நீந்துவது, மோட்டார் வாகன சவாரி ஆகிய செயல்களையும் அன்னி சிறப்பாகச் செய்துவருகிறார் என அவரது ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்னியின் பெற்றோரான ரொம் - மேரி எலன் கிளார்க்குக்கு 3 சொந்தப் பிள்ளைகளும் அன்னி உள்ளிட்ட சீனாவைச் சேர்ந்த ஆறு ஊனமான குழந்தைகளும் உள்ளனர். அன்னி 2 வயதிலிருந்து ரொம், மேரி எலன் கிளார்க் தம்பதியினருடன் அமெரிக்காவின் மேற்கு பென்சில்வேனியா மாநிலத்தில் வசித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மெக்ஸிக்கோவில் எரிமலை குமுறல் 2 ஆயிரத்து 600 பேர் வெளியேற்றம்

மெக்ஸிக்கோ நகர், ஏப். 23

மெக்ஸிக்கோ புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள எரிமலையொன்று வெடித்ததில் அப்பகுதியிலுள்ள மக்கள் முழுவதும் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். மெக்ஸிக்கோ தலைநகர் மெக்ஸிக்கோ சிட்டியின் புறநகர்ப் பகுதியான ஷாலிட் சிந்தியா என்ற கிராமத்துக்கு அருகே இந்த எரிமலை அமைந்துள்ளது.

சனிக்கிழமை அதிகாலைப் பொழுதில் இந்த எரிமலை வெடிக்கத் தொடங்கியது. இதைத்தொடர்ந்து ஷாலிட் சிந்தியா பகுதி மக்கள் அச்சம் அடைந்ததை அடுத்து மெக்ஸிக்கோ அரசு அவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவைத்தது.

50 பஸ்கள் மூலம் அக்கிராமத்திலிருந்த 2,600 பேரையும் ஏற்றி 7 மைல் தொலைவிற்கு அப்பாலுள்ள ஒரு கிராமத்தில் தங்க வைத்துள்ளது.

எரிமலை வெடிப்பு காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தெற்கு யேமனில் திடீர் தாக்குதல் 25 தீவிரவாதிகள் சாவு

சானா, ஏப். 23

அல் - குவைதா தீவிரவாதிகளின் கோட்டை எனக் கருதப்படும் தெற்கு யேமனில் திடீரென அரசுப் படைகள் தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் 25 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை இது குறித்த அதிகார பூர்வத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஜின்ஜிபார் புறநகர [illegible] மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டை நிறுவுவதில் அரச இராணுவம் வெற்றி கண்டுள்ளது. அதேநேரத்தில் இந்தப் பகுதி தவிர தெற்கின் ஏனைய பகுதிகள் அல்-குவைதா வசம்தான் இப்போதும் உள்ளன என்று அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


தெற்கு அப்யான் மாகாணத்தில் 2 வாரங்களுக்கு முன்பே தாக்குதலை இராணுவம் தொடங்கிவிட்டது. இதுவரை 250 அல்-காய்தா பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலின்போது, 37 யேமன் வீரர்களும் உயிரிழந்தனர். யேமன் அதிபராக இருந்த அலி அப்துல்லா சலேவின் ராஜிமாவைத் தொடர்ந்து ஏற்பட்ட அதிகார வெற்றிடத்தைப் பயன்படுத்திக்கொண்ட அல்-குவைதா இயக்கம் தெற்கு யேமனில் அதிகாரம் செலுத்தத் தொடங்கியது. அமெரிக்காவின் கருத்துப்படி யேமனில் உள்ள அல்-குவைதா பிரிவு மிக பயங்கரமானதாகும். இந்தப் பரிவு அமெரிக்காவுக்கு எதிரான பல்வேறு தாக்குதல்களை நடத்தியுள்ளது என்று இராணுவத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா ஒன்றுபட்ட இலங்கையை ஆதரிக்கும் என்ற

# சுஷ்மாவின் கருத்து தமிழர் மத்தியில் ஐயம், அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

### அதிகார வரம்பை மீறிய செயல் என்கிறார் திருமாவளவன்



ஒன்றுபட்ட இலங்கையைத்தான் இந்தியா ஆதரிக்கும் என்று செய்தியாளர்கள் சந்திப்பின்போது திருமதி சுஷ்மா சுவராஜ் தெரிவித்திருந்தமை அவரது அதிகார வரம்பை மீறிய செயலாகும். எதிர்க்கட்சித் தலைவரான இவர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தொடர்பாக எந்த அடிப்படையில் கருத்துச் சொல்கிறார்? என்று விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கண்டனம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:-

எதிர்க்கட்சித் தலைவரான இவர் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தொடர்பாக எந்த அடிப்படையில் கருத்துச் சொல்கிறார்? இவ்வாறு கருத்துச் சொல்ல இந்தியப் பிரதமர் அல்லது இந்திய ஜனாதிபதி இவருக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்களா? இது தமிழினத்துக்கு எதிரான நடவடிக்கை என்பது மட்டுமல்லாமல், உலகத் தமிழர்களிடையே பெரும் ஐயத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தப் போக்கை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாகக் கண்டிக்கிறது.

பாரதிய ஜனதாக் கட்சியைச் சார்ந்த மக்களவையின் எதிர்க்கட்சித்தலைவர் திருமதி சுஷ்மா சுவராஜ் தலைமையில் செல்கின்ற இந்தக் குழுவில் இடம்பெற்றவை தமிழினத்தின் மீது அக்கறையோ, ஈழ விடுதலையில் உடன்பாடோ இல்லாத கட்சிகள் என்றும் இந்தப் பயணத்தால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் விளையப் போவதில்லை. சிங்களவர்களை சமாதானப் படுத்துவதற்காகத்தான் இந்தக்குழு சென்றது என்றும் நாம் தெரிவித்தோம்.

**தனியான சந்திப்பு ஏன்?**

அதனை உறுதிப்படுத்தும் வகையில்தான் இந்தக் குழுவின் பயணம் அமைந்துள்ளது. குழுவின் தலைவர் திருமதி சுஷ்மா சுவராஜ், ராஜபக்ஷவை தனிமையில் சந்தித்துப் பேசியிருக்கிறார். இது குழுவில் உள்ள பிற உறுப்பினர்களை அவமதிக்கும் செயலாகும். இந்தியாவின் பிரதமர் அல்லது வெளிவிவகாரத்துறை அமைச்சர் போன்ற பொறுப்புகளில் உள்ளவர்கள் இவ்வாறு தனிமையில் சந்திப்பதை ஏற்கலாம். ஆனால் இவர் எந்த அதிகாரத்தின் அடிப்படையில் ராஜபக்ஷவை தனிமையில் சந்தித்தார் என்ற கேள்வி எழுகிறது-என்றார் அவர். (வ)

## மாவோயிஸ்ட்டுகள் போராட்டம் வாகனங்களுக்குத் தீ வைப்பு

எல்லைப்பாதுகாப்புப் படையினரின் 'பசுமை வேட்டை' நடவடிக்கையைக் கைவிடக்கோரி ஒரிசாவில் மாவோயிஸ்ட்டுகள் 2 நாள் போராட்டம் நடத்தினர். இதன்போது வாகனங்களுக்கு தீ வைத்துள்ளனர். இதனால் அங்கு பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிரான எல்லைப்பாதுகாப்பு படையினரின் 'பசுமை வேட்டை'யை கைவிடக்கோரி ஒரிசா மாநிலத்தில் நேற்று முன்தினம் முதல் 2 நாள் முழு அடைப்பு போராட்டத்தை மாவோயிஸ்ட்டுகள் நடத்தினர்

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் புவனேஸ்வர் அருகே உள்ள பெண்டஜம் என்ற கிராமத்தில் புகுந்த ஆயுதம் தாங்கிய மாவோயிஸ்ட்டுகள் ஒப்பந்தகாரர் ஒருவருக்குச் சொந்தமான 3 லொறிகள் மற்றும் ஒரு டிப்பருக்கு தீ வைத்து பரபரப்பை ஏற்படுத்தினர்.

மேலும் பல இடங்களில் வீதிகளில் மரங்களை வெட்டிப் போட்டு போக்குவரத்தைத் தடை செய்தனர்.

மாவோயிஸ்ட்டுகளின் போராட்டத்தால் வீதிகள் வாகனப் போக்குவரத்து இல்லாமல் வெறிச் சோடிக் காணப்பட்டது. (வ)

## இந்திய ஏவுகணை சூர்யா 10 ஆயிரம் கி.மீற்றர் பாயுமாம்

### ஆராய்ச்சிப் பணிகள் தீவிரம்

அக்னி-5 ஏவுகணை பரிசோதனை வெற்றிக்குப் பின்பு, 10 ஆயிரம் கிலோ மீற்றர் வரை சென்று தாக்கும் புதிய ரக ஏவுகணையை இந்தியா உருவாக்கி வருகிறது.

கடந்த 19 ஆம் திகதி காலை ஒரிசா மாநிலத்திலிருந்து அக்னி-5 ஏவுகணைப் பரிசோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த ஏவுகணை 5000 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ஒரு பகுதியை அழிக்கும் வல்லமை படைத்தது.

இந்தியாவிலிருந்து சீனா, பாகிஸ்தான், ஐரோப்பா, ஆபிரிக்கா போன்ற கண்டங்களை இந்த ஏவுகணையைக் கொண்டு அழிக்கலாம். அந்தமான் நிக்கோபர் தீவுகளிலிருந்து தாக்குதல் நடத்தினால் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற தீவுகளைக்கூட தாக்கலாம். இந்நிலையில் அக்னி-5 ஏவுகணைக்கு அடுத்த கட்டமாக 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்க வல்ல புதிய ரக ஏவுகணை தயாரிப்பில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

அக்னி-5 ஒரே ஒரு அணு அல்லது வேறு குண்டை ஏந்திச் செல்ல வல்லது. அடுத்தகட்டமாக ஒரே ஏவுகணையில் பல குண்டுகளை ஏந்திச் செல்லும் தொழில்நுட்பத்தை இந்தியா உருவாக்கி வருவதாகத் தெரிகிறது.

'அ6' என்று குறியீட்டுப்பெயர் இடப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சி தீவிரமாக நடந்து வருகிறது. இந்த ஏவுகணையின் தூரமும் 6,000 முதல் 10 ஆயிரம் கிலோமீற்றராக இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்த ஏவுகணைக்கு 'சூர்யா' எனப் பெயரும் சூட்டப்பட்டு விட்டது என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (வ)



டில்லி விஞ்ஞான பவனில் நடைபெற்ற இந்திய ஆட்சிப் பணி நாள் விழாவில் சிறப்பாக பணியாற்றிய ஆட்சிப் பணி அதிகாரிகளுக்கு பிரதமர் மன்மோகன் சிங் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்.

## இந்திய தேசிய பானம் இனிமேல் தேநீர்

இந்தியாவில் பாமரர்கள் முதல் கோடீஸ்வரர்கள் வரை தினமும் ருசித்து பருகும் தேசிய பானமாக தேநீர் விளங்குகிறது.

அந்தவகையில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பிரதான இடத்தை பிடித்த தேநீர் இந்தியாவின் தேசிய பானமாகிறது. இந்தத் தகவலை மத்திய திட்டக் குழு துணைத்தலைவர் மாண் டெக்சிங் அலுவாலியா தெரிவித்தார்.

அசாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேயிலை பயிரிடுவோர் சங்க பவள விழாவில் கலந்து கொண்டு பேசியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அசாமில் முதன் முதலாக தேயிலை பயிரிட்ட மணிராம் தேவனின் 212 ஆம் ஆண்டு பிறந்த நாளான அடுத்த ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி முதல் தேநீர் இந்தியாவின் தேசிய பானம் ஆகும்.

இதற்கு இன்னொரு முக்கிய காரணம், தேயிலை தொழிலில் பெருமளவில் பெண் தொழிலாளர்கள் பங்கேற்று இருப்பதும் ஆகும்- என்றார். (வ)

## கனிமொழிக்கு அழைப்பாணை

டில்லி, ஏப்.23

கலைஞர் தொலைக்காட்சிக்கு ஸ்வான் தொலைத் தொடர்பு நிறுவனத்திடம் இருந்து ரூ.233 கோடி பெறப்பட்டது குறித்து விசாரித்து வரும் செயற்படுத்தல் பிரிவு, இது குறித்து விளக்கம் அளிக்குமாறு தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழிக்கு அழைப்பாணை அனுப் பியுள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு நடந்த காலத்தில், ஸ்பெக்ட்ரம் வழக்கின் குற்றவாளியான, ஸ்வான்தொலைத் தொடர்பு நிறுவனத்திடமிருந்து கலைஞர் தொலைக்காட்சிக்கு முறைகேடாக ரூ. 200 கோடி பெறப்பட்டது. இதை கடன் என்கிறது தி.மு.க., ஆனால், லஞ்சம் என்கிறது சி.பி.ஐ.

இந்தப் பணத்தை வட்டியோடு சேர்த்து திருப்பித் தந்துவிட்டது தி.மு.க. ஆனால், 2ஜி விவகாரம் பெரிதான பின்னர் தான், அதை கடன் மாதிரி காட்ட வட்டியோடு திருப்பித் தந்தது கலைஞர் தொலைக்காட்சி என்கிறது சி.பி.ஐ.

இந்த நிலையில் கலைஞர் தொலைக்காட்சியில் கனிமொழிக்கு 20 சதவீத பங்குகள் உள்ளதால், இந்த பணப் பரிவர்த்தனை தொடர்பாக எதிர்வரும் 26 ஆம் திகதி, டில்லியில் உள்ள செயற்படுத்தல் பிரிவு அலுவலகத்தில் முன்னிலையாகி கனிமொழி விளக்கம் அளிக்க வேண்டும் என்று அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

2008- 2010ஆம் ஆண்டுக்குள் இந்தப் பணப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து சட்ட விரோத பணப் பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.



இந்த நிலையில் கனிமொழிக்கு செயற்படுத்தல் பிரிவு அழைப்பாணை அனுப்பியுள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி கனிமொழி சார்பில் அவரது கணக்காய்வாளர் முன்னிலையாகி, இந்த வழக்குக்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பார் என்று தெரிகிறது. (வ)

## ஈழம் குறித்து வாக்கெடுப்பு அவசியம் என்கிறார் ராமதாஸ்

மயிலாடுதுறை, ஏப்.23

இலங்கையில் தனித் தமிழீழ நாடு உருவாக்குவது தொடர்பாக ஈழத்தமிழர்களிடத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராம்தாஸ் வலியுறுத்தியுள்ளார்.

மயிலாடுதுறையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இந்த வாக்கெடுப்பு நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.



தமிழீழம் குறித்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆகியோர் ஏற்கெனவே வலியுறுத்தியிருந்தனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறிய கருத்துக்கு, இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய மற்றும் அந்த நாட்டு மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இதற்கும் கருணாநிதி சளைக்காமல் பதிலடி கொடுத்திருந்தார்.

தமிழீழம் தொடர்பாக பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டில் வலுத்து வருகிறது-என்றார் அவர். (வ)

## காந்தியின் குருதி படிந்த மண்ணை ஆற்றில் கரைத்து விடுங்கள்

### அவரது பேத்தி வேண்டுகோள்

மகாத்மா காந்தியின் குருதி படித்த மண் மற்றும் புற்களை ஆற்றில் கரைத்து விடுங்கள் என்று ஏலம் எடுத்தவரிடம் காந்திஜியின் பேத்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்ட போது அந்த இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட மண் மற்றும் புற்கள் அண்மையில் லண்டனில் ஏலம் விடப்பட்டன.

கண்ணாடியில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்த இதை பெயர் தெரிவிக்க விரும்பாத ஒருவர் ரூ.8.2 இலட்சம் தொகைக்கு ஏலத்தில் எடுத்துள்ளார்.

இந்தநிலையில் அந்த மண் மற்றும் புற்களை உலகின் எந்தப் பகுதியிலும் உள்ள ஆறு அல்லது கடலில் கரைத்து விட வேண்டும் என்று காந்திஜியின் பேத்தி தாரா காந்தி பட்டாசார்ஜி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தவிர காந்திஜி பயன்படுத்திய கண்ணாடி, ராட்டை போன்றவையும் எதிர்பார்த்ததை விட இரண்டு மடங்கு விலைக்கு ஏலம் கேட்கப்பட்டன. இறுதியில் கண்ணாடி ரூ.28 இலட்சத்துக்கும் ராட்டை ரூ.21 இலட்சத்துக்கும் ஏலம் விடப்பட்டன. (வ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(2)

சில கவலைகளைத் தடுக்க முடியும், தவிர்க்க முடியும், தீர்க்கமுடியும். தடுக்க முடியாத கவலை முதுமை, மரணம். தவிர்க்க முடியாத கவலை இல்லாமை. தீர்க்க முடியாத கவலை இழிவுகளில் ஏற்படுவது.

கவலைகளை மறைக்கப் பார்க்காதீர்கள். அவற்றை மறுக்கவும், மறக்கவும், கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

எந்தவொரு கவலையும் உங்கள் ஆர்வத்தைக் குறைக்க இடமளிக்காதீர்கள்.

ஆர்வம் கவலைகளில் இருந்து உங்களைக் கரைசேர்க்கும், கவலையில் உங்களை மூழ்கடிக்காதபடி பார்த்துக் கொள்ளும். ஆர்வம் உள்ளவர்கள் நடந்ததையே எண்ணிக் கொண்டிருப்பதில்லை. நடக்கப் போவதில் கவனம் செலுத்துவார்கள்.

'ஆசையே துன்பத்துக்குக் காரணம்' என்பார் புத்தர். கவலையும் துன்பமும் கைகோர்த்துக் கொள்கின்றன. கிடைத்ததில் நிறைவு கொள்வதில்லை மனித மனம். அது இன்னும் வேண்டும் என்று ஆசைப்படுகிறது. கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற கவலை. கிடைக்காமல் போனதில் கவலை, கிடைத்தாலும் குறைவாக இருக்கிறதே என்கிற கவலை.

*'தனக்குக் கிடைத்த வெற்றியில்.*
*தனக்குக் கிடைத்த பொருளில்.*
*தனக்குக் கிடைத்த புகழில்,*
*மனிதன் திருப்தியடைவதில்லை'.*

நம்முடைய பெரும்பாலான கவலைகளுக்கு காரணம் நாம் திருப்தியற்றவர்களாயிருப்பது தான்.

பால் உடம்புக்கு நல்லது. ஆனால் அதற்காக யாரும் ஒரே மூச்சில் இரண்டு மூன்று ரம்ளர் பாலைக் குடித்து வைப்ப தில்லை.

அடுத்த வேளைச் சாப்பாட்டையும் இந்த வேளையிலேயே சேர்த்துச் சாப்பிட்டு விடுகிறோமா என்ன? ஆசைக்கும், தேவைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொண்டாலே நம் கவலைகளில் பாதி காணாமல் போய்விடும். போதும் என்கிற மனம் வேண்டும்.

### தலைக்கு மேல் பறவைக் கூடு

கவலைகள், எல்லாம் பார்த்து ரசிக்கிற பறவைகளைப் போல் இருக்க வேண்டும். பறவைகள் நம்மைச் சுற்றிப் பறக்கட்டும். நம் தலைக்குமேல் பறந்து போகட்டும். ஆனால், அவற்றைத் தலையில் கூடு கட்ட நாம் விடலாமா? கவலைகளைத் தலையில் சுமத்திக் கொண்டால் அவற்றின் பளு நம்மை நசுக்கி விடும்.

தீராத பிரச்சினை தீவிரமடைவதைப் போல தீர்க்கப்படாத கவலையும் வளர்ந்து விடும்.

கவலைப்படுங்கள்; உடனுக்குடன் கழற்றி விடுங்கள். கவலை உங்கள் துணிவை விட, நம்பிக்கையை விட, தாங்குதிறனை விட கூடுதலாகி விடக்கூடாது.

தீர்க்க முடியாத பிரச்சினை என்று எதுவும் இல்லை, ஆறாத காயமாக எதுவும் இருந்து விடாது. நம்மால் எந்தச் சவாலையும் எதிர்கொள்ள முடியும். கவலைகளை ஊதித்தள்ளுங்கள்.

ஆட்டத்தில் ஒரு முறை தோற்றதற்காக ஏன் வருந்துகிறீர்கள் மைதானத்தில் இருந்து நீங்கள் வெளியேறலாம். விளையாட்டையே அதற்காக விட்டு விடக் கூடாது. விளையாடுகிறவர்களுக்கு மட்டுமல்ல, வாழ்க்கையின் எந்தத் துறையில் இருப்பவர்களுக்கும் இது பொருந்தும்.

### இன்னும் சிறந்ததைப் பெறுவோம்

நீங்கள் கவலைக்குள்ளாக நேர்கிற போதெல்லாம் எங்கே, எது தவறாகிப் போனது என்பதைக் கண்டுபிடியுங்கள். உட னுக்குடன் சரி செய்து கொள்ளுங்கள். கவலை கான்ஸர் (cancer) மாதிரி ஓசைப்படாமல் வந்து விடும். படிப்படியாய் விசுவரூபம் எடுக்கும். தொடக்கத்திலேயே அடையாளம் கண்டு விடுங்கள். எளிதாய்க் குணப்படுத்தி விடலாம்.

வாழ்க்கை நாம் விரும்புகிறபடி மாறுவதில்லை மனிதர்கள் நம் மதிப்பீடுகளுக்கு ஏற்றபடி இருப்பதில்லை. நிகழ்வுகள் நாம் எதிர்பார்க்கிறபடி அமைவதில்லை. ஆனால் அவற்றோடு பொருந்திக் கொள்ளக் கற்றோமெனில் பெரிதாய் கவலைப்படும் படி எதுவும் இருக்காது.

பொருள்களை இழக்கிறபோது எண்ணிக் கொள்ளுங்கள் 'இதைவிட சிறந்ததைக் காலம் எனக்கு வழங்கப் போகிறது' என்று மனிதர்களைப் பிரிகிறபோது சொல்லிக் கொள்ளுங்கள், 'இன்னும் சிறந்த உறவை நான் பெறப் போகிறேன்' என்று.

வாழ்க்கை ஒரு போதும் உங்களை வெறுங்கையராக விட்டு விடாது. அது வழங்கிக் கொண்டேயிருக்கும் முந்தையதைக் காட்டிலும் மேலான ஒன்றை. இதனை நீங்கள் புரிந்து கொண்டாலே போதும். வாழ்க்கை வாழத்தக்கதாயிருக்கும்.

### எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளுங்கள்

'வாழ்க்கை எதை வேண்டுமானாலும் கொண்டு வரட்டும். என்னுடைய மகிழ்ச்சி குறையாது. 'நம்பிக்கை தளராது' என்கிற மன உறுதியைச் சிலரிடம் காண முடிகிறது. அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் நலமே காண்பவர்கள் (optimists). 'இந்த உலகம் வாழ்வதற்கு ஏற்றதாயில்லை' என்று கருதிக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் கவலைக்குரியதை மட்டுமே காண்பவர்கள். (pessimists)

### பார்வைகள் வேறுபடும்

சிறைத் தண்டனைக் கைதிகள் இருவர் சிறைச்சாலையில் ஒரே அறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இருவரில் ஒருவன் அறை யன்னலைத் திறந்து பார்த்துவிட்டுச் சொன்னான். 'ஒரே சகதியா இருக்கு' என்று மற்றொருவனும் யன்னல் வழியே பார்வையை ஓட்டினான். 'அதோ அந்த மரத்தில் இலைகளே தெரியாதபடிக்குச் செந்நிறப் பூக்கள் பூத்துக் குலுங்குகிறது- என்றான்.

-சி.எஸ்.தேவநாதன்

(தொடரும்)

# தனியார் கல்வி நிறுவனங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## நல்லூர்ப் பிரதேச செயலர் தெரிவிப்பு

**இன்று சிறுவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். கல்வி நிறுவனங்கள் மாணவர்களது விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும். மாணவர்களின் வரவுகள் பற்றி கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும். பெற்றோர் பாதுகாவலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.**

யாழ்ப்பாணம்,ஏப்.23

தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களின் வசதிகளைக் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் எனவும், சுகாதாரம் குடிதண்ணீர் வசதிகள், வகுப்பறை இருக்கைகள் சீரான முறையில் அமைக்கப்பட்டிருத்தல் அவசியம் என்று நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் முகாமையாளருடனான கலந்துரையாடல், கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே செந்தில் நந்தனன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்த தாவது:-

இன்று சிறுவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். கல்வி நிறுவனங்கள் மாணவர்களது விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும். மாணவர்களின் வரவுகள் பற்றி கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும். பெற்றோர் பாதுகாவலருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

கல்வி நிலையங்களில் சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகள் குறித்து மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆலோசனை வழங்கியுள்ளார். இங்கு சமுகமளித்துள்ள சுகாதாரப் பரிசோதகர்களும் அதுபற்றி எடுத்துக் கூறியுள்ளனர்.

எனவே உங்களது கல்வி நிலையங்களில், தேவையான மாற்றங்களைச் செய்து மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் கைத்தொலைபேசி பாவனைகளையும் கல்வி நிலையங்களில் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுங்கள்.

உங்கள் பிரச்சினைகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்துக் கூறினால் அதற்கான தீர்வுகளை முன்னெடுக்கவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்- என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் 35 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ-7)

## ஓய்வூதியர் நிர்வாகிகள் தெரிவு

வடமராட்சி, ஏப்.23

பருத்தித்துறை பிரதேச அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய சங்கத் தலைவராக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

உப தலைவராக இளைப்பாறிய காணி உத்தியோகத்தர் பி.லிங்கமூர்த்தியும், செயலாளராக இளைப்பாறிய கிராம சேவையாளர் எஸ்.சிவலிங்கமும், உப செயலாளராக இளைப்பாறிய பொது நூலகர் ஏ.என்.எஸ்.திருச்செல்வமும், பொருளாளராக இளைப்பாறிய ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் எஸ்.ஸ்ரீகண்ணனும் தெரிவானார்கள்.

இளைப்பாறிய தபாலதிபர் எஸ்.சந்திரலிங்கம், இளைப்பாறிய நீர்வள மேற்பார்வையாளர் எஸ். கிருஷ்ணதாஸ் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (எ-8)

## திருமலை, மேல் நீதிமன்ற நீதிபதிகளாக இளஞ்செழியன், பிறேம்சங்கர்



இளஞ்செழியன்



பிறேம்சங்கர்

யாழ்ப்பாணம், ஏப்.23


திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக மாணிக்க வாசகர் இளஞ்செழியன் மற்றும் அன்னலிங்கம் பிறேம் சங்கர் ஆகியோர் பதவி உயர்வு பெற்று நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை 11.45 மணியளவில் சத்தியப் பிரமாணம் செய்து இருவரும் பதவி உயர்வு பெற்றுக்கொண்டனர்.

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் இவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு நியமனமும் வழங்கப்பட்டுள்ளது.

அன்னலிங்கம் பிறேம் சங்கர் யாழ். மாவட்ட நீதிபதியாகவும் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாகவும் இறுதியாக பதவி வகித்தனர்.

இந்த நிலையிலேயே இருவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டு நியமனமும் வழங்கப்பட்டுள்ளது. (எ-4)



பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஊழியர் நலன்புரி சங்கத்தால் நடத்தப்பட்ட அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பில் புற்றளையைச் சேர்ந்த ஆறுமுகசாமி ஜெனனி முதலாம் பரிசாக கணினியைப் பெறுகிறார். (எ)

## யாழ்.ஓய்வூதியர் சங்கம் முதலிடம்

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 16 ஆவது ஆண்டை முன்னிட்டு மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட சங்கங்களின் செயற்பாட்டுப் போட்டியில் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாணப் பிர தேச சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் இடத்தை காரைநகர் பிரதேச சங்கமும், மூன்றாமிடத்தை பருத்தித்துறை பிரதேச சங்கமும் பெற்றுக் கொண்டன. கொழும்பில் இடம்பெற்ற இந்த நிதியத்தின் 10 ஆவது ஆண்டு விழாவில் இதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (எ-8)

## கையெழுத்து சஞ்சிகை போட்டி முடிவுகள்

இளைஞர்களின் ஆக்கத்திறன் வாசிப்பு, நூலக பாவனை என்ப வற்றை மேம்படுத்தும் முகமாக உலக புத்தக தினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் செயற்படும் நூலகங்களுடன் இணைந்து யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே கையெழுத்து சஞ்சிகைப் போட்டி ஒன்றை நடத்தியுள்ளது. மாவட்ட ரீதியாக மிகச் சிறந்த கையெழுத்துச் சஞ்சிகைகளாக தெரிவு செய்யப்பட்ட சஞ்சிகையும், பாடசாலைகளின் பெயர் விவரங்களும் வருமாறு:-

கீழ்ப்பிரிவு

'தூரிகை' - யா/கரந்தன் இராமுப் பிள்ளை வித்தி.- நீர்வேலி, 'சுடர்' - யா/ புங்குடுதீவு மகா வித்தி. , 'வெண்சங்கு - யா/ஏழாலை மகா வித் தியாலயம், பூந்தளிர்- யா/ ஹாட்லிக் கல்லூரி, 'வானவில்' - யா/ தும்பளை சிவப் பிரகாசவித்தியாலயம்.

மத்திய பிரிவு

'சுபீட்சம்' - யா/ கோப்பாய் மகா வித்தியாலயம், 'அலை மொழி' - யா/ மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாட சாலை, 'தேடல்' - யா/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, 'வளர் பிறை' - யா/ மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., 'தமிழ் கலசம்'- யா/ உசன் இராம நாதன் மகா வித்தியாலயம்.

மேற்பிரிவு

'இரவி' - யா/ உடுப்பிட்டி மக ளிர் கல்லூரி, 'முகிழ்வு' - யா/ பண் டத்தரிப்பு பெண்கள் கல்லூரி, 'உயர்வு'-யா/ மெய் கண்டான் வித்தி யாலயம், 'நீரூற்று' - யா/ செங்குந்தா இந் துக் கல்லூரி, 'துளிர்' யா/ வேலணை மத்திய கல்லூரி. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021 226 2395

சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## குரு செய்தால் குற்றமில்லையா?

''இலங்கையில் குடிவரவு, குடியகல்வு சட்டத்தை நான் மீறிவிட்டேன் என்று என் மீது வழக்குத் தொடுக்க இலங்கை அரசு மும்முரமாகச் செயற்படுகிறது. அப்படியானால் இப்போது பிரதி அமைச்சராக இருக்கின்ற விநாயகமூர்த்தி முரளி தரன் வெளிநாடு செல்வதற்கு போலிக் கடவுச்சீட்டை அரசே தயாரித்து கொடுத்தது. என் மீது வழக்குத் தொடுக்க முனையும் அரசு விநாயக மூர்த்தி முரளிதரன் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க முன்வருமா?'' –இவ்வாறு இலங்கை அரசை நோக்கி கேள்விக் கணை ஒன்றை தொடுத் திருக்கிறார் அண்மையில் கடத்தப்பட்டு பின்னர் நாடு கடத்தப்பட்ட பிறேம்குமார் குணரட்ணம்.

உலகிலேயே முதல்முறையாக தனது நாட்டின் குடிவரவு, குடியகல்வுச் சட்டங்களை மீறி போலிக் கடவுச்சீட்டை தயாரித்த பெருமை இலங்கை அரசையே சாரும். புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து வந்த கருணாவை [தற்போதைய பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை] யாருக்கும் தெரியாமல் பிரிட்டனுக்கு அனுப்பிவைக்கவே தனது சட்டத்தை தானே மீறியது அரசு. அதே போன்று தனது நாட்டுப் பிரஜைகளை வெள்ளை வானில் கடத்தும் மகோன்னத கைங்கரியத்தை மேற்கொள்ளும் சாதனையும் இலங்கை அரசுக்கே உரித்தானது. தமக்கெதிரான கலகக் குரல்களை ஒடுக்குவதற்காக எத்தகைய கீழ்த்தரமான வேலைகளைச் செய்வதற்கும் இலங்கை அரசு ஒருபோதும் தயங்கியது கிடையாது.

இப்போது மீண்டும் குணரட்ணத்தின் காலடி இலங்கைக்குள் பட்டுவிடக்கூடாது என்பதற்காக படாதபாடுபடுகிறது அரசு. அதற்காக குடிவரவு குடியகல்வுச் சட்டத்தை மீறி, போலிப் பெயர்களைப் பயன்படுத்தியே அவர் இலங்கைக்குள் நுழைந்தார் என்று வழக்குப் போட அது முனைகிறது. இதன் மூலம் இனிமேல் தப்பித் தவறியேனும் குணரட்ணம் இலங்கைக்குள் வந்தால், குறித்த வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அவரை கருதி, விமான நிலையத்திலேயே அவரைத் 'தூக்க' முடியும்.

தனக்கு எதிரான செயற்பாட்டாளர்களை ஒடுக்குவதற்கு அரசு சட்டத்தின் ஓரங்களையே தனக்கு வசதியாக அடிக்கடி வளைத்துக் கொள்கிறது. பொன்சேகா முதல் குணரட்ணம் வரை நீண்டு செல்லும் பட்டியலில் உள்ளவர்களை இத்தகைய சட்ட வளைப்புகள் மூலம் குரலற்றவர்களாக மாற்ற அரசு எத்தனிக்கிறது. இதன் மூலம் எதிர்ப்புகள் இல்லாத ஆட்சிக் கட்டிலில் துயில் கொள்வதே அரசின் கனவாக இருக்கிறது. இதேவேளை தனக்கு வேண்டியவர்களுக்காக சட்டத்தில் எந்தளவு பெரிய ஓட்டையையும் போடுவதற்கு அரசு தயங்குவதில்லை. கருணா முதல் துமிந்த வரை இவ்வாறு அரசின் துணையோடு சட்டத்துக்கு 'தண்ணி' காட்டியவர்கள் நிறையப் பேர்.

ஆசியாவின் அதிசய நாட்டில் சாதாரணர்கள் தும்மினாலும் அது பாரதூரமான தண்டனைக்குரிய குற்றம். ஆனால் குரு கொலை செய்தாலும் குற்றமில்லை.

தூரத்தே ஜனநாயகம், நீதி,நியாயம் என்பனவெல்லாம் இலங்கையைப் பார்த்து கைகொட்டிச் சிரிக்கும் சத்தம் பலமாகிக்கொண்டே வருகிறது.

# அமைச்சர் பீரிஸின் 'இரகசிய' செயல்திட்டம்

நேற்று 22.04.2012 அன்று சண்டேரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி

■ தொகுப்பு: கோகுலன்

கடந்த வாரம் திங்கட்கிழமையன்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மிகப் பெரிய அசட்டுத்தனமான ராஜதந்திர தவறை இழைத்தார்.

வெளியுறவு அமைச்சினால் நடை பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டின் போது இந்தத் தவறு இழைக்கப்பட்டது. அந்த மகாநாட்டில் இஸ்ரேல் நாட்டின் வெளியுறவு அமைச்சரோ, அல்லது அந்த நாட்டின் தூதுவரோ வந்தி ருக்கவில்லை. ஆனால் அமைச்சர் பீரிஸ் பின்வருமாறு தமது பேச்சை ஆரம்பித்தார்.

''டாக்டர் றியாத் - அல் மாலிக்கி, இஸ்ரேல் நாட்டின் கௌரவ வெளிநாட்ட மைச்சர் அவர்களே, இஸ்ரேல் நாட்டின் தூதுவர் அவர்களே,...''

மேற்குறித்த இரு கௌரவ பிரமுகர்களும் பாலஸ்தீன நாட்டை பிரதிநிதித்து வம் செய்தவர்களாவர். இலங்கைக்கு இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருந்த பாலஸ்தீன அதிபர் மகம்மத் அப்பாஸுடன் இலங்கை வந்திருந்தவர் அந்தநாட்டின் வெளியுறவு அமைச்சர் மாலிக் ஆவார். பீரிஸ் நடத்திய பத்திரி கையாளர் மகாநாட்டில் அவரும் கலந்து கொண்டிருந்தார். பாலஸ்தீன தூதுவர் டாக்டர் அன்வர் அல் ஆகாவும் வந்திருந் தார்.

பீரிஸின் வரவேற்பைக் கேட்டதும் அவ்விருவரின் முகங்களும் சிவந்து போய்விட்டன பீரிஸ் இரண்டு தடவைகள் இஸ்ரேலைக் குறிப்பிட்ட போது இருபாலஸ்தீன பிரமுகர்களின் முகங்களும் நாணத்தினால் சிவப் பேறிக் காணப்பட்டன. தூதுவர் ஆகா சங்கடத்துடன் வெளிப்படுத்திய உடல் மொழியை அவதானித்த பிறகுதான் பீரிஸ் தான் விட்ட தவறை உணர்ந்து கொண்டு 'சொறி' என்றார். பிறகு பேச்சைத் தொடர்ந்தார்.

உண்மையில் சில நிமிடங்கள் வரை பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான வித்தியாசத்தை அமைச்சர் பீரிஸ் மறந்து விட்டிருந்ததுபோல் தெரிந்தது. பாலஸ்தீனத்துடன் இலங்கை நெருங்கிய உறவுகளைக் கொண்டி ருப்பது மட்டுமல்ல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இளம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் பாலஸ்தீனியரின் விடுதலைக் கோரிக்கை தொடர்பாக குரல் கொடுப்பவராகவும் இருந்துள்ளார். அவரைக் கௌரவிப்பதற்காகப் பாலஸ்தீனத்தில் ஒருவீதி அதிபர் மஹிந்த ராஜபக்ஷ வீதி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பிறகு வெளியுறவு அமைச்சினால் நிகழ்த்தப்பட்டுள்ள மிகப் பெரிய அபத்தமான குளறுபடி இதுவாகும்.

இந்த நிலையில்தான் வாஷிங்டனில் ஐந்துநாள் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு ஒபாமா நிர்வாகிகளுடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் கடந்த மாதம் மனித உரிமைப் பேரவையில் ஏற்பட்ட தோல்வி தொடர்பாக உள்கட்சி குத்து வெட்டுகள் பற்றிய செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில்தான் பீரிஸின் வாஷிங்டனுக்கான பிரயாண ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன.

பெரிய எடுப்பிலான இரு பெரும் குழுக்களை ஜெனிவாவுக்கு அனுப்பியும் கூட இலங்கை மீதான அமெரிக்கத் தீர்மானத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் போயிற்று. அது பற்றிய ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியா தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கப் போகின்றது என்பது தெரிய வந்த நிலையில் கடைசி நேரத்தில் சீனா தலையிட்டுச் செயல்பட்டதால் ஓர் இரு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்க முன்வந்ததாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன. இதன் காரணமாக பல நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருக்கவும் ஊக்கப்படுத்தப்பட்டனவாம். இலங்கைக்குழுவில் சென்ற முக்கிய பிரமுகர்களுக்கு தமது குழுவில் எத்தனைபேர் இருந்தார்கள் என்ற எண்ணிக்கைகூட தெரியாமல் இருந்துள்ளது. பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் கூறினார்; எங்களால் எண்ணிக்கை விவரம் ஒன்றை வைத்துக் கொள்ள முடியவில்லை. சிலர் வந்து கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்'' என்றார் அவர்.

இதனால் அரசுக்கு மில்லியன் கணக்கான டொலர் வீண் செலவு ஏற்பட்டது என்றார் அவர் மேலும்.

### அரசின் உண்மை நிலைப்பாடு

அரச தலைவர்கள் ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டும், முரண் பாடான கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் சில முக்கிய அரசு தரப்பு முக்கியஸ்தர்கள் மூலமாகவே வெளிவருகின்றன.

இப்பொழுது தீர்மானத்தின் சில முக்கிய அம்சங்களுக்கு செவி சாய்க்க அரசு தீர்மானித்திருப்பது தெரிய வந்துள்ளது. இதில் முக்கியமான விடயம் என்ன வெனில் செயல்திட்டம் ஒன்றை உருவாக்குவதாகும். இதில் அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் உண்மையைக் கண்டறியும் குழுவின் பரிந்துரைகளில், இனிமேல் செயல் படுத்தவிருக்கும் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படும் என்று தெரிகின்றது.

இவ்வாறு செயல்திட்டம் ஒன்றை உருவாக்கும் பொறுப்பு வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தமது அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகளின் உதவியுடன் அவ்வாறான திட்டமொன்றுக்கான வரைவு ஒன்றை அவர் தயாரித்திருக்கிறார். ஆனால் அந்த ஆவணம் தற்போதைக்கு இரகசியமாகப் பேணப்பட்டு வருகின்றது. அடுத்தமாதம் வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹில்லாரி கிளின்ரனைச் சந்திக்கும்போது அதன் விவரங்களை அவருடன் பகிர்ந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின் றது. இந்தவகையில் ஜெனிவாத் தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்ற முயல்கிறது என்பதை, கிளின்ரனுக்கு பீரிஸ் விளக்கி அவரை திருப்திப்படுத்த முயல்வார் என்று தெரிகிறது. இது இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பல அம்சங்கள் கொண்ட ஆவணம் ஒன்றை அமைச்சர் சிங்கள மொழியில் தயாரித்திருக்கிறார். இதன் பிரதிகள் கட்சித் தலைவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவைகள் பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து கொண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்துக்கு வரும்படி ஜனாதிபதி அவர்களை கேட்டுள்ளார். ஆணைக்குழுவின் எந்தெந்த பரிந்துரைகளை செயல்திட்டத்தில் இடம்பெறச் செய்யலாம் என்பதை அதில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் முடிவு செய்வார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. அடுத்தவாரம் தென்கொரியாவுக்கு பயணம் மேற்கொள்ளவிருக்கும் ஜனாதிபதி குறித்த திகதிக்கு முன் நாடு திரும்பிவிடுவார் என்று தெரிகின்றது.

அரசாங்கம் ஆணைக்குழு பரிந்துரைகள் தொடர்பாக எடுக்கவிருக்கும் செயல்பாடுகள் தொடர்பில் கட்சித் தலைவர்கள் தம்மோடு இணைந்து நகர வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கம் என்று தெரிகின்றது. அவ்வாறாயின் மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய வழிமுறைகளை இது நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பீரிஸ் தயாரித்துள்ள ஆவணத்தில் கட்சித் தலைவர்கள் மேலும் வெட்டும் குறைப்புகளும் செய்வதற்கு பலமான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. தமக்கு விருப்பமான அம்சங்கள் மாத்திரமே செயல்திட்டத்தில் இடம்பெற வேண்டும் என்று அவர்கள் விரும்பக்கூடும்.

ஆனால், ஜெனிவா தீர்மானமானது விரிவானதொரு செயல்திட்டத்தை மட்டுமல்ல சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் பீரிஸ் பேசும்போது நல் லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ள பரிந்துரைகள் அனைத்தையும் அரசு செயல்படுத்தப் போவதில்லை என்று கூறியிருந்தார். எனவே அவர் தயாரித்திருக்கும் செயல் திட்டத்தில் அவரால் தெரிவு செய்யப்படும் பரிந்துரைகள் மட்டுமே இடம்பெறும் என்பது தெளிவு. வரும் 28 ஆம் திகதி கட்சித் தலைவர்கள் மகாநாட்டில் அதில் இன்னும் தெரிவுகளுக்கு இடம் இருக்கின்றது.

அமைச்சர் பீரிஸ் அமெரிக்காவுக்குச் செல்லவிருப்பதையொட்டியே செயல் திட்டம் மற்றும் ஆயத்தம் இடம்பெற்று வருகின்றது. மே 18 ஆம் திகதி அவர் ஹிலாரி கிளின்ரனைச் சந்திப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. பீரிஸ் அமெரிக்காவில் கொங்கிரஸ் தலைவர்களையும் சந்திக்கவிருக்கிறார். புரூக்கிங் நிறுவனத்தில் விரிவுரையொன்றையும் நிகழ்த்துவார்.

செயல்திட்டம் தொடர்பான விவரங்கள் மட்டுமன்றி இலங்கையில் காணாமல் போய் இருப்பவர்கள் மற்றும் ஆள் கடத்தல்கள் தொடர்பாகவும் அமெரிக்க தலைவர்கள் கேள்விகள் எழுப்ப இருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

அமைச்சர் பீரிஸின் செயல்திட்டம் மற்றும் அமெரிக்க பிரயாணத்துக்கான ஏற்பாடுகள் யாவும் பல கேள்விகளை எழுப்புகின்றன. ஒன்று என்னவென்றால் அவருடைய திட்டத்தில் உள்ளடக்கப்படாத விடயங்களை எவ்வாறு அட்டவணையிடப் போகிறார்? என்பது.

மனித உரிமைப் பேரவை தீர்மானத்தில் காணப்படும் மூன்று பிரதான விடயங்களில் முதலாவதாக உள்ளது யாதெனில், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் காணப்படும் ஆக்கபூர்வமான அம்சங்களை செயல்படுத்த வேண்டும். மற்றும் அதன் சகல இலங்கையர்களுக்குமான நீதி, பொறுப்புக் கூறல் மீள் நல்லிணக்கம் என்பவற்றை உறுதிப்படுத்தும் நம்பகமான சுயாதீனமான நடவடிக்கைகளை எடுக்கும் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் அதற்குரிய சட்டப்பிரிவுகளை நிறை வேற்ற மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பவைகளாகும்.

ஆக்க பூர்வமான பரிந்துரைகள் மற்றும் நம்பகமான சுயாதீன நடவடிக்கைகள் என்பவற்றில் இலங்கை - அமெரிக்க நிலைப்பாடுகளில் வேறுபாடு உண்டு என்பதில் சந்தேகமில்லை.

இன்னொரு அம்சம் என்னவெனில் மேற்படி நடவடிக்கைகளில் இலங்கை அரசு ஈடுபடுவதற்கு அந்த அரசின் கலந்துரையாடலோடும், சம்மதத்தோடும் ஆலோசனை, தொழில்நுட்பங்களை வழங்கும்படியாக மனித உரிமைபேரவையின் ஆணையாளர் மற்றும் சிறப்பு ஆணைகளைப் பெற்றிருப்பவர்களையும், தீர்மானம் ஊக்கப்படுத்துகின்றது என்பதாகும். முந்திய தீர்மானத்தில் கலந்துரையாடலோடும், சம்மதத்தோடும் என்ற சொற்கள் இடம் பெற்றிருக்கவில்லை. இந்தியாவின் வலியுறுத்தலின் பேரில் பின்னர் இந்தச் சொற்கள் நீக்கப்பட்டன.

தீர்மானத்தை நிறைவேற்றுவதில் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடமிருந்து தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளை இலங்கை அரசு இப்போது எதிர்பார்த்திருக்கிறது.


★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணமும் நுண்காலநிலையும்

சசிகலா பத்மநாதன்,
பிரதேச செயலகம், நல்லூர்.

## புவி தினம் நேற்று




யாழ்ப்பாணத்தவர்கள் தம் வாழ்வாதாரத்துக்கும் விவசாயத்துக்கும் தரைக்கீழ் நீர்வளத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றார்கள். தரைக்கீழ் நீர்வளம் அருகிப் போகும் பட்சத்தில் இப் பிரதேசம் மனித வாழ்க்கைக்குப் பொருந்தாத பிரதேசமாக மாறிவிடும் அவலம் உள்ளது.

புவி வெப்பமடைதல், மிகக் குறைந்த மழை வீழ்ச்சி அல்லது மிகக் குறுகிய காலத்தில் மிக அதிகளவான மழை வீழ்ச்சி என்பவற்றின் மூலம் தரைக் கீழ் நீர்வளம் மீள் நிரப்பப்படுவது குறைவடைகின்றது.

அத்துடன் அதிகரித்துவரும் கிருமி நாசினி பாவனை மற்றும் வேறு காரணங்களால் தரைக் கீழ் நீர் மாசடைந்து வருவதனாலும் யாழ். குடா நாட்டின் நீர்வளம் பாதிப்படைகின்றது. இந்த நிலை தொடருமாயின் எதிர்காலத்தில் மனித வாழ்க்கைக்கு ஒவ்வாத பிரதேசமாக மாறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

யாழ். குடாநாடு கல்வியியலாளர்கள் அதிகம் வாழும் பிரதேசமாகையால் இந்த உண்மையைப் பலரும் அறிந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் இந்த பாதிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பெருமளவில் மேற்கொள்வதில்லை. இன்று உலக வெப்ப மடைதல், தரைக்கீழ் நீர்வளம் பாதிப்படைதல் என்பன உலகம் முழுவதும் பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் பிரச்சினைகளாகும்.

இவை தொடர்பாக எமது பிரதேசத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மூலம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியாது என்ற ஒரு சிந்தனையும் இருக்கலாம். ஆனால் உண்மை அதுவல்ல புவிக் கோளம் வெப்பமடைதல் உலகளாவிய பிரச்சினையாக இருந்தாலும், எமது நுண் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் எமது பிரதேசத்தில் காலநிலையில் குளிர்ச்சியை ஏற்படுத்தமுடியும்.

### புவி வெப்பமடைதலும் மழை வீழ்ச்சி குறைதலும்

இன்று உலகில் புவிவெப்பமடைதல் மற்றும் ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள துவாரம் போன்ற காரணங்களால் உலகின் மழைவீழ்ச்சி குறைவடைந்து வருவதாக உலகம் முழுவதும் விவாதிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு புவி வெப்பமடையும் போது எவ்வாறு மழை வீழ்ச்சி குறைவடைகின்றது என்பதை முதலில் நோக்குவோம்.

பொதுவாக மத்திய கோட்டை அண்டிய பகுதிகளில், புவியின் மேற்பரப்பில் உள்ள நீர் சூரியனின் வெப்பத்தால் ஆவியாகி மேலெழுகின்றது. இவ்வாறு மேலெழும் போது வெப்ப நிலையைப் படிப்படியாக இழக்கின்றது. இந்தச் செயன்முறை மூலம் முகில்கள் உருவாகின்றன. ஒரு கட்டத்தில் வளிமண்டலத்தின் வெப்பநிலை 0 பாகைக்கு குறையும் போது நீராவியானது குளிர்வடைந்து ஒடுங்கி மழைத் துளியாகின்றது. பின்னர் அத்துளிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து பாரத்தால் பூமியை நோக்கி விழுகின்றன. இதுவே பொதுவான மழை வீழ்ச்சியில் (அதாவது பருவக்காற்று, சூறாவளி மற்றும் உகைப்பு மழை) நடைபெறுகின்றன. இங்கு மழைவீழ்ச்சி ஏற்படுவதற்கு முகில்கள் மேலெழுவதும் அதன் மூலம் வெப்பமிழத்தலுமே முக்கிய காரணமாகின்றன

இவ்வாறு முகில்கள் ஒடுங்கும் தூரத்தை நிர்ணயிப்பது புவியின் மேற்பரப்பில் காணப்படும் வெப்ப நிலையின் அளவேயாகும். முகில்கள் மேலெழுவதற்கு பருவக்காற்று காலங்களில் காற்றுக்களும் சூறாவளி காலங்களில் தாழமுக்கங்களும் உகைப்பு மழை காலத்தில் புவி மேற்பரப்பில் காணப்படும் அதிகரித்த வெப்ப நிலையும் துணைபுரிகின்றன. அத்துடன் சில பகுதிகளில் உயர்ந்த மலைகளும் துணை புரிகின்றன

உதாரணமாக இலங்கையின் தென்மேற்கு பகுதிகள் அதிக மழை வீழ்ச்சியைப் பெறுவதற்கு மத்திய மலைநாடு சுவர் போல காற்றைத் தடுத்து முகில்கள் அவற்றுடன் மோதுண்டு மேலெழுவதே காரணமாகும். ஆனால் யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை உருவாகும் முகில் கூட்டங்களை மேலெழ செய்வதற்கு இயற்கையான மலைகள் இல்லை என்பதால் பருவ காலங்களில் வீசும் காற்றுக்களே இவ்வேலையைச் செய்து வருகின்றன.

இதனால்தான் இந்தப் பிரதேசம் கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு முன்னர் பருவக்காற்று மூலம் அதிக மழை வீழ்ச்சியையும் சூறாவளி மற்றும் உகைப்பு மழை மூலம் குறைவான மழை வீழ்ச்சியையும் பெற்று வந்தது.

இந்த நிலையில் புவியின் மேற்பரப்பில் வெப்பநிலை அதிகரிக்கும் போது வெப்பநிலை 0 பாகைக்கு குறைவடைவதோடு தூரமும் அதிகரிக்கின்றது. இவ்வாறு உயரம் அதிகரிக்கும் போது முகில்களும் ஒடுங்குவதற்காக மேலும் உயர வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

ஆனால் யாழ். குடாநாட்டில் அவ்வாறு முகில்களை இயற்கையாக உயர்த்தக் கூடிய அம்சங்கள் எவையும் இல்லாததாலும், பருவக் காற்றுகளாலும் அந்த உயரத்துக்கு முகில்களை உயர்த்த முடியாததாலுமே இன்று பருவ காலங்களில் பெரும்பாலும் மழை பொய்த்துப் போகின்றது.

ஆனால், தாழமுக்கம் ஏற்படும் போதும், அதிகரித்த வெப்பநிலை ஏற்படும் போதும் மிக உயரத்துக்கு முகில்கள் உயர்த்தப்படுவதால் சூறாவளி மற்றும் உகைப்பு மழை வீழ்ச்சி பெறப்படுகின்றது. இவ்வாறு பூகோள ரீதியில் வெப்ப நிலை அதிகரிக்கும் போது யாழ். குடாநாட்டிலும் வெப்பநிலை அதிகரித்து அதன் மூலம் மழை வீழ்ச்சி குறைவடைகின்றது. எனினும் எமது பிரதேசத்தின் நுண் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பாதிப்பை ஓரளவு குறைத்துக் கொள்ளலாம். அதாவது எமது பிரதேசத்தின் மேற்பரப்பைக் குளிர்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம், மழை முகில்கள் ஒடுங்கும் தூரத்தை குறையச் செய்து பருவக்காற்று காலங்களில் மழை வீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளலாம்.

### நுண்காலநிலை

நுண் காலநிலை என்பது மிக குறுகிய பகுதியில் நிலவும் காலநிலையைக் குறிக்கும். உதாரணமாக நகர மத்தியில் ஒரு பூங்கா அமைந்திருப்பின் நகரின் ஏனைய பகுதிகளில் வெப்பநிலை அதிகமாக காணப்பட்டாலும் பூங்காவை அண்டிய பகுதியிலும் பூங்காவினுள்ளும் வெப்ப நிலையானது பெருமளவில் குறைந்திருப்பதை உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏற்படும் காலநிலை மாற்றத்தை நுண் காலநிலை என்பர். இந்த நுண் காலநிலையை மாற்றியமைப்பதன் மூலம் பெரியளவில் புவி வெப்பமடைதலைத் தடுக்கமுடியாவிட்டாலும், அப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் குளிர்ச்சியான காலநிலையைப் பேணமுடியும்.

இவ்வாறான ஒரு நுண் காலநிலையை உருவாவதற்கு முழுக்க முழுக்க மனித நடத்தையே காரணமாக இருக்கின்றது. அதாவது ஒரு பகுதியில் அதிக வெப்பநிலை ஏற்படுவதற்கும் ஒரு பகுதி குளிர்ச்சியாக இருப்பதற்கும் அப்பகுதிவாழ் மனிதர்களே காரணமாக இருக்கின்றனர்.

திட்டமிடப்படாத குடியிருப்புக்கள் அதிகரித்தல், அதிகளவில் மரங்கள் வெட்டப்படுதல், தொடர்ச்சியாக அதிகரிக்கும் சனத்தொகை, விவசாயப் பிரதேசங்கள் குறைவடைதல், குளங்கள் மூடப்படுதல் போன்ற காரணங்களாலேயே யாழ். குடாநாட்டின் நுண் காலநிலையில் பெரிய தாக்கம் ஏற்பட்டு வெப்ப நிலை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது. எனவே இந்த நுண் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி அதில் குளிர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு மனிதனையும் சார்ந்ததாகும். (21ஆம் பக்கம் பார்க்க.)

# வாசிப்பு மூலம் உலக அறிவு

## உலக புத்தக நாள் இன்று

பாலசுப்பிரமணியம் தனபாலன்,
இணைப்பாளர்,
தேசிய கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்





இன்று உலக புத்தக நாள் கொண்டாடப்படுகின்றது. மனிதர்களை உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் உன்னதமான செயற்பாடு வாசிப்பு. வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான் என்ற கருத்தியல் பற்றிச் சிந்திப்போர் வாசிப்பதால் ஒரு நிலைப்பட்டு ஆத்மீக ஆற்றலைப் பெறுகின்றனர் என நவீன உளவியல் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. வாசிப்பின் மூலம் வாழ்வுக்கு மகத்தான சக்தி கிடைக்கின்றது. இதனைத் தூண்டும் வகையில் உலகளாவிய ரீதியில் பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. உலக புத்தக நாள் ஏப்ரல் 23 ஆம் திகதி ஆகிய இன்று எமது பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காகத் தொடங்கும் நாளில் கொண்டாடப்படுகிறது. இந் நாளில் மாணவர்களுக்கு உலக புத்தக நாள் தொடர்பான சிந்தனைகளை, கருத்துக்களை, செயலமர்வுகளை, விழிப்புணர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

அறிவுப் பொருளாதாரம், அதற்கு அடிப்படையான எண் இலக்கப் புரட்சி (Digital Re volution) கணினி மையம் ஒளி இழைத் தொடர்பு. (Opti cal fibre Communications) வழித் தகவல்கள் பரிமாற்றம் நிகழும் இன்றைய சூழலில் கல்வி விருத்தி என்பது புதிய ஒரு பரிணாமம் அடைந்துள்ளது. இன்றைய சூழலில் வாசிப்பு என்பது உலக வாழ்வின் நுணுக்கங்களை கூர்மைப் படுத்திக்கொள்வதற்காகப் பயன்படுத்தும் உன்னத சாதனமாக உள்ளது. 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வியின் நோக்கை யுனெஸ்கோ நிறுவனம் கற்பதற்காக ஒன்றிணைதல், மாற்றத்திற்காக ஒன்றிணைதல், வாழ்வதற்காக ஒன்றிணைதல் என எடுத்தியம்பி இதற்கு இளையவர்களைத் தயார்ப்படுத்த வாசிப்பதற்காக ஒன்றிணைதல் செயற்திட்டங்களை இன்றிலிருந்து நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது. உலகளாவிய ரீதியில் பிரசல்ஸ் நகரில் 1971 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி எழுத்தாளர்கள், நூலகர்கள், பதிப்பாசிரியர்கள், புத்தக விற்பனையாளர்கள் கல்வியியலாளர்கள் ஒன்றுகூடி ஒரு முக்கியமான மாநாட்டை நடத்தினார்கள். இதில் கல்வி - வாசிப்பு - அறிவியல் தகவல்களைப் பரப்பும் நோக்கில் 10 கட்டளைகளை உருவாக்கினர். இந்தப் பத்துக் கட்டளைகளும் அனைத்து நாடுகள் மட்டத்திலான வாசிப்பு நாளுக்கான ஆரம்பமாக அமைந்தன. அப் பத்துக் கட்டளைகளும் வருமாறு.

1. வாசிப்பு மூலம் உலக அறிவு
2. அனைவருக்கும் வாசிக்கும் உரிமை
3. புத்தக வெளியீட்டின் அவசியம்
4. எழுத்தாளர்களை உருவாக்கும் சமூகச் சூழல்
5. புத்தக பதிப்புத் தொழிலை விருத்தியாக்கல்
6. நூலகங்களின் வசதிகளை மேம்படுத்தல்
7. நூலகங்களே நாட்டின் கருவூலங்கள்
8. பதிப்பாளர், எழுத்தாளர், வாசர்களின் உயிர்த் துடிப்பான இணைப்பு
9. புத்தகங்களைப் பராமரித்தலும் பரிமாறலும் ஆவணப்படுத்தலும்.
10. புத்தகங்கள் வாங்கும் கலாசார மேம்பாடு

இதன் தொடர்ச்சியாக [illegible] விழிப்புணர்வுகளின் [illegible] 1995 ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் கல்வி விஞ்ஞான மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO) ஏப்ரல் 23 ஆம் திகதி "உலக புத்தக நாளை" அறிவித்தது. ஏப் ரல் 23ஆம் திகதியில் இந்நாள் கொண்டாடப்படுவதற்கு முக்கிய காரணம்: நாடக இலக்கிய மேதை, பல நூல்களை எழுதிய சேக்ஸ்பியர் பிறந்த தினமும் (23 ஏப்ரல் 1616) இவ்வுலகை நீத்த நாளும் அதுவே. மேலும் உலக இலக்கிய மேதை சேர் வாண்டைஸ் (1616), மாபெரும் உலகக் கவிஞர்கள் வில்லியம் வோர்ட்ஸ், றொபேட் றுக் (1915), இந்திய திரைப்படச் சிற்பி சக்தியஜித்ரே (1992) ஆகியோர் இவ்வுலகை விட்டு மறைந்த நாள் ஏப்ரல் 23 என்ற வகையிலும் அவர்கள் எழுதிய புத்தகங்களை நினைவு கூரும் வகையிலும் இந்நாள் உலக புத்தக நாளாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் சிறார்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்க இந்நாளில் பல செயற் திட்டங்களை நடைமுறைப் படுத்தின. புதிய கவர்ச்சிகரமான நூல்கள் வெளியிடப்பட்டன. அன்றைய தினம் நூல்களை வாங்குவோருக்கு சிறப்புக் கழிவுகள் வழங்கப் [illegible] பரிசுகளாகக் கொடுக்கப் [illegible] எழுத்தாளர்களின் கையெழுத்துக்களுடன் நூல்கள் விநியோகிக்கப்பட்டன. நூல்களின் கண்காட்சிகள், சிறப்பு நிகழ்ச்சிகள், விழிப்புணர்வூட்டும் நடமாடும் நூலகங்கள், நடமாடும் நூல் விற்பனையாளர்கள், பல்வேறு விளம்பரங்களின் ஊடாக நூல்களை வாசகர்களைத் தேடி விநியோகிக்கும் கவர்ச்சியான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எங்கும் உலக புத்தக நாள் நிகழ்வுகளாக இவை இடம்பெறுகின்றன. அத்துடன் பாடசாலைகள் தோறும் புதிய நூல்களின் அறிமுகம், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மலிவு விலையில் நூல் விநியோகம் போன்ற செயற்பாடுகள் அமுலாகி வருகின்றன.

பல்வேறு ஊடகங்களிலும், உலக புத்தக நாள் தொடர்பான நிகழ்ச்சிகள் விழிப்புனர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கியமாக பத்திரிகைகளின் மூலம் விழிப்புணர்வு நிகழ்வுகள், கண்காட்சிகள், கலந்துரையாடல்கள், செய்திகள், சிறப்புக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

புத்தகங்களை வாசிப்பதுடன் அவற்றைப் பாதுகாப்பாக பேணும் முறைகளைப் பெற்றோர், ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுவதுடன் ஒவ்வொரு வீட்டிலும் நூலகங்கள் அமைக்க இதனைத் தொடக்க நாளாகக் கொள்வோம். பாடசாலை நூலகங்களை வலுவூட்டுவோம்.

இன்றைய நாள்களில் எமது பாடசாலை நூலகங்களில் நூல்களை - நூலகங்களை சிறப்பாக பயன்படுத்தும் முறைகள் காணப்படவில்லை. இதனையே கூறிக்கொண்டிராமல் எல்லோரும் இணைந்து பாடசாலை நூலகங்களை முறைமைப் படுத்திப் பயன்படுத்தும் மனப்பாங்கை மாணவர்களிடையே ஏற்படுத்துவோம். பாடசாலை நூலகங்களை முறையாகப் பயன்படுத்துபவர்களே பொது நூலகங்களைப் பயன்படுத்தும் மனப்பாங்கைப் பெறுவர். நூல்களை - புத்தகங்களை வாசிக்கும் மனப்பாங்குடையவர்கள் நல்ல மனிதர்களாகப் பண்பாட்டாளர்களாக, கலாசார விழுமியங்களை மதிக்கும் மனப்பான்மை உள்ளவர்களாகத் திகழ்கின்றார்கள். இவர்களைப் போல் எம் இளம் சிறார்களை உருவாக்க இந்நாளில் உறுதிபூண்டு செயற்படுவோம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையும் காதும்

"உங்கள் பையன் எப்படி இருக்கிறான்?" என்று ஒருத்தர் கேட்டார். "அவன் எதைச் சொன்னாலும் காதிலே வாங்க மாட்டேன் என்கிறான்; அவன் பாட்டுக்கு போகிறான், வருகிறான்" என்று அலுத்துக் கொண்டார் அவனது தந்தை.

பெரியவர்கள் கூறுவதை சிறுவர்கள் கேட்பதில்லை என்பது ஒரு குறை. பெரியவர்கள் சொல்வது சிறுவர்கள் காதில் விழுவதில்லை என்பது ஒரு குறை. இது கொஞ்சம் கவனிக்க வேண்டிய விடயம். ஒரு குழந்தைக்கு காது சரியாகக் கேட்காது என்றால் நாம் தான் கவனித்துப் பார்த்துக் கண்டுபிடிக்க வேண்டும். அதுவாக எங்களிடம் வந்து "அப்பா எனக்கு காது கேட்கவில்லை;வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு போங்கள்" என்று சொல்லமாட்டாது.

ஒரு குழந்தைக்கு காது சரியாகக் கேட்கிறதா, இல்லையா என்பதை முன்கூட்டியே நாம் தெரிந்து கொள்வதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. உங்கள் குழந்தைகளைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்.

அடிக்கடி தடிமன், காதிலே அரிப்பு ஏற்படுகிறதா? மூக்கு எரிவாகவும் சதை அலர்ச்சியும் இருக்கிறதா? வாயிலிருந்து எச்சில் வடிகிறதா? குழந்தை வாயினாலே சுவாசிக்கிறதா? பற்கள் முன்தள்ளி வளர்கின்றனவா? இவையெல்லாம் அதற்கு அறிகுறி.

உங்கள் குழந்தை உங்களை உரக்கப் பேசச் சொல்கிறானா? அடிக்கடி கேள்வி கேட்கிறானா? சாப்பிடும்போது கவனமில்லாமல் இருக்கின்றானா? படிப்பிலே போதுமான முன்னேற்றம் இல்லையா? வகுப்பில் சரியாகக் கவனிப்பது இல்லையா? இவைகள் இருந்தால் ஆரம்பத்திலேயே வைத்தியரிடம் அழைத்துப் போய் சிகிச்சையை ஆரம்பித்துவிட வேண்டும்.

குழந்தைக்கு காது சரியாக கேட்கவில்லை என்றால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? காது கேட்கவில்லை என்பதற்காகக் குழந்தைக்கு முன்னால் சத்தம் போட்டு பேசக் கூடாது. மெதுவாகப் பேச வேண்டும். குழந்தையைப் பார்த்துப் பேசுங்கள். உங்கள் உதட்டு அசைவுகள் அவனுக்கு உதவும். நீங்கள் வாயில் வெற்றிலை பாக்கு சாப்பிட்டுக் கொண்டோ அல்லது புகைபிடித்துக் கொண்டோ பேசாதீர்கள். அப்படிப் பேசினால் அவனால் உங்கள் உச்சரிப்பை சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. ஒரு வார்த்தை கூறும்போது அவனுக்குப் புரியவில்லை என்றால் அதே வார்த்தையை மறுபடியும் சொல்லுங்கள். அவனுக்கு நீங்கள் கூறிய வார்த்தை புரியவில்லை என்று நினைத்துக்கொண்டு திருப்பிச் சொல்லும் போது மறுபடியும் அதே அர்த்தம் வரக்கூடிய வேறு வார்த்தையைச் சொல்லக்கூடாது.

இப்படி நடந்துகொண்டால் அவனுக்கு மனத்திடத்தை ஏற்படுத்த முடியும். இல்லை என்றால் அவனுக்கு தாழ்வு மனப்பான்மை வந்துவிடும்.

குழந்தைக்கு காது கேட்காவிட்டால் ஆரம்பத்திலேயே வைத்தியரிடம் அழைத்துப் போனால் குணப்படுத்திவிடலாம். பின்னர் பார்க்கலாம் என்று அலட்சியமாக இருந்தால்தான் கஷ்டம்.

சிலபேர் கோபத்தில் சின்னப் பிள்ளைகளது காதைப் பிடித்து திருகுவார்கள். அது மிகவும் தப்பு. காது கையோட வந்துவிட்டால் என்ன செய்வீர்கள்? ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள். ஒரு வீட்டிலே அப்பா அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார் "இதோ பார் நாளைக்கு காலையிலே என்னை சீக்கிரம் எழுப்பிவிடு! நான் செங்கல்பட்டு வரைக்கும் போக வேண்டி இருக்கிறது" என்று சொன்னார்.

இதை அவர்களுடைய பையன் காதிலே வாங்கிக்கொண்டிருந்தான். அப்பாவுக்கு சிரமம் வேண்டாமென்று நினைத்து அவனே காலையில் யாருக்கும் தெரியாமல் எழுந்து புறப்பட்டு செங்கல்பட்டுக்குப் போய்விட்டான். மாலைநேரமாகத் திரும்பி வந்தான். அப்பா பையனைக் காணாமல் தேடிக்கொண்டிருந்தார்.

மாலைநேரமாகப் பையனைப் பார்த்ததும் "எங்க போயிட்டு வந்தாய்?" என்று கோபமாகக் கேட்டார்.

"செங்கல்பட்டுக்குப் போய்விட்டு வருகிறேன், நீங்கள் வீணாக அலைய வேண்டாம் என்பதற்காக" என்று கூறியவாறு இழுத்தான்.

"எதற்காகப் போனாய்" என்று அதட்டினார் அப்பா.

"அதுதான் அப்பா நீங்கள் நேற்று அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தீர்களே. அதைக் காதிலே வாங்கினேன்... உங்களுக்காக நான் போய்விட்டு வந்தேன்" என்றான்.

உடனே எந்தக் காதில் வாங்கினாய் என்று சொல்லிக் காதைப் பிடித்துத் திருகினார். அந்தக் காது கையோட வந்துவிட்டது.

இது நடந்து சிறிது நாள் கழிந்து அந்த அப்பாவும் மகனும் கடைக்கு நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். எதிரிலே ஒரு நாய் ஓடிவந்தது. அதற்கு இரண்டு காதும் இல்லை.



"என்ன இது.. இதற்கு இரண்டு காதும் இல்லை" என்றார் அப்பா.

"அது இரண்டு தடவை செங்கல்பட்டுக்கு போய்விட்டு வந்திருக்கும்" என்றான் அவரது மகன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# இடப்பெயர்வின் போது கைகொடுத்த ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை

(கடந்தவாரத் தொடர்ச்சி)



■ சோபனா

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலைக்கான விளையாட்டு மைதானம் இல்லாத போதும் பாடசாலை சமூகத்தின் ஒன்றிப்பான சேவையினால் இந்தப் போட்டி நடத்தப்பட்டது. கட்டுக்கோப்பான பாடசாலையின் செயற்பாடுகளால் பாடசாலை மேலும் பல அபிவிருத்திகளைக் காணத் தொடங்கியது.

1987 ஆம் ஆண்டு முதல் பாடசாலையின் அதிபராக திருமதி பாக்கியம் கந்தசாமி கடமையாற்றினார்.

மாணவர்களின் கட்டுக்கோப்பான ஒங்குகளுக்கு ஏற்ற முறையில் பாடசாலைச் சீருடை, கழுத்துப்பட்டி, காலணி, மாணவர் முதல்வர் சின்னம், பாடசாலைக்கொடி, பாடசாலைக்கீதம் போன்றவை ஒழுங்கு செய்யப்பட்டு மாணவர்கள் அதற்கேற்ற முறையில் வழி நடத்தப்பட்டனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் பாடசாலையின் கட்டடப் பணிகள் சிறிது சிறிதாக நிறைவேற்றப்பட்டன.

1991 ஆம் ஆண்டு பாடசாலையின் அதிபராக யோ.யேசுதாசன் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து வீ.கணேசராசா, 1992 ஆம் ஆண்டு திருமதி ச.சோமலிங்கம் ஆகியோர் பாடசாலை அதிபர்களாகப் பொறுப்பேற்று சிறப்பான வழி நடத்தல் சேவையைச் செய்தனர்.

மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், ஊர்ப்பொதுமக்கள், அபிவிருத்திச் சங்கத்தினர் நலன் விரும்பிகள் என பலருடைய ஒத்துழைப்புடனும் பாடசாலை மெல்ல மெல்ல அபிவிருத்தியடையத் தொடங்கியது.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என தமது திறன்களை விருத்தியடையச்செய்து கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் திறமையுடைய மாணவர்களாகத் திகழ்ந்தனர்.

பாடசாலைக்கென நிரந்தர கட்டிடம் 1999, 2001 ஆகிய ஆண்டு காலப் பகுதிகளில் அக்காலத்தில் சேவையில் இருந்த அதிபர்களால் அமைக்கப்பட்டு கட்டட அபிவிருத்திகள் இடம்பெற்றன.

2001, 2005 ஆகிய காலப் பகுதியில் அதிபர்களாகக் கடமையாற்றிய த.தர்மலிங்கம், அ.ஸ்ரீகாந்தன் ஆகியோரது காலப்பகுதியில் பாடசாலை பல இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னேற்றம் கண்டுவந்தது.

அதனைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சிறில் சுகந்தரன் அதிபருடைய காலப்பகுதியிலேயே பாடசாலையில் தற்காலிக மேடை அமைக்கப்பட்டு முதன் முதலாக தமிழ்த் தின விழா நடத்தப்பட்டது.

பாடசாலையின் ஆரம்ப காலம் முதல் அதிபராகக் கடமையாற்றியவர்களின் ஒவ்வொரு பங்கும் பாடசாலையில் அபிவிருத்தியினை நோக்கியதாக இருந்தபடியால் பாடசாலை மட்டுமல்லாது மாணவர்களும் பொதுப் பயன் பெற்றனர்.

ஒவ்வொரு வகுப்பு ஆசிரியர்களின்தும் கடமையுணர்வு வழிகாட்டல் பாடசாலை மாணவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்தபடியால் சிறந்த முகாமைத்துவம், ஒழுக்கக் கோப்பு யாவும் திறம்பட இடம்பெற்றன.

ஆனைக்கோட்டைப் பிரதேசத்தில் சிறப்பு மிக்க பாடசாலையாகத் திகழ்வதற்கு பாடசாலையின் வளர்ச்சி பேருதவியாக இருந்தது.

2008 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும் திருமதி நாகேஸ்வரி சந்திரகுமார் பாடசாலையில் ஓர் ஆசிரியராக இருந்து பதவியுயர்வு பெற்று அதிபராகக் கடமையாற்றுவதன் காரணமாக பாடசாலையின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கு தனது சேவையை அர்ப்பணித்து வருகிறார்.

1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற போர்ச்சூழலில் பாடசாலையில் மாணவர் தொகை வீழ்ச்சிடையந்தாலும் 2004 ஆம் ஆண்டில் 700 மாணவர்களும், 2005 ஆம் ஆண்டில் 660 மாணவர்களும் 2006 ஆம் ஆண்டில் 665 மாணவர்களும் 2008 ஆம் ஆண்டில் 557 மாண்வர்களும், 2011 ஆம் ஆண்டில் 670 மாணவர்களும் கற்று வந்த இப் பாடசாலை தற்போது 620 மாணவர்களுடன் இயங்கிவருகின்றது.

பாடசாலை அதிபர் திருமதி நகுலேஸ்வரி சந்திரகுமாரின் வழிகாட்டலுடன் 30 ஆசிரியர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது பல இடம்பெயர்ந்த மாணவர்களின் கற்றலுக்குக் கைகொடுத்த பெருமை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு உள்ளது. இந்து, கிறிஸ்தவம் என மத வேறுபாடு இன்றி மாணவர்கள் தமது வழிபாடுகளை மேற்கொண்டு சிறந்த நற்சிந்தனையாளர்களாகத் திகழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் அதிகளவானோர் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகள் என்பதால் மாதந்தோறும் மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடப்படுவதுடன் பிள்ளைகளின் கற்றல் தொடர்பான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி பெற்றோர்களின் ஒத்துழைப்புகளுடன் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

> பாடசாலைக்கு என தனியான விளையாட்டு மைதானம் இல்லாமை மாணவர்களின் விளையாட்டுத் திறன்கள் மழுங்கடிப்பதற்கு ஒரு காரணமாக உள்ளது. எனினும் மாணவர்களின் சாதனைகள் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என உயர் வடைந்து வருகின்றன.

மனித நேயமும் சூழலுடன் ஒன்றித்த வாழ்வும் ஆன்மிக நெறி வழுவாமையும் உடைய நற்பிரஜைகளாகக் கொண்ட சமூக உருவாக்கம் எனும் தூர நோக்குக்கு. அதற்கு அமைவாகவும் மனித நேயத்தினூடாக ஆன்மிக நெறிகளையும் நவீன தொழில் நுட்ப சக்திகளையும் பயன்படுத்தி மாறிவரும் சமூக சவால்களையும் எதிர் கொள்ளக்கூடிய சூழலுக்கு இசைவான நடத்தை மாற்றத்தை அனைவரது உச்சப் பங்களிப்புடன் உருவாக்கிக் கொள்ளல் எனும் பணிக்கூற்றுக்கு அமைவாகவும் கல்வியே கருத்தனம் எனும் வாக்குக்கு ஏற்ற முறையாலும் பாடசாலையில் ஒவ்வொரு செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

பாடசாலைக்கான கட்டப் பணிகள் ஓரளவேனும் நிறைவேற்றப்பட்டு வந்தாலும் பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாமை பாடசாலைக்கு ஓர் குறையாகவே உள்ளது.

மாணவர்களின் விளையாட்டுத் திறன்கள் மழுங்கடிப்பதற்கு இது ஒரு காரணமாக உள்ளதால் பாடசாலை சமூகம் சில இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் மாணவர்களின் சாதனைகள் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என உயர்வடைந்து வருகின்றன.

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பது போல் கிடைக்கும் வளங்களைக் கொண்டு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை பூரணமாக நிறைவேற்றி வரும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை இடைவிடாது தனது கல்விப் பணிகளை வழங்கும் என்பதே பாடசாலை சமூகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியைக் கூட பார்க்காத சுஷ்மா தீர்வை எவ்வாறு பெற்றுத்தருவார்?

## அரியநேத்திரன் எம்.பி. கேள்வி

**இந்திய நாடாளுமன்றக் குழு வடக்கு, கிழக்குக்கான தங்களது பயணங்களை மின்னல் வேகத்தில் நிறைவு செய்ததுடன் இலங்கை அரசின் உறவினைப் பலப்படுத்தும் நிகழ்ச்சிகளிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தது.**



மட்டக்களப்பு,ஏப்.23

இலங்கை வந்த சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழுவால் மட்டக்களப்பில் தாக்குதலுக்கு உள்ளாகிய காந்தி சிலையைக் கூட பார்க்க முடியவில்லை என்றால் தமிழர்களின் உண்மை நிலையை அறிந்து எவ்வாறு தீர்வைப் பெற்றுத்தர முடியும்? என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இந்தியக் குழுவின் இலங்கை வருகை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியக் குழு கிழக்கு மாகாணவருகையின் போது சம்பூர் அகதிகள் உட்பட கடந்த காலங்களில் போரால் பாதிக்கப்பட்ட படுவான்கரை பிரதேச மக்களையும், அண்மையில் தலை துண்டிக்கப்பட்டு புனரமைக்கப்பட்ட மகாத்மா காந்தி சிலையையும் பார்வையிடுவார்கள் என பலரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் நடந்தது என்னவென்றால் இந்தியக் குழுவால் இலங்கையின் நிகழ்சி நிரலை மீறி செயற்பட முடியாமல் போயுள்ளது.

தமிழர்களின் உண்மை நிலையை அறிந்து கொண்டு செல்வதற்கே இந்தியக் குழு இலங்கை வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இலங்கை வந்த சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழு வடக்கு, கிழக்குக்கான தங்களது பயணங்களை மின்னல் வேகத்தில் நிறைவு செய்ததுடன் இலங்கை அரசின் உறவினைப் பலப்படுத்தும் நிகழ்ச்சிகளிலேயே அதிக கவனம் செலுத்தி யிருந்தது.

இந்திய - பௌத்த உறவுகளைப் பாராட்டிய சுஷ்மா சுவராஜ் ஜெனிவாத் தீர்மானத்தின் மூலம் இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள விரிசலை சரிசெய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்களா? என்ற சந்தேகங்களையே எங்களுக்கு தோற்றுவித்துள்ளது. எங்களை பொறுத்த மட்டில் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழுவின் வருகை இந்தியாவுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்த இலங்கை அரசை திருப் திப்படுத்துவதற்கான நல்லுறவு வருகையாகும். - என்றார். (ச)

## சட்டவிரோத மது போத்தல்களுடன் இருவர் கைது



**இரகசியத் தகவல்களை அடுத்தே சட்டவிரோத மதுப் போத்தல்கள் கைப்பற்றப் பட்டன.**

எருவில்,ஏப்.23

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்ட வெளிநாட்டு மது போத்தல்களை கைப்பற்றியுள்ளதாக மாவட்ட மதுப் வரித் திணைக்கள அத்தியட்சகர் எம்.சுசாதரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தமக்குக்கிடைத்த இரகசியத்தகவலின் பேரில் மேற்கொண்ட நடவடிக்கையில் இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மதுப் போத்தல்களுடன் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் இன்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (ச-31)

## யானை தாக்கி ஆலயம் சேதம்



அம்பாறை,ஏப்.23

அம்பாறை , சங்கமன் கண்டி - காட்டுப்பிள்ளையார் ஆலயத்தின் கட்டடத்தை யானை தாக்கி சேதப்படுத்தியுள்ளது.

இந்த ஆலயத்தில் இரவு வேளையில் வந்த யானை ஆலய கட்டடத்தின் சுவர் மற்றும் கூரைகளை உடைத்துச் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது. இதனால் ஆலயத்தின் தளபாடங்கள் மற்றும் பொருள்களும் சேதமடைந்துள்ளன.

இந்த ஆலயம் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பும் நான்கு தடவைகள் யானைகளின் தாக்குதலினால் பாதிப்புக்குள்ளாகிருந்தது.

சுமார் 200 வருடங்கள் பழமை வாய்ந்ததெனக் கூறப்படும் இந்த ஆலயத்துக்கு தூர பிரதேசங்களைச் சேர்ந்த பக்தர்களும் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பொருட்டு வந்து செல்கின்றனர்.

இந்தப் பகுதியில் யானைகளின் தாக்குதலில் சிலர் கொல்லப்பட்டதோடு, குடியிருப்பு வீடுகளும் கடுமையான சேதங்களுக்குள்ளாகி வருகின்றன. சங்கமன் கண்டி பகுதியில் யானைப் பாதுகாப்பு வேலியை அமைத்துத் தருமாறு இந்தப் பிரதேச மக்கள் நீண்ட காலமாக கோரிக்கைகளை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பஸ் விபத்தில் 11 பேர் காயம்

எருவில்,ஏப்.23

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதான வீதி, மயிலம்பாவெளியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் 11 பேர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு தலைமையக போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து புல்லுமலை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸும் மூதூரிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இரு பஸ்களின் சாரதிகள் உட்பட 11 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-31)



வாழைச்சேனை பொலிஸின் ஏற்பாட்டில் பொலிஸ் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வாழைச்சேனை சுங்காங்கேணி அரசினர் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.இந்த நிகழ்வில் வாழைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு, வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.ஈ.ஜயவீர உட்பட பிரமுகர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர்.

## மட்டு.அரச சார்பற்ற நிறுவன ஊழியரின் தகவல்கள் இராணுவத்தால் சேகரிப்பு

### அச்சமடைந்த நிலையில் அவர்கள்

மட்டக்களப்பு,ஏப்.23

மட்டக்களப்பு, கல்லடி பிரதேசத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அரச அலுவலகங்களுக்கும் சென்று அங்கு பணிபுரிகின்ற ஊழியர்களின் விவரங்களை இராணுவத்தினர் சேகரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்களைப் பற்றியே அதிகமான விவரங்களைச் சேகரிக்கின்றனர். இந்த நிறுவனங்களில் கடமைபுரிகின்ற ஊழியர்கள் தொடக்கம் நிதியுதவி அளிக்கின்ற வெளிநாட்டு நிறுவனங்கள் வரை சகல விவரங்களையும் சேகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தினரின் இந்தச் செயற்பாட்டினால் நிறுவனங்களில் கடமைபுரிவதற்கு அச்சமாக இருப்பதாக ஊழியர்கள் தெரிவிக் கின்றனர்.

தங்களையோ அல்லது தாங்கள் கடமைபுரிகின்ற நிறுவனங்களைப் பற்றியோ ஏதாவது விவரங்கள் இராணுவத்தினருக்கு தேவையாக இருந்தால் பிரதேச செயலகத்துக்குச் சென்று அந்த விவரங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலாளருக்கோ, கிராம சேவையாளருக்கோ தெரியாமல் இராணுவத்தினர் இவ்வாறு விவரங்களைப் பெற்றுக்கொள்வதானது, தங்களை அச்ச நிலைக்கு இட்டுச் செல்வதாக அரசசார்பற்ற நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

## அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியாவுக்கும் அதிக பங்கு

மட்டக்களப்பு,ஏப்.23

மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு விடயத்தில் இந்தியாவுக்கு அதனை தோற்றுவித்ததன் அடிப்படையில் அதிகமான வகிபங்கு உள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்ற இந்திய நாடாளுமன்ற குழுவினரை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சந்தித்து உரையாடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபை முறைமையினை தோற்றுவித்த பெருமை இந்திய அரசுக்குத்தான் உரியது. 1987ஆம் ஆண்டு அப்போதைய இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி மற்றும் இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன ஆகிய இருவருக்குமிடையில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தோற்றம் பெற்றதே இன்றைய மாகாண சபை முறைமை யாகும்.

இந்த மாகாண சபைக்கென அரசியல் யாப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும். அதனையே நாமும் வலியுறுத்தி வருகின்றோம். அதேவேளை இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தேவையும் தற்போது [illegible] [illegible] அதிகாரப்பகிர்வு விடயத்தில் இந்தியாவுக்கு அதனை தோற்றுவித்ததன் அடிப்படையில் அதிகமான வகிபங்கு இருக்கின்றது.

இந்திய அரசினால் திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்கான ரயில் போக்குவரத்துக்கான பஸ் , கிழக்கு மாகாணத்தில் தகவல் தொழிநுட்ப அறிவை விருத்தி செய்யும் நோக்கில் 1260 கணினிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான இயந்திரங்களைக் கொண்டமைந்த தொழில் பயிற்சி நிலையம், கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு [illegible] என்பனவற்றை [illegible] கொடுத்துள்ளது.- என்றார். (ச)

## வெவ்வேறு விபத்தில் மூன்று பேர் சாவு

கண்டி,ஏப்.23

ஹற்றன் - கினிகத்தேனை பிரதான வீதியின் கெட்டவலவத்தை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த வீதியில் பயணித்த வானும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் கினிகத்தேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். கொட்டகலைப் பிரதேசத்தைச் சேர்ந்த முத்துப்பிள்ளை தவசிவாயம் பிள்ளை (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

இதேவேளை, கொட்டகெதெனி - திக்லந்த சந்தியில் வான் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் 47 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் - ஹேன்யாய பகுதியில் லொறியொன்று சைக்கிளுடன் மோதியதில் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்தை அடுத்து பிரதேசவாசிகள் லொறியின் சாரதியை மடக்கிப்பிடித்து தாக்கியதில் அவர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சகல முயற்சிகளிலும், எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும். வெற்றிகள் பிற விவகாரங்களிலும், ஈடுபட ஏதுவானதாக இருக்கும். அரச சம்பந்தப்பட்ட காரியங்களில், கவனமுடன் செயற்படுதல் நல்லது. இல்லறத் துணையின் வகையில், ஆதாயங்களை எதிர்பார்க்கலாம். பெண்களுக்கு பொறுப்புகள் கூடும்.

**இடபம்:** உங்களின் சிந்தனைகள் தெளிவாகும். செயற்பாடுகளில் சிறப்புகள் கூடும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில்நுட்ப உதவிகளுக்காக, சிலரின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பணிகளின் பளு கூடுதலாக இருக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சி மற்றும் திட்டங்களை, தகுந்த முறையில் கொண்டு செல்ல முடியும். நல்லவர்கள் நட்பு கிடைக்கும். என்றைக்கோ எதிர்பார்த்த, ஒரு முக்கியமான காரியம் இன்று நடக்கும். பழைய விவகாரம் ஒன்று அதிக மன உளைச்சலை ஏற்படுத்திய போதும், நல்லதொரு தீர்வு கூடவே ஏற்படும்.

**கடகம்:** மன சஞ்சலம் அகலும், தைரியமாக எடுக்கும் எந்த முடிவும், அற்புதமான பலனைத் தரும். தெய்வ வழிபாடு சிறப்பான வழியைக் காட்டும். பணம் பல விதத்தில் வரும். பெற்றோருக்காக, சில பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**சிங்கம்:** நினைத்த காரியத்தை பிரச்சினை இல்லாமல் சாதிக்கலாம். சொத்து விடயமாக அல்லது நீதிமன்றம் விடயமாக, நிலவிய வில்லங்கம் விலகும். தெய்வ நம்பிக்கை அதிகமாகும். வாகன யோகம் அமையும். வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றி பெறும். கூட்டு தொழில் முயற்சிக்கு ஆர்வம் கொள்வீர்கள்.

**கன்னி:** ஒவ்வொரு விடயத்தையும் திட்டமிட்டுச் செயற்படுவதால், பிரச்சினை இல்லாமல் முடியும். பெரியவர்களின் ஆலோசனையும், தக்க சமயத்தில் உறனவினரின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சில எதிர்ப்புகள், பொறாமைகள் ஏற்பட்டபோதும், தங்களின் சாதுரியத்தால் வென்று காட்டுவீர்கள். மற்றவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பு கொடுப்பீர்கள்.

### நாளை

சித்திரை 12 செவ்வாய்க்கிழமை 24.04.2012
திதி: திருதியை மு.இ. 07.11 வரை
நட்சத்திரம்: ரோகிணி முழுவதும்
சுபநேரம்: 10.30- 12.00 வரை
ராகு காலம்: 03.00-04.30 வரை

**துலாம்:** எந்தக் காரியத்தில் இறங்கினாலும், பொறுமையாக இருப்பது நல்லது. திட்டம் போட்டபடி நடக்கவில்லை என்றால், அது நன்மைக்கே என்று எண்ணிக் கொள்ளவும். மேலும், அவசரப்பட்டு எடுக்கும் எந்த ஒரு முடிவுகளையும், மறுபரிசீலனை செய்து கொள்ளுங்கள். அதிகாரிகளின் தொடர்புகளை, பக்குவமாக பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படும் சவால்களை தைரியமாகச் சந்தித்து வெற்றி கொள்வீர்கள். வீட்டிலும், வெளியிடங்களிலும் வார்த்தைகளில் நிதானம் கலந்திருக்கட்டும். புதிய தொழில் விடயங்களில் தகுந்த ஆராய்ச்சி, ஆலோசனையை எடுத்துக் கொள்ளுங்கள்.

**தனுசு:** இன்று, சிந்தித்து செயற்படுவதால் பிரச்சினை ஏற்படாது. முன்பின் தெரியாதவர்களால் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தைச் சேர்ந்த ஒரு முக்கியமான நபர் விடயமாக பணச் செலவும், அலைச்சலும் இருக்கும். புதிய முயற்சி, கூட்டு நடவடிக்கை என, அவசரப்பட்டுக் கொண்டிருப்பீர்கள், அதை தவிர்த்து, முதலில் இருப்பதை சரி செய்துகொள்ளுங்கள்.

**மகரம்:** நல்லதும், கெட்டதும் மாறி, மாறி நடக்கும். புகழ், கௌரவம், செல்வாக்குக் குறையாது. சொத்து விஷயமாக எடுக்கும் முயற்சி நல்லபடியாக முடியும். பொதுக்காரியங்களில் ஈடுபடும் போதும், மற்றவர்களுக்காக பணிகளை மேற்கொள்ளும் போதும், மிகுந்த விழிப்புடன் செயற்படுங்கள்.

**கும்பம்:** திட்டமிட்ட பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். சமூகத்தில் மதிப்பு மரியாதை கூடும். கொடுத்த வாக்கினை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். அரச வகையில், எதிர்பார்க்கும் விடயங்கள் எளிதாக முடியும். பண நிலையில் தேவைக்கு ஏற்ப வரவுகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**மீனம்:** ஏற்படும் சிந்தனைகளும், சந்திப்புகளும் மிக பயனுள்ளதாக இருக்கும். மனதில் அமைதியும், இனிமையான சூழ்நிலையும் அதிகம் காணப்படும். கடன் மற்றும் வழக்குகளுக்கு நல்லதொரு தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் சில நிகழ்ச்சிகள் மனநிலையை பாதித்தபோதும், பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 1 | | | 9 | 4 | |
| 8 | 4 | | | 3 | 6 | | 2 | |
| | 1 | | | | 9 | | 5 | 8 |
| 9 | 6 | 1 | | 2 | | 4 | | |
| | | | | | | | | |
| | | 8 | | 7 | | 2 | 1 | 9 |
| 5 | 8 | | 4 | | | | 6 | |
| | 9 | | 2 | 6 | | | 8 | 7 |
| | 2 | 6 | | | 1 | | 9 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 7 | 6 | 4 | 5 | 3 | 9 | 1 |
| 1 | 5 | 3 | 8 | 9 | 2 | 7 | 4 | 6 |
| 4 | 6 | 9 | 3 | 7 | 1 | 2 | 8 | 5 |
| 2 | 8 | 5 | 1 | 3 | 4 | 6 | 7 | 9 |
| 3 | 7 | 4 | 2 | 6 | 9 | 1 | 5 | 8 |
| 9 | 1 | 6 | 7 | 5 | 8 | 4 | 2 | 3 |
| 7 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 3 | 2 |
| 5 | 3 | 2 | 9 | 1 | 7 | 8 | 6 | 4 |
| 6 | 9 | 8 | 4 | 2 | 3 | 5 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நன்றி நவிலலும்
# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
05 ★ 03 ★ 1950

மறைவு
24 ★ 03 ★ 2012

## அமரர் கந்தையா மகேந்திரன்

(வேலும் மயிலும் லொறி (டிப்பர்) உரிமையாளர்)

24.03.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கந்தையா மகேந்திரன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றையதினம் (22.04.2012) ஞாயிற்றுக்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (23.04.2012) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். இந்த நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து வருகை தந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறி யோருக்கும், பத்திரிகையில் கண்ணீர்அஞ்சலி வெளியிட்டோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு : இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

17 A, சிவன் புது வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினையைத் தீர்ப்பது அரசின் கடமை

**திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு**

கொழும்பு,ஏப்.23

பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியது அரசின் கடமையாகும். அரசு மக்களை மேலும் நெருக்கடியில் ஆழ்த்தக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு தொடர்ந்து மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதனை ஏற்க முடியாது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவுகளை எதிர்நோக்க மக்களுக்கு சக்தி கிடையாது. மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் வாழ்வதற்கான நிவாரணங்களை அரசு முதலில் வழங்க வேண்டும்- என்றார்.

இதுதொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது:-

ஐக்கிய இலங்கைக்குள் நியாயமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு, கிழக்கு பிரதேச மக்களுக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும். தீர்வுத் திட்டம் காலதாமதப் படுத்தப்படுவது சாதக நிலைமைகளை ஏற்படுத்தாது.

தீர்வுத் திட்டம் முன் வைப்பதை காலம் தாழ்த்துவதனால் ஐக்கிய இலங்கை என்ற எண்ணக்கருவுக்கு பங்கம் ஏற்படக்கூடும். மீண்டும் பிரிவினைவாதத்தின் விதைகள் பிரதேசங்களில் விதைக்கப்படக் கூடும்.

வடக்கு, கிழக்கிற்கான அரசியல் தீர்வுத் திட்டம் எதுவாக இருந்தாலும் அது ஐக்கிய இலங்கை, பௌதீக ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைய வேண்டும் - என்றார். (ச)



கட்டாருக்கு சென்ற நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அந்த நாட்டு நீதி அமைச்சர் அப்துல்லாஹ் அல் கனீமை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

## கோட்டையில் புதைந்துள்ள புராதன நகரம்

கொழும்பு,ஏப்.23

கொழும்புக் கோட்டைப் பிரதேசத்தில் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததாகக் கருதப்படும் புராதன நகரம் ஒன்று புதைந்துள்ளது என்று தொல்லியல் ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தில் இந்த நகரம் இருந்ததற்கான சில சான்றுகள் கிடைத்துள்ளன என்று மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை களனி புனித பூமிப் பிரதேசத்தில் புராதன குடியிருப்புகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன என்றும் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

(ச-22)

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண கிடைத்துள்ளது சிறந்த வாய்ப்பு

**சர்வதேசப் பிடிக்குள் இலங்கை என்கிறார் சம்பந்தன்**

திருகோணமலை,ஏப்.23

தமிழ் மக்களின் குரலை ஐ.நா . முதல் தடவையாக அங்கீகரித்துள்ளது. இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண்பதற்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்திருக்கின்றது. இதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தி அரசின் தந்திரங்களை முறியடிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்துக்கான நான்கு நாள் சுற்றுப்பயணத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ஆரம்பித்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமான தென்னமரவடி, மற்றும் புல்மோட்டை , திரியாய் போன்ற கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**தமிழ் மக்களுக்கென ஓர் அரசியல் முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.**



இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் அரசு இனி எவ்வித கருத்தையும் கூறி தப்பித்துக்கொள்ள முடியாது. சர்வதேச நாடுகளின் பிடிக்குள் இலங்கை சிக்கியுள்ளது.

தமிழ் மக்களுக்கென ஒரு அரசியல் முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் தான் எம்மை நாமே ஆளும் அதிகாரத்தை பெற முடியும்.

தமிழ் மக்களின்விடிவைக் கருத்திற் கொண்டு முஸ்லிம் மக்களின் தலைவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும். தமிழ் மக்கள் இணைந்து செயற்பட வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.

இந்தக் காலகட்டத்தை தமிழ் மக்களுடைய விடிவுக்காக அனைவரும் பயன்படுத்த வேண்டும்-என்றார். (ச)

## தெமட்டகொட கைதுகளின் பின்னணியில் அரசியலில்லை

கொழும்பு,ஏப்.23

கொழும்பு, தெமட்டகொடை - வனாத்து முல்ல பகுதியில் அரசியல் நோக்கத்துக்காக எவரும் கைது செய்யப்பட வில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதேவேளை, இது போன்ற கைது நடவடிக்கைகள் தொடரும் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸார் மீது முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மை காணப்படுமாயின் அது தொடர்பில் விசாரணை நடத்தத் தாம் தயார்.

வனாத்துமுல்லையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் கொழும்பு நகரில் இவ்வாறான தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

தெமட்டகொடை பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் ஒரு துஷ்ட சக்தி செயற்படுகின்றது. கைது செய்யப்பட்டமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்தால் குற்றவாளிகளைப் பிடிக்காது சுதந்திரமாக நடமாட விடவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுவதாகவே அர்த்தம்-என்றார்.

வனாத்துமுல்ல பகுதியில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு கோரி பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஒழுக்க விதிகளை ஒருபோதும் மீறமாட்டேன்

**மேர்வின் சில்வா தகவல்**

கொழும்பு,ஏப்.23

கட்சி ஒழுக்க விதிகளை ஒருபோதும் மீறிச் செயற்பட மாட்டேன் என்று மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒழுக்க விதிகளை உரிய முறையில் பேணும் கட்சியாகும்.

பெலியத்த பகுதியிலிருந்து வந்த நான் கட்சி விதிகளை மீறமாட்டேன்.

ஒழுக்காற்று விசாரணை தொடர்பில் கட்சி நிர்வாகத்திற்கு சவால் விடுக்கவில்லை.

ஒழுக்காற்று குழு வினரின் விசாரணைகளுக்கு சவால் விடுக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்ட செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை- என்றார்.

# அம்பாந்தோட்டையில் இறக்குமதி; வாகன விலைகள் மேலும் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.23

அம்பாந்தோட்டையில் புதிதாக அமைக்கப்பட்ட துறைமுகத்தில் வாகனங்களை இறக்குமதி செய்யும் திட்டத்தினால் வாகனங்களின் விலை மேலும் உயர்வடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வாகன இறக்குமதியாளர்களுக்கு மேலதிக செலவு ஏற்படுவதாகவும் இதனால் இந்தச் செலவுகளை ஈடு செய்ய வாகன விலைகளை உயர்த்த நேரிடும் என்று அசோசியேட் மோட்டர்வேஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அம்பாந்தோட்டையிலிருந்து குறித்த வாகனங்களை கொழும்புக்கு எடுத்துச் செல்ல 'கார் கரியர்' என்னும் விசேட வாகனம் பயன்படுத்தப்படும்.

இந்த வாகனத்தின் மூலம் வாகனங்களை எடுத்துச் செல்வதற்கு அதிக செலவாகின்றது. இந்த மேலதிக செலவு வாகன கொள்வனவாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட உள்ளது என்றும் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்பைத் தொடர்ந்து வாகனங்கள் தொடர்பில் நுகர்வோரினால் விடுக்கப்படும் கோரிக்கைகள் 90 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச)

# கப்பம் கோரிய அமைச்சர்; விரைவில் சட்ட நடவடிக்கை

**பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு**

கொழும்பு, ஏப்.23

அமைச்சின் தொலைபேசியூடாக மினுவாங்கொடை வர்த்தகர் ஒருவரிடம் இரண்டரைக் கோடி ரூபா கப்பம் கோரினார் எனக் கூறப்படும் பிரதி அமைச்சருக்கு எதிரான விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்ததும், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடையில் காணியொன்றை வாங்கிய வர்த்தகரிடம் கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி அமைச்சின் தொலைபேசியூடாக குறித்த பிரதியமைச்சர் கப்பம் கோரிய குற்றச்சாட்டின் பேரிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மினுவாங்கொடையில் காணியொன்றை வாங்கிய வர்த்தகரிடம் தொலைபேசியூடாக குறித்த பிரதியமைச்சர் கப்பம் கோரிய குற்றச்சாட்டின் பேரிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

இதற்கு முன்னர் எரிபொருள் நிரப்பும் இடமொன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு குறித்த பிரதியமைச்சர் கப்பம் கோரியுள்ளார் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணசிங்கவினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பிரதியமைச்சரின் சகோதரர் ஒருவர் பிரதியமைச்சர் கப்பம் கோரினார் எனக் கூறப்படும் சம்பவம் பொய்யானது எனப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

# குளவி கொட்டி 9 தொழிலாளர் பாதிப்பு

கொழும்பு,ஏப்.23

ஹற்றன் - கொட்டகலை மேபீல்ட் தோட்டத்தில் குளவி கொட்டுடியதால் தொழிலாளர்கள் ஒன்பது பேர் பாதிக்கப்பட்ட நிலையில் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மேபீல்ட் பழைய [illegible] தோட்டத் தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தொழிலாளர்களைக் குளவிகள் சூழ்ந்து தாக்கின. இதில் பாதிக்கப்பட்ட 8 பெண் தொழிலாளர்களும் ஆண் கங்காணி ஒருவரும் பாதிக்கப்பட்ட னர். இவர்கள் நிலையில் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர். கொட்டகலை - மேபீல்ட் தோட்டத்தில் [illegible] குளவிகள் [illegible] காலமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி அழைப்பு

04.05.2011 புதன்கிழமை
சிவபதம் அடைந்த எமது
குடும்பத் தலைவர்



அமரர்
**கந்தையா சிவநேசன்**

அவர்களின் ஓராண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (23.04.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைப் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.
- குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

| தாயின் மடியில் | | மண்ணில் மடியில் |
|---|---|---|
| 24 | | 27 |
| ★ | | ★ |
| 03 | | 04 |
| ★ | | ★ |
| 1955 | | 2009 |



**அமரர் சுப்பிரமணியம் அழகரத்தினம்**

நேற்று போல் இருக்கிறது
இன்று காலங்கள் உருண்டோடி ஆண்டுகள் மூன்று ஆனதோ
உங்கள் நினைவுகள் கன்னங்கள் வழியே
கண்ணீர் வழிந்தோடி நிமிடங்கள் சற்று
நடந்தவை யாவும் கனவாக அமையாதோ!
ஆண்டவனே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இன்று (23.04.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் மூன்றாம் ஆண்டு நினைவு தின நிகழ்வினை உறவினர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பேரலை பளை,
தொ.பே. 077 926 0849
மனைவி (அம்மாச்சி)
பிள்ளைகள், மருமக்கள்

## வான் விற்பனைக்கு

TATA - 207 சிங்கிள் கப் புதியது வான் விற்பனைக்குண்டு. (300 km மட்டும் ஓடியது)

T.P : 077 6090926

## மணமகள் தேவை

யாழ். R.C கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் முகாமையாளராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு : 075 289 2200

## தேவை

கொழும்பில் இரண்டு பேருடைய குடும்பத்திற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை.
25 இற்கும் 45 இற்கும் இடைப்பட்ட வயதையுடைய பொறுப்புக்கள் அற்ற பெண் ஒருவர் எதிர்பார்க்கப்படுகிறார். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்பு : 021 4912142

## பாடசாலை சேவை

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான வான் சேவை (சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, சூறாவத்தை, மயிலங்காடு, குப்பிளான், மல்லாகம் போன்ற பகுதிகளில் உள்ளவர்களுக்கு மாத்திரம்).

தொடர்பு : 077 6205309, 077 3089 300

ரூபா 74.25 இல் இருந்து



www.titusstores.com
ரைரர்ஸ் ஸ்ரோர்ஸ்
புறக்கோட்டை 2439422 லிபேட்டிபிளாசா

## உதவி கோரல்



(16852) (45.6.9)

திருமுறிகண்டியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் வசித்துவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான

**தர்மலிங்கம் தயாகரன்** (வயது 39)

ஆகிய நான் இதயநோயினால் பாதிக்கப்பட்டுள்ளேன். இதற்கான சிகிச்சைக்காக 2 இலட்சத்து 75000 ரூபா தேவையென வைத்தியர் உறுதிப்படுத்தியுள்ளார். கருணையுள்ளம் கொண்டவர்கள் இல/வங்/ கண/இல. 70023286 இல் வைப்புச்செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தர்மலிங்கம் தயாகரன்
தொ.பே. 077 9876716

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் நடராசா
(Retd.R.D.O)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் நடராசா 20.04.2012 வெள்ளிக்கிழமை நியூசிலாந்தில் காலமாகி விட்டார்.

அன்னார், காலஞ்சென்ற இராசாம்பாளின் அன்புக் கணவரும், முருகானந்தன் (Australia), விவேகானந்தன் (Australia), பரமானந்தன் (Australia), கேதீஸ்வரன் (U.S.A.), கௌரி (Newzeland) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கல்யாணி, மாலினி, வாசுகி, விநோ, நரேன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற சச்சிதானந்தம் (Australia) ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நியூசிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

101, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தகவல்:
குமாரசாமி நித்தியானந்தன்

## மரண அறிவித்தல்

### பொன்னம்மா இராசையா



ஏழாலை மத்தி, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், ரொறன்ரோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா இராசையா கடந்த (19.04.2012) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சற்குணம், நல்லம்மா, தங்கமணி, நவரத்தினம் மற்றும் செல்வமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராசா, யோகராசா, தியாகராசா (சுவிஸ்), செல்வநேசம் (கனடா), ஞானராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், புவனேஸ்வரி, மங்களேஸ்வரி, பகவதி (சுவிஸ்), கணேசலிங்கம் (கனடா), சியாமளா (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை கனடா நேரப்படி பகல் 11 மணிக்கு கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


களவாவோடை,
ஏழாலை தெற்கு, ஏழாலை.
தகவல்:
குடும்பத்தினர்

## ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேவையின் அறிவித்தல்

எமது நிறுவனத்தில் கடந்த காலம் உதவியாளராகக் கடமையாற்றிய பரமசிவம்பிள்ளை சிவசுதன் (சுதன்) எமது நிறுவனத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். மேற்படி நபரான ப. சிவசுதன் (சுதன்) பயன்படுத்தும் போக்குவரத்துச் சேவைக்கும், எமது போக்குவரத்துச் சேவைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர்
ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேவை

## மரண அறிவித்தல்



### நவரத்தினம் குலசேகரம்
( ஓய்வு பெற்ற பொலீஸ் - உத்தியோகத்தர்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வருணனை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் குலசேகரம் கடந்த (21.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கருணானந்த நாயகியின் அன்புக் கணவரும் சுரேஸ், ஜெயந்திரன் (ஜெயா), பிரபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வருணன், சந்நிதி வீதி,
அச்சுவேலி.
தகவல்:
கருணானந்தநாயகி (மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய வானிலை

33° C

| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 33°c | 28°c | |
| மன் | | 32°c | 28°c | |
| வவு | | 32°c | 25°c | |
| முல் | | 31°c | 27°c | |
| கிளி | | 31°c | 27°c | |

பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

### தம்பகாமம் ச.ச.நிலையம் திறப்பு

தம்பகாமம் சனசமூக நிலையத்துக்கு 16லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.போர் இடம்பெற்ற வேளையில் சேதமடைந்த இந்தக் கட்டடத்தை சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனம் நிர்மாணித்தது.

பளைப் பிரதேச சபை தலைவர் எவ்.டி. அன்ரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சனசமூகநிலைய கட்டடத்தை சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனப் பொறுப்பதிகாரி பளை பிரதேச செயலர், சி.சத்திய சீலன் ஆகியோர் கூட்டாகத் திறந்து வைத்தனர். (வ-9)

# ஈழத் தமிழரின் விடயத்தில் பிரிட்டன் ஏன் அமைதி காக்கின்றது?

## பிரிட்டன் தூதரகம் முன்பாக விளக்கம் கேட்டு ஒன்றுகூடல்

**பிரிட்டன் அரசுக்கும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் காலம் கடந்தாலும் இன்றும் அவர்களுக்கு முக்கிய கடமை, தமது கடந்த கால தவறுகளை ஏற்றுக் கொண்டு தமிழர்களின் கையில் அவர்களில் வாழ் வுரிமைகளை மீள அளிப்பதில்பிரிட்டன் முக்கிய பங்கு அழிக்க வேண்டும்.**

தமிழினத்தின் இனப் படுகொலையை பார்த்தும் அமைதி காக்கின்ற பிரிட்டன் அரசிடம், அமைதி காப்பதற்கான காரணம் என்ன என்று கேள்வி கேட்கும் ஒன்று கூடல் ஒன்று பிரிட்டன் தூதகரத்துக்கு அருகில் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

1833 ஆம் ஆண்டுக்கு முன் இலங்கை 3 ராச்சியங்கள் கொண்ட நாடாக எல்லா இன மக்களும் சுதந்திரமாக வாழும் நாடாக இருந்தது. பிரிட்டிஷ் காலனித்துவத்துக்கு முன் சுதந்திர இனங்களாக வாழ்ந்த நாட்டை ஒரே ஆட்சிக்குள் கொண்டு வந்து, அதன்பின் டொனமூர் யாப்பில் தமிழ் மக்களை தேசிய இனமற்றவர்களாக்கி சோல்பரி யாப்பின் மூலம் சிங்கள அர சிடம் தமிழர்களின் உரிமைகளைக் கையளித்து விட்டுச் சென்று விட்டனர்.

தமிழர்களை இரண்டாம் பிரஜைகளாக்கி விட்டுச் சென்ற பிரிட்டனே அன்று தொடக்கம் இன்று வரை நடைபெற்று வரும் இனப் படுகொலைக்கு மூல காரணமாக இருக்கிறது.

காலனித்துவ ஆட்சியினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கை தான் முக்கிய இடத்தில் உள்ளது.

ஈழத்தில் 64 வருடங்களாக ஓர் இனம் படுகொலை செய்யப்பட்டு வருகிறது. அங்கே நடக்கும் இனப்படு கொலைக் கும் தனது நாட்டுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை போன்று அமைதி காத்து கொண்டிருக்கிறது பிரிட்டன்.

காலணித்துவ காலத்திலும் சரி, இலங்கை மகாராணிக்கு கீழ் இருந்த காலத்திலும் சரி, கொமன் வெல்த் நாடுகள் என்ற அமைப்பில் அங்கத்துவ நாடாக இருக்கும் காலத்திலும் சரி, இன்று முள்ளி வாய்க்காலில் 40ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை படுகொலை செய்த இலங்கை அரசை கொமன் வெல்த் நாடுகள் என்ற அமைப்பில வைத்திருப்பது இலங்கையின் இனப்படு கொலை களை ஆதரிப்பது போல் இருக்கிறது.

எனவே, காலணித்துவ ஆட்சியாளர் என்ற அடிப்படையில் பிரிட்டன் அரசுக்கும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப் பதில் காலம் கடந்தாலும் இன்றும் அவர்களுக்கு முக்கிய கடமை, தமது கடந்த கால தவறுகளை ஏற்றுக் கொண்டு தமிழர்களின் கையில் அவர்களில் வாழ் வுரிமைகளை மீள் அளிப்பதில் பிரிட்டன் முக்கிய பங்கு அழிக்க வேண்டும்.

இதேவேளை குற்றவாளி நாடாகிய இலங்கையை வெளியேற்ற வேண்டிய கடமையும் பிரிட்டனிடம் உள்ளது.

ஓங்கி ஒலிக்கும் எம்மவர்களின் ஒவ்வொரு குரலும் எம் இனத்தை அழிவுக்கு உட்படுத்தியவரை குற்றவாளிக் கூண்டில் ஏற்றும்.

எனவே அனைத்து மக்களையும் ஒன்று கூடுமாறு கேட்கின்றோம் - என்று அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ)

### சாவகச்சேரியில் நேற்று புதுவருட விளையாட்டு விழா

தென்மராட்சி, ஏப்.23

தமிழ்-சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழா நேற்று சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

523 ஆவது படையணி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகியவை இணைந்து விளையாட்டு விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

காலை 6மணிக்கு விளையாட்டு மைதானத்திலிருந்து ஆண், பெண் பிரிவுகளுக்கிடையிலான சைக்கிளோட்டம், மரதனோட்டம் ஆகிய போட்டிகள் இடம் பெற்றன.

523 ஆவது படையணி சிவில் நிர்வாக அதிகாரி கேணல் ஹர்ஷா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற உள்ளக விளையாட்டுப் போட்டிகளை 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரி.ஏ.டபிள்யு. அனுர சுதசிங்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் ஹட்சன் அமரசிங்க, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி இ.நவரத்தினம், சாவகச்சேரி நகராட்சிமன்ற தவிசாளர் கு. சதாசிவமூர்த்தி ஆகியோர் மங்கல விளக்கேற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர். (வ-9)


## மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவுகள்



*அமரர்*

ஜோசேப் மரியநாயகம் மேரி பிலோமினா (மலர்)

*23.04.2009 இல் வலைஞர் மடப் பகுதியில் எறிகணை வீச்சுக்கு பலியாகி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் நினைவுகள்....*

தோற்றம்
*1949★02★18*

எறிகணை வீச்சில்
*2009★04★23*

ஆண்டுகள் மூன்றும் அகன்றாலும்
ஆறாது எம்மன வேதனை - நீ
வேண்டுமென்று தினம்தேடும் எங்கள்
வேதனைகள் தீருவது எப்போது?
உயிராயும், உறவாயும் உலவி
உணர்வுகளைப் பூப்பித்தவன் நீ
பயிராகி நாம் உயரும் நேரம்
பறித்தாரே உனை எமைவிட்டு
கண்கள் குளமாக நெஞ்சு கனவாக
கணங்கள் தோறும் உன் உணர்வோடு
வாழ்வோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்ற லுக் காக புனித காணிக்கை மாதா தேவாலயத் தில் இன்று (23.04.2012) திங்கட்கிழமை 11 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும் .

தவசிகுளம்
மிருசுவில்
077 6555 620

(17204) (45.9.7)

குடும்பத்தினர்


### பளைப் பகுதியில் புனரமைக்கப்படும் ஆறு வீதிகள்

பளை, ஏப்.23

பளைப் பிரதேசத்தில் உள்ள ஆறு வீதிகள் நெல்சிப் திட்டத்தில் புனரமைக் கப்பட்டு வருகின்றன.

2011 ஆம் ஆண்டு நிதி ஒதுக் கீட்டில் 4 வீதிகள் புனரமைப்பு வேலைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என்றும் 2012 ஆம் ஆண்டு நிதி ஒதுக் கீட்டில் இரண்டு வீதிகள் புனரமைக் கப்படவுள்ளன என் றும் பளை. பிரதேச சபை செயலாளர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

26 மில்லியன் ரூபா செலவில் மாசார் பாடசாலை வீதி,கோயில் பிரதான வீதி, புலோப் பளை- அல்லிப் பளை வீதி, முல்லையடி புலோப்பளை வீதி ஆகிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும்-

தம்பகாமம்- மாமுனை வீதி, கொட்டடி- பெரிய தம்பகாமம் இணைப்பு வீதி ஆகியவை 17 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப் படவுள்ளன என் றும் அவர் கூறினார். (வ-9)


## வீடு விற்பனைக்கு

**விளிசிட்டி ஏழாலை தெற்கு, பிரதான வீதியில் 5½ பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு.**

**தொடர்பு : 077 810 5820, 077 521 7453**

## நீங்கா நினைவில் முதலாம் ஆண்டு



மலர்வு
**20★11★1947**

உதிர்வு
**04★05★2011**

*அமரர்* செல்லப்பா கனகரத்தினம்

**திதி: 23.04.2012**

ஆண்டு ஒன்று ஆகிவிட்டாலும்
உங்கள் நினைவுகள் மறையவில்லை
வீட்டின் ஒளிவிளக்காய் திகழ்ந்தவரே
இன்று உங்கள் நிழலை நினைக்கிறோம்.

பன்னாலை
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வாழ்க்கையில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே

வாழ்க்கை என்ற நூலகத்தின் முக்கியமான பகுதிதான் திருமணம் என்ற குடும்ப வாழ்க்கை. திருமணத்தின் மூலம் வாழ்க்கை முழுமையடைகிறதோ அல்லது எத்தனை சதவீதம் வெற்றியீட்டுகின்றதோ தெரியாது. ஆனால் குடும்ப வாழ்க்கைக்குத் தலைமை வகிக்கின்ற கணவனின் துன்புறுத்தலுக்கு ஆளாகி உடல், உள ரீதியாகப் பெரும்பாலான பெண்கள் பாதிக்கப்பட்டு நிம்மதியை இழக்கின்றார்களென்பது மிகப்பெரிய உண்மை . இந்தக் குடும்ப வன்முறை, அட்டூழியம் ஆசியப் பெண்கள் மீதே அதிகளவில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

குடும்ப வன்முறை என்கின்றபோதுகணவன் ஒரு உறவுமுறையான ஆண் வர்க்கத்திடமிருந்து தினமும் ஒரு பெண் ஏதோ ஒரு வகையில் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்படுகிறாள். இதனால் கணவன்-மனைவி என்ற உறவுப் பாலம்தான் அதிகளவில் சேதமடைகிறது. இணைந்த வேகத்தில் பிரிபவர்களும் உள்ளனர். வயது சென்று விவாகரத்து செய்பவர்களும் உள்ளனர்.

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படும் புரிந்துணர்வின்மை, சந்தேகம், விதண்டாவாதம், வைராக்கியம்,குரோத மனப்பான்மை மற்றும் கடின வார்த்தைகள் போன்றவை வாழ்க்கையில் பெரும்பிளவை ஏற்படுத்துகின்றன. அதிலும் இல்லத்தரசிகளான பெண்களே அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். வக்கிரமும் வன்முறைகளும் நிறைந்த வார்த்தைகள் நடவடிக்கைகள் இவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.



பெண்களின் மன அழுத்தத்துக்கு உடல் ரீதியாகவும் காரணங்கள் உள்ளன. அவர்களின் ஹோர்மோன்களின் சமநிலை ஆண்களைப் போல் இருப்பதில்லை.வெகு விரைவிலேயே அதிக மாற்றத்தை அது சந்திக்கின்றது.

ஆண்களை விடப் பெண்களே அதிகளவில் உணர்வுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அன்பு, அரவணைப்பு, பந்த பாசம், வேதனை, கவலை, விரக்தி என்ற பலவிதமான உணர்வுகளை உள்வாங்கி ஒரு சுமை தாங்கியாகப் பல தியாகங்களைச் செய்து இறுதியில் நோயாளியும் ஆகிவிடுகின்றாள். இதுவே குடும்ப வாழ்க்கை இவளுக்குக் கொடுக்கும் பரிசு.

பெண் என்பவளுக்கு கனவு, நனவு எல்லாம் அவள் குடும்பத்தைச் சுற்றியே வட்டமிடும். ஆனால், உழைப்பு என்ற ஆயுதத்தை பெரும்பாலும் தன் வசம் வைத்திருக்கும் ஆண்கள் அதன்மூலம் பெண்களை நசுக்கி அடிமைகளாக வைத்திருக்க நினைக்கிறார்கள். இந்தப் பெண்களின் சுகம், தியாகம், உழைப்பைச் சுரண்டி வீட்டுத் தலைவி என்ற பெயரில் முழுநாள் வீட்டு வேலைக்காரியாக உரிமை பெற்றுள்ளாள்.

சில பெண்களோ வீட்டுக்கு வெளியேயும் வீட்டினுள்ளேயும் உழைக்க வேண்டியுள்ளது. என்றாலும் கணவன் என்பவன் தனது ஆண் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் மாத்திரம் எந்தச் சமயத்திலும் விட்டுக் கொடுத்ததில்லை.

குடும்ப வன்முறைகள் தலைதூக்காமலிருக்க புரிந்துணர்வும் அன்பும் அவசியம். அதேநேரம் பெண் சமூகம் என்பது ஆண்களை மட்டும் கொண்டதான அமைப்பல்ல என்பதனையும் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். காற்றடித்தால் மூடிக்கொள்ளும் தொட்டாசிணுங்கியல்ல பெண். சதா காலமும் அவளைத் திட்டிக் கொண்டே இருப்பது மூன்றாம் நபர் முன்னால் இழிவாகப் பேசி அவமதிப்பது, உரிமைகள் பறிக்கப்படுவது, போன்ற சந்தர்ப்பங்களிலும் வார்த்தைகளால் இம்சிக்கப்படும்போதும் அவள் எரிமலையாகச் சீறி எழுகிறாள்.

குடும்ப வன்முறைகளால் வஞ்சிக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படும் பெண்கள் வலுவில்லாதவர்கள். எதற்கும் சக்தியற்றவர்கள் என்ற எண்ணம் ஆண் வர்க்கத்தினரிடமிருந்து மாற வேண்டும். பெண்களால் எதனையும் செய்து விடமுடியாதென்ற காழ்ப்புணர்வு ஆண் வர்க்கத்தினரிடமிருந்து விடைபெற வேண்டும்.

மனிதனின் தேவை என்பது ஒரு பக்கம் சார்ந்ததல்ல.. அனைத்துத் தேவைகளுக்கும் இரு கைகளும் இணைய வேண்டும். பெண்களை மட்டம் தட்டி விட்டு தனித்து இயங்கிவிட முடியுமென்பது மடமைத்தனமானது.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகிவிடும். குடும்ப வாழ்க்கையின் இணைப்பும் இப்படித்தான். அதேநேரம், சினம் கொண்டு வன்முறைகளைக் கையிலெடுப்பதனை முடிந்தளவு பெண்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் எல்லாப் பெண்களுக்கும் உயரிய விருது கிடைத்துவிடாது. ஆண் வர்க்கத்தை வஞ்சம் தீர்த்து காலமெல்லாம் பழி சுமப்பதை விட இவர்களை வேறு விதமாகத் திருத்தலாம். அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத் திறக்கும்.

# ஆணுக்கு ஒரு வேண்டுகோள்



பெண்ணடிமை விலங்கு தெறிக்க....
அடக்கி ஒடுக்கி ஆணவத்தால்
அன்பைச் சிதைக்க நினைக்காதே!....
அருவருக்கும் வார்த்தைகளை
அவளுக்கென்றுமட்டும் நீ படைக்காதே..

உன்னை நீயே இழிவுபடுத்தும்
உண்மை இதனை உணர மறுக்காதே....
நான் சொல்லப்போகும் சேதி கேட்டு
எதிராய் சூழ்ச்சிசெய்ய நினைக்காதே!...

என் அன்னையரே! தந்தையரே!
அன்புமிகு சகோதரரே.......
உங்களில் ஒருத்தி நான்
உள்ளதைச் சொல்லப்போகிறேன்-அதிலும்
உண்மையைச் சொல்லப்போகிறேன்!.......

கள்ளம் கபடம் அற்ற பெண்ணை
கடைத்தெருவில் வைத்துவிக்கும்
கழிவுப்பொருளைப் போல நீயும்
ஏலம்போட்டு எடுக்காதே!!!!!...........

அந்த சொர்ணரகத்தை வாங்கப்போகும்
அண்ணன் ,தம்பியே அங்கே உங்கள்
அக்கா தங்கையை மறவாதே!!..............

சொன்னபேச்சு கேளா மனைவியை
அவள் இஷ்டம்போல விட்டுவிடாதே..
ஒரு பெண்ணுக்கெதிராய் விவாதம் வந்தால்
வெறும் வெட்டிப்பேச்சு பேசாதிரு நீ.......

இன்று விதைக்கும் விதையை
என்றோ ஒருநாள் அறுவடைசெய்ய
முந்தி அழைப்பார் காத்திருந்து நொந்தவர்
அன்றும் நீதான் இதற்குப் பொறுப்பாவாய்..

வெட்டிக் கடையில் விட்ட காசுபோல்
குட்டிபோடுமே நீ என்றும் விட்ட பிழைகள்
இதனால் கெட்டுப்போவது யார் சொல் .....
உன்னைப் பெத்த தாயா, கட்டியமனைவியா
அட நீ பெத்த பிள்ளையா ???................//

-நிலா-

இத்தனைபேரும் பெண்தானே !!!!!............

நீ அடித்து செத்த பாம்பை இளி
ஊர் அடித்தால் தப்பென்ன !......
இந்தக் கேள்விக்கு பதில் என்ன
சொல்வாயோ..
இப்போது தவறு புரிகிறதா?.........
ஒன்றைமட்டும் உணர்ந்துகொள்

இன்றைய ஆடவன் நாளை ஓர் கணவன்
இவனே பின் தந்தையும் ஆவான்
இந்த வாசகம் நெஞ்சினில் நின்றால்
எழும் குறைகள் எல்லாம்ஏட்டினில்
இருந்தும் இடு காட்டினில் இருந்தும்
இன்றே புறப்பட்டு
சென்றுவிடுமே!!!!....................

# பெண்ணின் சிறந்த துணை

அரவணைப்பு என்பது வாழ்க்கைக்கு ஆதாரமானது, ஆதரவளிப்பது. எல்லாவற்றையும் அரவணைத்து ஆலோசனை கூறி, வாழ்வதற்கும், வளர்வதற்கும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் தயங்காமல் செய்யக் கூடியவள் பெண். இப்படிப் பிறருக்கு உதவி செய்து கொண்டு, அந்த உதவி செய்யும் குணத்தையே தான் வாழ்வதற்கும், பயன்படுத்திக் கொள்வது தான் பெண்ணின் அடிப்படையான சிறப்பு .

உதவுவதன் மூலம் உயிர் வாழலாம் என்ற உண்மையை மனித வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே பெண் அறிந்து வைத்திருந்தாள். உலகில் நிலைத்து வாழ்வதற்கு, தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என ஆணுக்கு வலியுறுத்தப்பட்டதைப் போலவே, பெண்ணுக்கும், உலகில் சுமுகமாக வாழ்வதற்கு இணக்கமாகவும், பிறருக்கு உதவும் நிலையிலும் இருக்க வேண்டும் என போதிக்கப்பட்டிருக்கிறது.

நல்ல பராமரிப்பாளனாக, நல்ல பாதுகாவலனாக, நல்ல தந்தையாக, நல்ல காதலனாக இருந்து மேற்கண்ட அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்த ஆண்தான் அவளுக்குத் தேவைப்பட்டான். இத்தகைய திறனுள்ள ஆடவனைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவளுடைய பராமரிக்கும் திறனும், பரிவும் மிகப் பெரிய ஆயுதங்களாக இருந்தன. பராமரிப்பையும் பரிவையும் அந்தக் காலத்துப் பெண்கள்தான் தங்களுக்கு சாதகமான ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள்.

திருமணத்துக்கு முன்பு வரை யாரென்றே தெரியாத ஒருவனுடன் திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும் போதே, புதிய சூழ்நிலையில், புதிய மனிதர்களோடு தான் இணைந்து போக வேண்டும் என்ற மனப் பக்குவத்தை வளர்த்துக் கொண்டு தான் தற்காலத்துப் பெண்ணும் செல்கிறாள். புதிய கணவனுக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் நிலையையும், கணவனின் கருத்துகளோடு ஒத்துப் போகும் பண்பையும் வளர்த்துக் கொள்கிறாள். தான் வேறு, தனது கணவன் வேறு என்ற எண்ணம் அகன்று, தன் கணவனின் விருப்பமே தன் விருப்பம், அவன் நோக்கமே தனது நோக்கம், அவனது இலட்சியமே தனது இலட்சியம் எனக் கருதி, அவனோடு இணைந்து கொள்கிறாள்.



தனது கணவன் ஆறுதலாக, சுகமாக, மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரு சூழலை பெண் உருவாக்கித் தனது நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்கிறாள். இதன்மூலம் கணவன் தன்னை மீண்டும் மீண்டும் நாடி வரும் நிலையை உண்டாக்குகிறாள். தனது மென்மையான எண்ணங்களை வெளிப்படுத்த இயலாதவனாக ஆண் இருந்தபோதிலும், குறிப்பால் அவனது எண்ணங்களை அறிந்து கொள்கிறாள். தன்னோடு இருப்பவர்களின் எண்ணங்களையும் குறிப்பால் அறியக் கற்றுக்கொள்கிறாள்.

வாழ்நாள் முழுவதும் அவளது இந்த இயல்பு ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு அதிக பாதுகாப்பை அளிக்கிறது. அன்பு செலுத்தவும், அன்பு செலுத்தப்படவும் அவளுக்குச் சக்தியை அளிக்கிறது. பிறரை நேசிக்கவும், பராமரிக்கவும், பாதுகாக்கவும் திறனை அளிப்பதோடு, ஆண் மகனையும் அவள்பால் கவரச் செய்கிறது.ஆணின் இதயத்தில் மூடப்பட்ட மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தி அன்புக்கும் நெருக்கத்துக்கும் அவள் காலங்காலமாக ஓர் இணைப்புப் பாலமாக இருந்து வருகிறாள். இதனால் உணர்வு ரீதியாக அனைவரையும் கவரும் வகையில், ஆணை விட பெண் ஒரு படி மேலே போய்விடுகிறாள். ஆண்களிடம் இல்லாத பெண்களின் சிறப்புக் குணம் இது.

இலக்கியா

இலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
“திலகம்”
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## கந்தையா தவராசா (தேவா)
(ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் உரிமையாளர்)

சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தவராசா நேற்றுமுன்தினம் (21.04.2012) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கிருசாந்தியின் அன்புத் தந்தையும், சிம்சோனின் அன்பு மாமனும், குணசேகரம் (ஜேர்மனி), கணேசலிங்கம், ஜெயராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவாணி, சோமறஞ்சிதா, கலாறஞ்சினி ஆகியோரின் மைத்துனரும், ஞானோத்தின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, கந்தையா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
சாத்தாவத்தை வீதி, மானிப்பாய்.

தகவல்: தாய்,
சகோதரர்கள்.

## திருமதி நாகேஸ்வரியம்மா பாலசுப்பிரமணிய சர்மா



எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும், திக்கம், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரியம்மா நேற்று (22-04-2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஐயர்-இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டேயர்-சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், பாலசுப்பிரமணிய சர்மாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கஜேந்திர சர்மா, ஜெயதீபன் மற்றும் ரஜனிபாலா, கஜேந்தினி, கயிலநாதசர்மா, ஜெனனி, கணநாதசர்மா, கஜீபரசர்மா, கௌசிகா ஆகியோரின் அன்புத் தாயும், ரமேஸ்சர்மா, சங்கரப்பிரிய சர்மா, ஸ்ரீசாரங்கக் குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியும், பிரகாஸ், அபிஷ்னா, சஹானா,சாருகேஷசர்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பகவதி, காலஞ்சென்ற நாகேந்திரசர்மா மற்றும் நகுலாம்பிகை, நாகேஸ்வரசர்மா,சாரதாம்பாள்,சிவானந்த சர்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-04-2012) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கம்,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.


## வீடு வாடகைக்கு

22/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 3 பரப்பில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.
- நிறுவனங்களின் பாவனைக்கும் ஏற்றது
- வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு
- பெரிய குடும்பங்களுக்கு உகந்தது

தொடர்புகளுக்கு:
0776660422

## கடைக்கு வேலை ஆள் தேவை

மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தில் அமைந்துள்ள 'கௌசிகா ஸ்ரோர்ஸ்' ற்கு காசாளரும் (பெண்) விற்பனையாளரும் தேவை. தங்கும் வசதி உண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0217915871, 0776660717

## வேலை ஆள்கள் தேவை

DOHA கட்டாருக்கு வேலை ஆள்கள் (லேபர்) உடனடியாகத் தேவை. சம்பளம் 900 றியால்.

தொடர்புகளுக்கு:
0715873127

## வீடு வாடகைக்கு உண்டு

கலட்டி, சீனியர் லேனில் வீடு வாடகைக்கு விடப்படும்.

T.P.: 0776313463

## கஜமுகன் டென்ரல் கிளினிக்
நெல்லியடியில்

நிரந்தரமாகப் பல் கட்டுதல், நிரந்தர கிளிப் போடுதல் சிறந்த முறையில் இடம்பெறுகிறது.

Dr.A.செந்தில்குமரன்.

வேலைக்குப் பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு- 0212264875 -நிர்வாகி.

## ஆண்மைக்குறைவா? குழந்தையின்மையா?
## உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்



பெண்களுக்கான மாதப்பிரச்சினை,
கருமுட்டை உற்பத்தியின்மை,
வளர்ச்சியின்மையால் பாதிப்பா?
தாம்பத்தியக் குறைபாடா?
கவலை வேண்டாம்.



தூக்கத்தில் சக்தி வெளியாதல், விரைவில் வெளியாதல், தன்னால் முடியாமல் என்ற பயமா? திருமணத்துக்கு தயாராகும் வாலிபர்களே இந்தப் பயத்திலிருந்து விடுபட்டு 45 நாட்களில் முழு ஆண்மையும் பெற்று முழுமையான வளர்ச்சியில் நீண்ட நேரம் இன்பம் பெறுவது உறுதி. எந்த வயதினராலும் சரி எந்த நிலையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி பலன் பெறுவது உறுதி.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். (பெண்கள் மட்டும்)

செல்: 0091 9842457673

100% உறுதி மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

யாழ் வருகை 23.04.2012 காலை 9மணி தொடக்கம் மாலை 5மணி வரை டாக்டரை நேரடியாக சந்திக்கலாம்.

Website: www. Sexualproblem.in
செல் : 0091 9600336009




Email: sridevisiddha@gmail.com
இலங்கை செல்: 0754 518 639

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

APGraphic


# 31 ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் சின்னத்தம்பி வைகுந்தநாதன்

கடந்த 24.03.2012 சனிக்கிழமையன்று இறைபதமடைந்த, எங்கள் குடும்பத் தலைவன், அமரர் சின்னத்தம்பி வைகுந்தநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. மேற்படி கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி தெற்கு, புலோலி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் கந்தையா



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, முருகன் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடா ரொறொன்டோ நகரில் வாழ்ந்து வருமான திருமதி சிவபாக்கியம் கந்தையா கடந்த (20.04.2012) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னன்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகன்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம், விவேகானந்தராசா, பத்மராணி, நவரத்தினராசா ஆகியோரின் அன்புத் தாயும், அம்பிகா, ஜெகதீஸ்வரன், தயாளினி, திருமலர் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற சொர்ணம்மா மற்றும் தியாகராசா, சுந்தரலிங்கம், பூபதி, இரத்தினசிங்கம், இராசேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அருச்சுணன் மற்றும் செல்வராணி, மனோன்மணி, காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சந்திராதேவி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் நாகராசா, சீதாலட்சுமி, சின்னராசா, கந்தையா, அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை ரொறொன்டோவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
க.விவேகானந்தராசா - 4162845360
க.சுந்தரலிங்கம் - 4164274186
க.நவரத்தினராசா
ஜெகதீஸ்வரன் - பத்மா

கனடா.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

ஜனனம்
29 * 11 * 1945



மரணம்
25 * 03 * 2012

## பொன்னையா இராசரெத்தினம்

(ஐயாக் கண்டு), (பிரபலமான சாரதி) (சினுஷா கொமினிக்கேஷன் உரிமையாளர்)

"ஐயாக் கண்டெனும் அன்பவரிவர்" புகழ் நாமம்
"பொன்னையா இராசரெத்தினம்"
வையகம் புகழ வாழ்வாங்கு வாழ்ந்த -இவர்
பொய்யுலகம் நீங்கி - சொர்க்க
புரியதனில் சேர்ந்திட்ட 31ஆம் நாள்.

நாளை (24.04.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தம்பாட்டி, ஊர்காவற்றுறை.
Kayts.
0213213205, 0774444013.
Paris France-
0033170102009, 0033751253338

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹக்கீம் முதல்வர் வேட்பாளராவது முஸ்லிம்களின் இருப்பைப் பாதிக்கும்

## சம்மாந்துறையில் தீர்மானம் நிறைவேறியது

அம்பாறை, ஏப்.23

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதும் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்வதும் முஸ்லிம்களின் தேசிய இருப்பைக் கேள்விக்குறியாக்கும். எனவே கிழக்கு முதலமைச்சர் பொறுப்பை தலைமைத்துவம் தவிர்த்துக்கொள்வதே சிறந்தது.

-இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று சம்மாந்துறையில் நடைபெற்ற புத்திஜீவிகளின் கூட்டம் ஒன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் சம்மாந்துறை மத் திய குழுவினால் 'அரசியலின் இன்றைய நிலையும், நாளையும்' எனும் தலைப்பில் இந்த கலந்த கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டம் முஸ் லிம் காங்கிரஸின் சம்மாந்துறை அமைப்பாளர் எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அமைச்சர் ரவூப் ஹக்கீமை நிறுத்தி முதலமைச்சர் பதவியை அவருக்கே வழங்க ஜனாதிபதி முன்வந்தமை தொடர்பில் வெளியான தகவலையடுத்து, முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நிஸாம் காரியப்பர் வெளியிட்ட கருத்தைக் கண்டிப்பதுடன் அவருக்கெதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் தீர்மானமும் இந்தக் கூட் டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

* ஜனாதிபதியின் விருப்பு தொடர்பான தகவல் வெளியான பின் கிழக்கை சேர்ந்தவரே முதலமைச்சராக வேண்டும் எங்கிருந்தோ வந்தவரிடம் ஆட்சியை கொடுக்காதீர் என்று முஸ்லிம் காங்கிரஸின் பிரதிச் செயலாளரும், கல்முனை பிரதி மேயருமான சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் வெளியிட்ட கருத்தை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதேவேளை தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியின் விருப்பு தொடர்பில் எந்தவொரு விருப்பு வெறுப்பையும் வெளிப்படுத்தாத நிலையில் தலைமைத்துவத்தை அநாகரிகமாக விமர்சிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பில் நிஷாம் காரியப்பர் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

* தேசிய ரீதியாக எமது முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் பொறுப்புடைய எமது தேசியத் தலைவரை கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி மூலமாக ஒரு குறித்த பிரதேசத்திற்குள் முடக்க முற்படுவதோ அல்லது திணிப்பதோ எமது தேசிய இருப்பை கேள்விக் குறியாக்கும் விடயம்.

* கட்சியின் தலைமைத்துவத்தை ஆட்டம் காணச் செய்யும் ஒன்றாகவும் இதனைப் பார்க்கப்படவேண்டியுள்ளதால் கிழக்கு மாகாண முதலமைச்சர், வேட்பாளர் மற்றும் பதவிப் பொறுப்பை எமது தலைமைத்துவம் தவிர்த்துக் கொள்வதே சிறந்தது.

* கிழக்கு முதலமைச்சர் பதவியை ஜனாதிபதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸுக்கு வழங்க விரும்பு கிறார் எனின் அந்தப் பதவி நியமனம் அம்பாறை மாவட்டத்துக்குப் பெற்றுத்தரப்பட வேண்டும்

* கிழக்கு மாகாணத்தில் உள்ள 3 மாவட்டங்களையும் சேர்ந்த ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் அரசியல் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றும் கட்சி ஆதரவாளர்களின் எண்ணிக்கை என்பவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த நியாயம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

* அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதிக்கமுள்ள கல்முனை, பொத்துவில் மற்றும் சம்மாந்துறை தொகுதிகளைத் தவிர ஏனைய இரு தொகுதிகளிலும் அரசியல் பிரதிநிதிகள் தாராளமாகவே உள்ளனர்.

* கடந்த 40 வருடகாலமாக தமக்கென ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தக்கவைத்துக் கொண்டுவந்த சம்மாந்துறை பிரதேச மக்கள் கடந்த இரண்டு வருட காலமாக பல தாக்கங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே ஜனாதிபதி முஸ் லிம் காங்கிரஸுக்குத் தர விரும்பும் கிழக்கு முதல மைச்சர் பதவிக்கான வேட் பாளர் நியமனத்தை கட்சி சம்மாந்துறைக்குப் பெற்றுத் தரவேண்டும்.

குறித்த தீர்மானங்கள் முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அமைப்பாளர் மன்சூர் தெரிவித்தார். (ச-30)

# ஆறு கிலோ கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னார், ஏப்.23

மன்னாரில் கஞ்சா போதைப் பொருளுடன் சென்ற ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

மன்னார் எழுந்தூர்ப் பகுதியில் ஆறு கிலோ கிராம் நிறை கொண்ட கஞ்சாவை வைத்திருந்த பள்ளிமுனையைச் சேர்ந்த ஒருவரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை விசாரணையின் பின்னர் கடற்படையினர் பொலிஸாரிடம் கையளித்தனர். அதன்போது குறித்த நபர் கஞ்சா கடத்தலில் நீண்ட நாள்களாக ஈடுபட்டு வந்த விடயம் வெளிவந்தது. மேலதிக விசாரணைகளைக் கொழும்பு போதைவஸ்து தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-12)


## தவறிவிட்டது

நி.சிந்துஜன் ஆகிய எனது முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் யாழ். மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்து உதவவும்.

தொடர்பு: 077 0712323


## மரண அறிவித்தல்



### சுப்பர் நாகராஜா

பலாலி மத்தி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் நாகராஜா நேற்று (22.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும், செல்லம்மா, காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, செல்வராஜா (செல்வம்) ஆகியோரின் சகோதரனும், விஸ்வலிங்கம், பரமராசா, காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணன் மற்றும் முருகையா, கணேசமூர்த்தி, நவமலர் ஆகியோரின் மைத்துனரும், சிவயோகச்சந்திரன், நவனீதபாலன், தமயந்தி, சிவனேஸ்வரன் (நேசன்), இராசலட்சுமி, காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் யோகலட்சுமி, காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் சயந்தினி, ஜீவினி, நிஷாலினி, காலஞ்சென்ற தவறாபன் மற்றும் கஜானா ஆகியோரின் மாமனும் பிரியங்காவின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
செல்வராஜா (செல்வம்)


அன்பார்ந்த அனைத்து வாடிக்கையாளருக்கும்

## சிறி நதியாவின் அட்ஷய திருதியை அழைப்பு




உலகின் வரட்சியை நீக்கி நல்ல விளைச்சலையும் ஐஸ்வர்யத்தையும் தருவதற்காக புனித கங்கை நதியானது சிவபெருமானின் ஆணைப்படி பூமிக்கு வந்து பசுமையையும், ஐஸ்வர்யத்தையும் உண்டாக்கிய நாள் மற்றும் வேதவியாசகர் விநாயகப் பெருமானுடன் சேர்ந்து மகாபாரதத்தை எழுத ஆரம்பித்த தினமும் அன்றே மற்றும் கிருஷ்ணபிரான் பாண்டவர்களுக்கு என்றுமே அள்ள அள்ளக் குறையாத அட்ஷய பாத்திரத்தினை வழங்கிய நாளும் அன்றைய தினமே இதுவே அட்ஷய திருதிதை நாள் என்று அழைக்கப்படுகின்றது. இந்த நாளில் செல்வம், ஐஸ்வர்யம் என்பவற்றின் உன்னத குறியீடான தங்கத்தினை அன்றைய தினம் வாங்கி அணிபவர்களுடைய செல்வம் ஐஸ்வர்யம் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதே அனைவரினதும் நம்பிக்கை. இவ் அட்ஷய திருதியை நன்நாளில் அனைவரும் அட்ஷய வாழ்வுபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்: சிறி நதியா நகைமாளிகை**


**காலம்: 24.04.2012**

**நேரம்: காலை 7.00 - பி.ப. 9.00 மணிவரை**

"தரம் குன்றா தங்கத்தினை சிறி நதியாவில் பெற்று என்றுமே குறைவில்லா செல்வ வாழ்வு வாழ்ந்திடுவீர்கள்"

குறிப்பு:
★ இன்றே உங்கள் தெரிவுகளை ஓடர் செய்து அன்றைய தினமும் பெற்றிடலாம்.
★ நாளைய தினம் எமது நிறுவனத்தில் தங்கம் வாங்கும் அனைவருக்கும் அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்



சிறி நதியா நகைமாளிகை,
இல.1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2709

சிறி நதியா நகைமாளிகை,
இல.56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6744


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் சந்தி பலாலி வீதியில் இரண்டு மாடிகளை கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு. வங்கிகள், Super market, காட்சியறைகள் அனைத்திற்கும் பொருத்தமானது. ஒவ்வொரு கடைத்தொகுதியும் 3000 Sq. feet கொண்டது. விருப்பத்திற்கேற்றவாறு மாற்றியமைத்துத் தரப்படும்.

தொடர்பு : 077 2627553, 077 2247676



மலேசியா, இத்தாலி, பிரான்ஸ், லண்டன் போன்ற நாடுகளுக்கான Visit, Work and Job Settlement Student Visa க்கள் பெறுவதற்கான ஆலோசனை வழங்கப்படும்

தொடர்பு : 077 7698078


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி விஜயகுமாரி ஞானசிறி
(B.Ed (PRI) (பளை மத்திய கல்லூரி ஆசிரியை)
03.04.2012 இல் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப்பட்டம் பெற்ற திருமதி விஜயகுமாரி ஞானசிறி அவர்களை வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

கணவர், மகள், மருமக்கள், சகோதரர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03★ 07★ 1983

மறைவு
23★ 04★ 2010

**அமரர் செல்வரட்ணம் சிவரூபன்** (குட்டிமணி)

*ஆண்டு இரண்டு ஆனதையா*
*அறுமோ சொல் எம் துயரம்*
*என்னதான் எங்களுக்கு இருந்திட்ட போதினிலும்*
*நீ இல்லாத இடத்தை இங்கு*
*நிரப்புவது யாரையா குலவிளக்கே.*

காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை.

- குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணமும் நுண்காலநிலையும்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு சூழலைப் பேணுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டுமே போதுமானது.

தேவைக்கு மேலதிகமாக வெட்டப்படும் மரங்களின் அளவைக் குறைத்தல் அல்லது தேவை கருதி வெட்டப்படும் மரங்களுக்கு பதிலாக புதிய மரங்களை நடுதல் - இதன் மூலம் காபனீரொட்சைட்டின் அளவு குறிப்பிட்டளவு குறைந்து ஒட்சிசனின் அளவு அதிகரிக்கும்.

வீட்டினுள் மரங்களை வளர்த்தல் - இன்றைய அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் தொடர்ச்சியாக கட்டடங்கள் மற்றும் சீமெந்து தளங்களை அமைத்தல் என்பது ஓர் இன்றியமையாத செயற்பாடாக காணப்படுகின்றது. இதன்போது ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு இவ்வாறு அமைக்கப்படும் வீடுகளிலும் அலுவலகங்களிலும் வளர்க்கக் கூடிய மரச்செடிகளை வளர்த்தல் வேண்டும். இதன்மூலம் வீட்டினுள்ளே ஒட்சிசன் அளவு அதிகரிக்கின்றது. அலுவலகங்களில் இவ்வாறான செடிகள் வளர்ப்பதன் மூலம் அங்கு வேலை செய்யும் அலுவலர்கள் அந்த நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் செயற்படுவதாக ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

விவசாயப் பிரதேசங்களின் அளவை அதிகரித்தல் - அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக சட்டப்படி விவசாய நிலங்களில் குடியிருப்புக்களை அமைப்பது தடை செய்யப்பட்டுள்ள போதும் யாழ். பிரதேசத்தில் விவசாய நிலங்கள் பல இன்று குடியிருப்பு பிரதேசங்களாக மாறி வருகின்றன. எனவே இன்று குறுகிவரும் விவசாய நிலங்களை மீள அதிகரிக்கச் செய்ய வீட்டுத் தோட்டங்கள் அமைத்தல், சாடிப் பயிர்ச் செய்கை, வீட்டினுள்ளேயே பயனுள்ள மரங்களை வளர்த்தல் போன்ற புதிய தொழில் நுட்ப முறையின் மூலம் பயிர்ச்செய்கை நிலத்தின் அளவை அதிகரித்தால் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் ஒட்சிசன் அளவும் அதிகரிக்கும்

குளங்களை பாதுகாத்தல் - யாழ். குடாநாட்டில் வரலாற்றுக் காலங்களில் இருந்த பல குளங்கள் இன்று மூடப்பட்டு விட்டதை அறிய முடிகின்றது. இவை அதிகரித்த சனத்தொகையால் குடியிருப்புத் தேவை காரணமாக மூடப்பட்டுள்ளன. குளங்களே தரைக்கீழ் நீர் வளத்தை பேணுவன ஆகையால் இருக்கும் குளங்களையாவது பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நகரின் மத்தியில் பராமரிக்கப்படும் குளங்களால் குளிர்மையான காலநிலை நிலவுவதால் நகர மத்தியில் காணப்படும் அதிகரித்த வெப்பநிலை கட்டுப்படுத்தப்படும்.

அரச நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் இவ்வாறான செயற்பாடுகளைத் துரிதப்படுத்த உதவுதல் - வயல் காணிகளில் கட்டடங்கள் அமைப்பதை தடுத்தல், கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கும் போது குறித்த அமைப்புக்களை கவனத்தில் கொள்ளல், வீட்டுத் தோட்டங்கள், வீட்டினுள் மரங்களை வளர்த்தல் போன்றவற்றுக்கான மரங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை பெற்றுக் கொடுத்தல், இயற்கையாக நகரை அழகுபடுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற செயற்பாடுகளைத் துரிதப்படுத்தல்.

இவ்வாறு இந்த நுண்காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி எமது சுற்றுச் சூழலை குளிர்ச்சியாக வைத்திருப்போமேயானால் யாழ். குடாநாடு குளிர்ச்சியான பிரதேசமாகவும் சிறந்த சுற்றுலாத் தலமாகவும் மாறுவது மட்டுமன்றி பருவகால மழை வீழ்ச்சியை இழக்காத பிரதேசமாகவும் என்றென்றும் விளங்கும் என்பது திண்ணம்.

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



இன்று 60 ஆவது
பிறந்தநாளைக் கொண்டாடும்
(23.04.2012)
திரு வேலாயுதபிள்ளை
சதானந்தம்
(அப்புசாமிஅப்பா)
அவர்கள் வேட்டையடைப்பு
விநாயகரின் அருளாசியுடன்
பல்லாண்டு காலம்
தம்பதி சமேதராக நலமுடன்
வாழ வாழ்த்துகின்றோம்

உடையிலங்குளம்,
துணுக்காய்

வாழ்த்துவோர்:
சி. வைஷ்ணவி (மகள்)
சிறிபாஸ்கரன் - விஜயகுமாரி குடும்பம்


## கிளிநொச்சி, யாழ்ப்பாணம் இலவச அழகுக்கலை பயிற்சி

இலவச அழகுக்கலைப் பயிற்சியினால் பல அழகுக்கலை ஆலோசகர்களையும், சுயாதீன முகாமையாளர்களையும் உருவாக்கி வெற்றியடையச் செய்த சுவீடன் நாட்டு ஒறிபிளேம் (Oriflame) நிறுவனம் 590/= பதிவுக்கட்டணத்துடன் இலவச அழகுக்கலை பயிற்சியை ஆரம்பிக்கவுள்ளது.

Facial, Gold Facial, Pedicure, Manicure, Threading, Hairstyle, Bridal Make-up,.... என அனைத்து பயிற்சிகளும் செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

**அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.**



கிளிநொச்சி
காலம் - 26.04.2012
நேரம் - 2.00 p.m
இடம் - கிளி/கனகபுரம் தமிழ் கலவன் பாடசாலை
வகுப்புக்கள் 29 ஆம் திகதி 10 மணிக்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம்.
காலம் - 27.04.2012
நேரம் - 11.00 மணி
இடம் - ஒறிபிளேம் யாழ். கிளை, 187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
வகுப்புக்கள் 28 ஆம் திகதி 1.30 மணிக்கு ஆரம்பம்

தொடர்புகளுக்கு : 077 2288243, 077 2533507



## கோழிக்குஞ்சு விநியோகம்

No.1 பிறீமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085


## அந்தியேட்டி சபிண்டீகரண கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
12
★
06
★
1952



உதிர்வு
12
★
03
★
2012

**திருமதி மங்களேஸ்வரி கனகரத்தினம்**
(கிராம அலுவலர், திருநகர், துணுக்காய்)

எங்கள் அன்பு அன்னை திருமதி மங்களேஸ்வரி கனகரத்தினம் அவர்கள் கடந்த (12.03.2012) அன்று அமரத்துவம் அடைந்தபோது இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டு அஞ்சலிகளைத் தெரிவித்ததுடன் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் அன்னார் அமரத்துவம் அடைந்த நாளிலிருந்து இன்று வரை ஆறுதல் கூறியும், பல வழிகளிலும் உதவி வரும் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆன்ம ஈடேற்றம் குறித்த அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை காலை ஒட்டன் குளம் பாலி ஆற்றங்கரையிலும் (25. 04. 2012) புதன்கிழமை எமது இல்லத்திலும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

708, யோகபுரம், மல்லாவி.
தொ. பே. 077 3439 780

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

**திருமதி வேதநாயகி இராசரத்தினம்**



மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேதநாயகி இராசரத்தினம் (21.04.2012) சனிக் கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், சயந்தன் (பிரான்ஸ்), பிரசன்னா, பிரதாபன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), பிரதீசன் (பொறியியல்பீடம் - பேராதனைப் பல்கலைக்கழகம்), பிரலக்சா (யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி தரம் 10 மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்திரகுமார், தாட்ஷாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் இஷான், கிஷானா, ரேஜிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தில்லைநாயகி, இராசரத்தினம், நவரத்தினம், விஜயரத்தினம் (சுவிஸ்), குலரத்தினம் (ஜேர்மனி), ஜெயரத்தினம், சுதமதி (கனடா), சாந்தநாயகி, இராச பூபதி ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற வேதநாயகம், புவனேஸ்வரி, சற்குணேஸ்வரி, கலையரசி (சுவிஸ்), சுதர்சினி (ஜேர்மனி), சியாமளா, தேவராசா (கனடா), தில்லைநடேசன், லிங்கேஸ்வரன், இராசலட்சுமி, சிவராசா, சிவபாலு ஆகியோரின் அன்புமைத்துனியும், காலஞ்சென்ற கதிரவேலு, செல்வராணி, பரமேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2012) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் பிரதீபன் அவர்களின் அன்புத் தாய்
திருமதி வேதநாயகி இராசரத்தினம்
கடந்த (21.04.2012) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அவர்களின் மறைவை ஒட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் வருட பொறியியல் பீட தமிழ் மாணவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அணியை பந்தாடியது ஜொனியன்ஸ்

## தசரிதனின் சதம் வீணானது


வெற்றிக்கிண்ணத்துடன் ஜொனியன்ஸ் அணியினர்

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியின் தசரிதன் சதமடித்த போதும் ஜொனியன்ஸ் அணியின் வீரர்கள் அனைவரும் பொறுப்புணர்ந்து விளையாடியதால் பரபரப்பான இறுதிப் போட்டியில் பல்கலை அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சுவீகரித்துக்கொண்டது.**

வெற்றிக்களிப்பில் ஜொனியன்ஸ் அணியினர்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும், கிரிக்கெட் அணியும் இணைந்து நடத்திய, அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி பல்கலைக்கழக வெற்றிக் கிண்ணத்தை முதன்முறையாகப் பெற்றுக் கொண்டது.

பல்கலைக்கழக வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிரிக்கெட் அணியும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் நேற்று முன்தினம் சனிக்கிழமை மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அந்த அணியின் தசரிதன் சதமடித்து அசத்தினார்.

தசரிதன் 12 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 109 ஓட்டங்களையும், செல்ரன் 69 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 22 ஓட்டங்களையும், விகாஷ் 14 ஓட்டங்களையும் பல்கலைக்கழக அணி சார்பாகப் பெற்றனர். உதிரிகளாக 49 ஓட்டங்கள் அந்த அணிக்குக் கிடைத்தன.

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரதீஸ்குமார், லவேந்திரா ஆகியோர் தலா 3 இலக்குகளையும், அகிலன் 2 இலக்குகளையும், மயூரன் ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

282 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை ஜொனியன்ஸ் அணியால் எட்ட முடியாது என்றே அனைவரும் கருதினர். எனினும் இலக்கை சீரான வேகத்தில் துரத்திய ஜொனியன்ஸ் வீரர்கள் அனைவரும் பொறுப்புணர்ந்து துடுப்பெடுத்தாடியதால் அந்த அணி 48.2 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்று வரலாற்று வெற்றியைப் படைத்தது.

ஜொனியன்ஸ் அணியின் டக்சன் (ஆட்டமிழக்காமல்) 48 ஓட்டங்களையும், லவேந்திரா 41 ஓட்டங்களையும், குமணன் 36 ஓட்டங்களையும், விதுஷன் 35 ஓட்டங்களையும், மயூரன் 32 ஓட்டங்களையும், அகிலன் 24 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தனர். உதிரிகளாக பல்கலைக்கழக அணியால் 52 ஓட்டங்கள் அள்ளி வழங்கப்பட்டன.


இரண்டாமிடத்துக்கான வெற்றிக் கிண்ணத்துடன் பல்கலை அணித் தலைவர் செல்ரன்

பல்கலைக் கழக அணியைச் சேர்ந்த விதுபாலா 4 இலக்குகளையும் ஜனார்த்தனன், விதுரன், தசரிதன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆர்.தசரிதன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் சிறந்த பந்து வீச்சாளராக வி.விதுபாலாவும் (பல்கலை அணி), எ.அன்புஜன் (ஜொனியன்ஸ்) சிறந்த களத்தடுப்பாளராகவும் ப.லவேந்திரா (ஜொனியன்ஸ்) போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். (ந-23-86)

# வந்தார்கள் வென்றார்கள்

## நோயல் கிண்ணம் நாலந்தாவுக்கு

5ஆவது தடவையாக நடைபெற்ற நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுத்தொடரை கொழும்பு நாலந்தாக் கல்லூரி சுவீகரித்தது. வட்டுக்கோட்டையில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வந்த இந்தச் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது. இரண்டாவது அரையிறுதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்தாடிய கொழும்பு நாலந்தா கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இதனடிப்படையில் இறுதிப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் கொழும்பு நாலந்தாக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கொழும்பு நாலந்தாக் கல்லூரி அணியின் ஆரம்பமே அசத்தலாக இருந்தது. பந்து அடிக்கடி எல்லைக்கோட்டை கடந்த வண்ணமிருந்தது. 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் நாலந்தா அணி 5 இலக்குகளை மட்டுமே இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் இஸான் 32 ஓட்டங்களையும் பிரமுத் 35 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஆறாவது வீரராக களமிறங்கிய றுசித்த ஆட்டமிழக்காமல் 13 பந்துகளை மட்டுமே எதிர் கொண்டு 37 ஓட்டங்களைப் பெற்றார்.




162 என்ற பெரிய ஓட்ட இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் நாலந்த வீரர் லஹிருவின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் தடுமாறினர். லஹிரு வீசிய முதலாவது பந்துப் பரிமாற்றத்திலே 3 இலக்குகள் வீழ்த்தப்பட மத்திய கல்லூரி ஓட்டமெதனையும் பெறாமல் 3 இலக்குகளை இழந்து தடுமாறியது.

பின்னர் கபிலன், கோகுலன் ஆகியோர் ஓரளவுக்கு நின்று பிடிக்க மத்திய கல்லூரி அணியின் ஓட்ட எண்ணிக்கை 30 ஐ தொட்டது. மீண்டும் லஹிரு மற்றும் குஸான் ஆகியோர் தலா இரு இலக்குகளை தகர்க்க ஒரு கட்டத்தில் மத்திய கல்லூரி அணி 35 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறியது. எனினும் பின்னர் ஜோடி சேர்ந்த டார்வின் மற்றும் நிரோஜன் ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வழங்கி அணிக்கு நம்பிக்கை அளித்தனர்.

இவர்களுள் நிரோஜன் இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 23 ஓட்டங்களையும், டார்வின் 3 பவுண்டரிகள் அடங்கலாக 22 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஈற்றில் மத்திய கல்லூரி 93 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழக்க நாலந்தாக் கல்லூரி 62 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நலாந்த அணி சார்பில் பந்துவீச்சில் லஹிரு 5 இலக்குகளையும், குஸான் மற்றும் பிரமுத் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர். பந்துவீச்சில் அசத்திய லஹிரு போட்டியின் ஆட்ட நாயகனாகவும், தொடர்முழுவதும் துடுப்பாட்டத்தில் பிரகாசித்த நலாந்தாக் கல்லூரி அணித்தலைவர் கோஸன் தொடரின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சுற்றுத்தொடரின் மூன்றாவது இடத்திற்காக நடைபெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி இலகுவான வெற்றியைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ந-130)



### சாதனை விளாசல்

கொழும்பு நாலந்தாக் கல்லூரியின் 19 வயதிற்குட்பட்ட அணியின் தலைவர் கோஸன் ஜெயவிக்கிரம ஒரு ஓவரில் 34 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தார்.

விமலேந்திரன் வெற்றிக்கிண்ண சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் நாலந்தாக் கல்லூரிக்கும் இடையே வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியிலேயே இச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

போட்டியிலே முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 20 பந்துப் பரிமாற்றங்களில் 125 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நாலந்தா அணி இந்த இலக்கினை வெறும் 11 பந்துப் பரிமாற்றங்களிலே அடைந்தது. இதிலே நாலந்தா அணியின் தலைவர் கோஸன் 34 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு 91 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பத்திரிசியார் கல்லூரியின் நோபட் வீசிய பந்துப் பரிமாற்றத்திலேயே 5 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக கோஸன் ஜெயவிக்கரம 34 ஓட்டங்களை பெற்றார். (ந-130)

## மத்தியஸ்தர் சங்கத்தின் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23


இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம், உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்களை விருது வழங்கி கௌரவித்த நிகழ்வு அண்மையில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதில் யாழ்.உதைபந்தாட்டச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் மு.பிரான்சிஸ் கௌரவிக்கப்பட்டதை முன்னிட்டு அவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை 4.30 மணியளவில் உதைபந்தாட்ட மத்திய சங்கத்தின் தலைவர் தேசமானிய லயன் இம்மனுவல் ஆனல்ட் தலைமையில் ஈச்சமோட்டை விதானையார் வீதியிலுள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிழ்ந்தது டெல்லி; எழுந்தது புனே





டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கு எதிரான ஐ.பி.எல் லீக் போட்டியில், புனே வாரியர்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் நடந்த 27வது லீக் போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ், புனே வாரியர்ஸ் அணிகள் மோதின.

புனே அணிக்கு ரைடர், உத்தப்பா இணைந்து தொடக்கம் தந்தனர். இர்பான் பதானின் பந்துப் பரிமாற்றத்தில் இரு பவுண்டரி அடித்த உத்தப்பா(10), இம்முறையும் நீடிக்கவில்லை. ரைடருடன் அணித்தலைவர் கங்குலி சேர்ந்தார்.

மோர்கல் ஓவரில் சிக்ஸர், பவுண்டரி விளாசிய ரைடர், உமேஷ் யாதவ் பந்தையும் சிக்ஸருக்கு விரட்டினார். கங்குலி தன் பங்குக்கு மோர்கல் பந்தில் பவுண்டரி அடித்தார். தொடர்ந்து விளாசிய இவர், பீட்டர்சன் பந்தில் சிக்ஸர் அடித்தார். நதீமின் சுழலை அழகாகச் சமாளித்த கங்குலி, இரு பவுண்டரிகள் அடிக்க, 12 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் புனே அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

கங்குலி, 35 பந்துகளில் 41 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். மறுமுனையில் அதிரடியைத் தொடர்ந்த ரைடர், அரைச்சதம் எட்டினார். இவருடன் சேர்ந்த ஸ்மித், நதீமின் நான்காவது பந்துப்பரிமாற்றத்தில் 2 சிக்ஸர், 2 பவுண்டரி அடித்து மிரட்டினார்.

ரைடர், 58 பந்தில் 86 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். புனே வாரியர்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 192 ஓட்டங்கள் எடுத்தது. மத்யூஸ் (6), ஸ்மித் (34) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கடின இலக்கைத் துரத்திய டெல்லி அணிக்கு ஜெயவர்த்தனா 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி தந்தார். பின் ஷேவாக், பீட்டர்சன் இணைந்தனர். கார்த்திக் வீசிய 5வது பந்துப்பரிமாற்றத்தில் இருந்து டெல்லியின் அதிரடி துவங்கியது. இந்த ஓவரில் ஷேவாக் அடுத்தடுத்து சிக்ஸர், பவுண்டரி விளாசினார்.

இவருக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுத்த பீட்டர்சன், மத்தியூஸின் பந்துப் பரிமாற்றத்தில் 3 சிக்ஸர் அடித்து அசத்தினார். ரைடரின் முதல் ஓவரில் ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர் என ஷேவாக் வாண வேடிக்கை காட்டினார். தொடர்ந்து அசத்திய இவர், ராகுல் சர்மாவின் பந்துப்பரிமாற்றத்தில் தலா ஒரு பவுண்டரி, சிக்ஸர் அடித்தார்.

இந்த நிலையில் இத்தொடரில் முதன் முதலாக பந்துவீசிய கங்குலி, முதல் பந்தில் அபாயகரமான பீட்டர்சனை(32) போல்டாக்கினார். தனது பந்தில் சிக்ஸர் அடித்த இர்பான் பதானையும்(15), திருப்பி அனுப்பினார் கங்குலி. 27 ஆவது பந்தில் அரைச்சதம் அடித்த ஷேவாக்(57) கார்த்திக் சுழலில் அவரிடமே சிக்கினார்.

அணியை மீட்பார் என நம்பப்பட்ட ரோஸ் டெய்லர்(12) நிலைக்கவில்லை. யோகேஷ் நகாரின்(24) கடைசி நேரப் போராட்டம் வீணானது. டெல்லி டேர்டேவில்ஸ் அணி, 20 பந்துப்பரிமாற்றங்களில் 7இலக்குகளை இழந்து 172 ஓட்டங்கள் எடுத்து 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

## மீண்டும் களத்துக்கு



புற்றுநோய் சிகிச்சையை முடித்துக் கொண்டு கடந்த சில தினங்களுக்கு முன்பு, இந்திய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் வீடு திரும்பினார்.

தற்போது வீட்டில் ஓய்வெடுத்து வரும் யுவராஜ், இன்னும் ஓரிரு வாரங்களில் கிரிக்கெட் பயிற்சி மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது, விரைவில் இந்திய அணிக்கு திரும்புவேன். அதற்கான பயிற்சிகளை இன்னும் ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்க உள்ளேன்.

கிரிக்கெட் களத்திற்கு விரைவில் திரும்பி இந்திய அணியின் தொப்பியை அணிய ஆவலாக உள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

## பிரீத்தியைப் பிடிக்கும்



ஐ.பி.எல் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் இடம் பெற்றுள்ள முன்னணி சுழற்பந்து வீரர் பியூஸ் சாவ்லாவின் பந்து வீச்சு மிகவும் சிறப்பாக இருந்து வருகிறது.

கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது தோல்வியை நோக்கி சென்று கொண்டிருந்த தனது அணியை அபாரமான பந்து வீச்சால் வெற்றி பெற வைத்தார்.

யாருக்கு இரவு உணவு கொடுக்க விரும்புகிறீர்கள் என்று இவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது, ''எனக்குப் பிடித்த நடிகையான பரீத்தி ஜிந்தாவுக்கு தான்'' என்றார்.



# ஐ.பி.எல்லுக்கு பணிந்தது இலங்கை மத்தியூஸுக்கு தகர்ந்தது தடை!

இலங்கை அணியின் இளம் சகலதுறை வீரர் அன்ஜலோ மத்தியூஸ் இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பந்துவீசுவதற்கு இலங்கைக் கிரிக்கெட் சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு மத்தியூஸிற்கான அனுமதியை உடற்கூற்றியல் நிபுணர் ஸ்டீவ் மௌன்ற்றும் வழங்கியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக உடற்தகுதிப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வரும் அஞ்சலோ மத்தியூஸ் அண்மைக் காலமாக தொடர்ச்சியாகத் தொடர்களைத் தவறவிட்டு வருகிறார். அண்மையில் இடம்பெற்ற ஆஸ்ரேலிய முக்கோணத் தொடரின் இறுதி ஆட்டங்களைத் தவறவிட்ட மத்தியூஸ், அதன் பின்னர் இடம்பெற்ற ஆசியக் கிண்ணத் தொடரிலும் பங்குபற்றியிருக்கவில்லை. இங்கிலாந்து அணி இலங்கைக்கு டெஸ்ட் தொடருக்காக வந்திருந்த போது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பங்குபற்றியிராத மத்தியூஸ், இரண்டாவது ஆட்டத்தில் துடுப்பாட்ட வீரராக மாத்திரம் பங்குபற்றியிருந்தார்.

அதன் போது கருத்துத் தெரிவித்திருந்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர் அசந்த டி மெல், அன்ஜலோ மத்தியூஸ் இனி மேல் சகலதுறை வீரராகப் பங்குபற்றுவது சந்தேகத்திற்குரியது என்பதனால் அவரைத் தனியே துடுப்பாட்ட வீரராகப் பயன்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்துத் தொடர் நிறைவடைந்து சில நாட்களில் ஐ.பி.எல் தொடரில் பங்குபற்றிய அன்ஜலோ மத்தியூஸ், புனே வாரியர்ஸ் அணி சார்பாக பந்துவீசியும் வருகிறார். இது கடுமையான விமர்சனத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அன்ஜலோ மத்தியூஸின் முகவர் சார்ளி ஒஸ்ரின், அன்ஜலோ மத்தியூஸ் முழுமையாகக் குணமடைந்துள்ளதோடு, ஐ.பி.எல். தொடரில் பந்துவீச அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அத்தோடு அவர் அண்மையில் தெரிவித்தபடி தொடர்ந்தும் சகலதுறை வீரராகவே செயற்பட விரும்புகிறார் எனவும் முகவர் தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடரில் அன்ஜலோ மத்தியூஸ் பந்துவீசியதை அடுத்து இலங்கை அணியின் பிரதம தேர்வாளர் அசந்த டி மெல் அதற்கு தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தியதோடு, தேர்வாளர்களது சொல்லை அவர் கேட்க விரும்பாது விடில் எதுவும் செய்ய முடியாது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பார்சிலோனாவைத் தோற்கடித்தது செல்ஷி

பார்சிலோனா கழகத்திற்கும், செல்ஷி கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற சம்பியன்ஸ் லீக் போட்டியில் செல்ஷி கழகம் 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றுள்ளது. முக்கியமான அரையிறுதிப் போட்டியிலேயே இந்த எதிர்பாராத வெற்றியை செல்ஷி பெற்றுள்ளது.

பார்சிலோனா கழகம் இந்தப் போட்டியில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், செல்ஷி கழகம் சிறப்பாகத் தடுத்தாடி பார்சிலோனா கழகம் கோல்கள் பெறுவதைத் தடுத்தது. அத்தோடு 45 ஆவது நிமிடத்தில் செல்ஷியின் டிடியெர் ட்ரோக்பா பெற்றுக் கொடுத்த கோல் - செல்ஷி கழகத்தின் வெற்றியை உறுதி செய்து கொண்டது.

இந்த வெற்றியின் மூலம் சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டிக்குச் செல்வதற்கான தனது வாய்ப்பை செல்ஷி கழகம் அதிகரித்துக்கொண்டது. சம்பியன்ஸ் லீக் விதிகளின் படி அரையிறுதியொன்று சொந்த மைதானத்திலும், எதிரணியின் மைதானத்திலும் இடம்பெறும் என்பதால் அடுத்ததாக பார்சிலோனாவின் இடம்பெறவுள்ள பார்சிலோனாக் கழகத்திற்கு எதிரான போட்டியின் முடிவைப் பொறுத்து செல்ஷி இறுதிப் போட்டிக்கான வாய்ப்பைப் பெறும்.

பார்சிலோனாக் கழகம் பெற்றுக் கொண்ட தோல்வி, இந்தப் பருவகாலத்தில் சம்பியன்ஸ் லீக் தொடரில் அந்த அணி பெற்றுக்கொண்ட முதலாவது தோல்வியாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பங்களாதேஷுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஓர் ஒரு நாள் சர்வதேச ஆட்டத்திலும், ஓர் 'ரி-20' ஆட்டத்திலும் பங்குபற்றவிருந்த பங்களாதேஷ் அணியின் கிரிக்கெட் சுற்றுப்பயணத்திற்கு நான்கு வாரத்தடை விதிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷின் டாக்கா நகரிலுள்ள உயர் நீதிமன்றமே இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பல்கலைக்கழகம் ஒன்றின் ஆசிரியர் மற்றும், நீதிமன்ற வழக்கறிஞர் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த வழக்கு, பங்களாதேஷ் அணி பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்வதைத் தடை செய்யுமாறு கோரியிருந்தது. பாதுகாப்புக் காரணங்கள் காரணமாக இந்தக் கோரிக்கையை விடுப்பதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதன்படி நான்கு வார காலத்திற்கு அந்தத் தொடரை நடத்துவதற்கான தடையை விதித்துள்ள டாக்க உயர் நீதிமன்றம், அந்தத் தொடரில் பங்களாதேஷ் அணியை பங்குபற்ற வைப்பதற்கான காரணத்தை விளக்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் முஸ்தபா கமாலுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏற்கனவே இந்தத் தொடர் இடம்பெறுமா என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்த நிலையில் இந்த நீதிமன்றத் தீர்ப்பு அந்தத் தொடர் மீதான சந்தேகங்களை மீண்டும் எழுப்பியுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொள்ள ஏனைய நாடுகள் தயங்கி வரும் நிலையில், எதிர்வரும் 29 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளில் இடம்பெற எதிர்பார்க்கப்பட்டுள்ள இவ்விரண்டு போட்டிகளும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பினார் லசித் மலிங்க

ஐ.பி.எல். போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடி வரும் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க காயம் காரணமாக நாடு திரும்பியுள்ளார்.

முதுகு உபாதைக்காக லசித் மலிங்க இலங்கையில் சிகிச்சை பெற்று வருவதாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க உறுதிப்படுத்தினார். எனினும் சிகிச்சை எவ்வளவு காலத்திற்கு நடைபெறும் என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இரண்டு வாரகாலத்திற்கு மலிங்க ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க முடியாது போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 11ஆம் திகதி ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கெதிராக நடைபெற்ற போட்டியில் விளையாடிய மலிங்க, 16ஆம் திகதி நடைபெற்ற டெல்லி டேர் டெவில்ஸ் அணிக்கெதிரான போட்டியைத் தவறவிட்டிருந்தார்.

> “ஐ.பி.எல். தொடரில் இதுவரை அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உள்ள மலிங்கவின் இழப்பு மும்பை இந்தியன்ஸ் அணியைப் பாதிக்கும்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் நிர்வாகத்தினது கருத்துக்களின் அடிப்படையில் 11ஆம் திகதி போட்டிக்குப் பின்பு மலிங்க பயிற்சிகளில் ஈடுபடவில்லை எனவும், 16ஆம் திகதி காலையிலேயே அவர் இலங்கை வந்துள்ளார் எனவும் தெரிகிறது.



எனினும் மிக விரைவில் அவர் அணியோடு திரும்ப இணைந்து கொள்வார் என்று எதிர் பார்ப்பதாகவும் அணி நிர்வாகம் தெரிவித்தது. ஐ.பி.எல். தொடரில் இதுவரை அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றி யவராக உள்ள மலிங்கவின் இழப்பு மும்பை இந்தியன்ஸ் அணியைப் பாதிக் கும் என்று கருதப்படுகிறது. ✱


மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 23,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

நெல்லியடியில் கொடிகாம வீதியில்
புகழ் பூத்த ஆசிரியர்கள் ஒன்று கூடினர்

நியூ சயன்ஸ் அக்கடமி

A/L கலை, வர்த்தகப் பிரிவு
தமிழ் - திரு. ரதீஸ்
புவியியல் - திரு. செல்வா
அளவையியல் - திரு. அரவிந்தன்
இந்துநாகரிகம் - திரு. கலைவேந்தன்
வரலாறு - திரு. கஜன்
பொருளியல் - திரு. பாலா

ஆரம்பம்! 24.04.2012

ஏனைய பாடங்களும் நடைபெறும்.
A/L விஞ்ஞானப் பிரிவு - உயிரியல், கணிதப் பிரிவு
ஆண்டு 1 - O/L வரை எல்லா வகுப்புகளும் நடைபெறும்.
நிர்வாகி.

வாடகைக்கு உண்டு

இல. 10, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியில் உள்ள கடையும் அதனுடன் சேர்ந்த ஓடைக்கடையும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0772238489

பொருளியல்

- அரிய சந்தர்ப்பம்
- 2012 A/L பரீட்சைக்கான துரித மீட்டல்
- சித்தியடையத் தவறும் மாணவர்களுக்கு விசேட கற்றல் நுட்பங்கள்
- இரவுநேர வகுப்புக்கள்
இடம்: திருநெல்வேலி, யாழ். முன்னணித் தேசியப் பாடசாலை ஆசிரியர்.
தொடர்பு: 0778780814

திருமணம் செய்து UK செல்வதற்கான A1 Exam
DMI COMPUTER EDUCATION
Sponsor/Settlement Visa
British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No. 74, கண்டி வீதி, Tel. :021-227 0243

அக்ஷய திருதியை தினமான 24.04.2012 அன்று கொள்வனவு செய்யும் அனைத்து நகைகளுக்கும்
அழகிய பெறுமதிமிக்க அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி



இல.111,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224134
இல.32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:- 0212225511



அழகிய தங்கப்பவுண் நகைகளை நம்பிக்கையுடன் பெற்றிட நம்பகரமான ஸ்தாபனம்

நியூ நகுலா ஜுவல்லர்ஸ்

அக்ஷய திருதியை தினத்தில் இல்லங்களுக்கு தங்கத்தை எடுத்துச்சென்று மேலும் செல்வத்தை செழிக்கச் செய்யுங்கள்



இல.109, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0212219119
45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-0212224101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அக்ஷய திருதியைச் சிறப்பு மலர்

## ஐஸ்வர்யம் தரும் அக்ஷய திருதியை



செல்வம், பொன், பொருள், வியாபாரம், தொழில் அபிவிருத்தி ஆகியவற்றை அருள்பவர் லட்சுமி குபேரர். 'குபேரன்' என்றால் 'செல்வத்தைப் பெருக்குபவன்' . இலங்கையை ஆண்ட ராவணனின் தம்பி குபேரன். இவர்களின் தந்தை விச்ராவசு. குபேரன் மிகச் சிறந்த சிவபக்தன். சிவபெருமானைத் தியானித்து பலகாலம் தவம் செய்து வந்தான். சிவபெருமான் அவனை வடதிசைக்கு அதிபதியாக நியமித்து ஆளச் செய்தார். அன்று முதல் வடதிசைக்கு ஏற்றம் உண்டானது. 'வாழப் பிறந்தவனுக்கு வடக்கு' என்ற சொல்வழக்கு உண்டானது இதனால் தான். நவக்கிரகங்களில் பொன்மனம் படைத்தவர் குரு. இவருக்குரிய திசை வடக்கு. குருவின் பார்வை பட்டால் கோடி நன்மை என்று குறிப்பிடுவர். குபேரனுக்குரிய விமானம் குபேரவிமானம். இவ்விமானம் எங்கு பறந்து சென்றாலும் பொன்,முத்து, நவமணிகளைச் சிந்திக் கொண்டே செல்லும். அந்த விமானத்தை குபேரனிடம் இருந்து ராவணன் பெற்றுக் கொண்டதாக ராமாயணம் கூறுகிறது.

குபேரன் சிவந்தநிறமும், குள்ளமான உருவமும், புஷ்டியான செல்வச்செழிப்பும் கொண்டவராக இருக்கிறார். குபேர பட்டினத்திற்கு அழகாபுரி என்று பெயர். அத்தாணி மண்டபத்தில் தாமரை மலர் மீது மீனாசனத்தில் மெத்தையின் மீது குபேரன் அமர்ந்திருப்பார். முத்துக்குடை அவர் மீது சுழன்று கொண்டிருக்கும். திருப்பதி வெங்கடாஜலபதி - பத்மாவதி திருமணத்திற்குப் பணம் தேவைப்பட்டது. பெருமாள் குபேரனை அழைத்து உதவும்படிவேண்டிக் கொண்டார். ''என்னிடம் உள்ள செல்வத்திற்கு எல்லாம் அதிபதி திருமகளே. அவளோ உம் மார்பில் குடியிருக்கிறாள். அதனால், என்னிடம் செல்வம் கேட்டுப் பெற வேண்டிய தில்லை,'' என்று லட்சுமி குபேரர் மறுத்துவிட்டார்.

திருமால் கலியுக தர்மத்தைத்தான் கடைப்பிடித்துத்தான் ஆகவேண்டும். அதனால், 114 லட்சம் பொற்காசுகளைக் கடனாகத் தரும்படி வேண்டிக் கொண்டார். அதற்கு ஒவ்வொரு மாதமும் வட்டி செலுத்துவதாகவும், கலியுகத்தின் முடிவில் முற்பணத்தை மீண்டும் லட்சுமி குபேரருக்கு தந்துவிடுவதாகவும் சொல்லி கடன்பத்திரத்தில் கையெழுத்து இட்டார். அந்தப் பத்திரத்தில் பிரம்மாவும், சிவ பெருமானும் சாட்சி கையொப்பம் இட்டனர். வெங்கடேசப்பெருமாள் வட்டி கட்டுவதற்காக நாம் உண்டியலில் பணம் போடுகிறோம். அதற்கு ஈடாக பலமடங்கு அருளை நமக்குத் திருப்ப அருள்கிறார். அக்ஷய திருதியை அன்று செல்வ வளம் தரும் லட்சுமி குபேரரை வழிபட்டால் வீட்டில் செல்வத்திருமகளின் அருள் பெருகும்.

### செல்வம் பெருக்கும் லட்சுமி ஸ்தோத்திரம்


செல்வ வாழ்வருளும் திருமகள் லட்சுமி இல்லம் தேடி வரும் நல்ல நாள் அட்சயதிருதியை. இந்நாளில் அவள் திருவடிகளைப் போற்றி வழிபடும் ஸ்தோத்திரத்தைப் படித்து செல்வவளம் பெறுவோம்.

VIII ஆரம்ப பக்கம் பார்க்க

தங்கத் திருநாளான
அக்ஷய திருதியை தினத்தில்
காலை 7 மணி முதல் இரவு 9.30 மணிவரை திறந்திருக்கும்



குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசய திருநாளாம் அக்ஷயதிருதியை நாளை(24.04.2012) செவ்வாய்க்கிழமை வருகிறது. இத்திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை கொழும்பில் யாழ் மைதிலி ஜுவலறியிலும் யாழ்ப்பாணத்தில் மைதிலி நகைமாடத்திலும் வாங்கி மகிழுங்கள்.



அன்றைய தினத்திற்காக...

- அக்ஷய திருதியை முன்னிட்டு அதிநவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு அதற்கான விலையில் நம்பமுடியாத கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகள் வாங்குவோருக்கு விசேட விலைக்கழிவு உண்டு



- பவுண் காசு மற்றும் லக்ஸ்மி காசுக்கு விலைக்கழிவு உண்டு.
- குறிப்பிட்ட சில நகைகள் தங்க விலைக்கே விற்கப்படும்
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

தரம், நாணயம், உத்தரவாதம் கொண்ட நகைகளை கொள்வனவு செய்ய நாடவேண்டிய ஒரே இடம்

மைதிலி நகைமாடம்

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7902

யாழ். மைதிலி ஜுவலறி

79Z, செட்டியார் தெரு, கொழும்பு-11

011 239 6239

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியைச் சிறப்பு மலர்

## நிஷானந்தா ஜுவல்லறி

### தங்கத் திருநாளாம்
### அக்ஷய திருதியை தினமான

நாளை (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் தங்கம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும் என்பதை எமது இனிய வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.



அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்களைக் கொண்ட தங்கநகைகளை உங்கள் எண்ணம் போல் நீங்கள் விரும்பிய தினத்துக்கு தருபவர்கள்

நிஷானந்தா ஜுவல்லறி
இல. 51, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7985





தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை அன்று தங்கத்தை கொள்வனவு செய்து உங்கள் வீட்டுச் செல்வத்தை பெருக்குங்கள்

## சிறி கண்ணன்
## ஜுவல் ஹவுஸ்

சங்கானை நிகரை வைரவர் ஆலய அன்னதான மண்டப சிறப்பு பூஜை. வாழ்த்தும் கண்ணன் ஜுவல்ஸ் ஊழியர்கள்





T. குருபரன்
Tel: 0779231602

இணுவில் சந்தி, இணுவில்

## ஜுவல் பிளாசா
## Jewel Plaza

### தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை




தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை (24.04.2012) நாளன்று விசேட விலைக்கழிவுகளும் பெறுமதிமிக்க பரிசுகளும் அள்ளி வழங்கப்படும்.







கண்கவரும் டிசைன்களில் தரம், நாணயம், சரியான நிறையுடன் ஓடர் செய்து குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும் மற்றும் அசல் சிங்கப்பூர்

நகைகளை தரம், நிறை விலைகளில் பங்கம் ஏற்படாத வண்ணம் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## ஜுவல் பிளாசா

இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 3124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய பாத்திரமாய் செல்வம் செழிக்கும்

அள்ள அள்ளக் குறையாமல் வளரக்கூடிய பாத்திரத்தை அக்ஷய பாத்திரம் என்று சொல்லுவார்கள். மணிமேகலை மாதவியின் மகள் இரட்டைக் காப்பியங்களில் ஒன்றானது மணிமேகலை இந்த நூலின் கூற்றின்படி மணிமேகலையின் கையில் ஓர் அமுதசுரபி இருந்தது இதைத்தான் அக்ஷய பாத்திரம் என்று சொல்வார்கள். பாண்டவர்கள வனவாசம் இருந்தபோது திரௌபதையிடம் அக்ஷய பாத்திரம் ஒன்று இருந்தது. அந்த அக்ஷய பாத்திரத்திலிருந்து உணவு எடுத்து தினமும் திரௌபதி பாண்டவர்களுக்கு பரிமாறுவாள். தம்மை நாடிவரும் அதிதிகள் மற்றும் பலருக்கும் இதன்மூலம் உணவு பரிமாறுவாள்!. உணவு அழித்து முடிந்தபின் அதனை கழுவித்துடைத்துவைத்துவிடுவாள்.

ஒருநாள் வழக்கம் போல பாண்டவர்களுக்கு விருந்தினர்களுக்கும் உணவு பரிமாறிய பின் பாத்திரத்தை கழுவிவைத்துவிட்டாள். பாஞ்சாலி சற்று நேரம் கழித்து கிருஷ்ண பரமாத்மா அங்கு வந்தார். திரௌபதையிடம் ''அம்மா! எனக்கு பசிக்கிறது உணவு கொடு'' என்று கேட்டார்.

திரௌபதை மனம்பதைபதைத்துப்போனாள். பாத்திரத்தை கழுவிவிட்டோமே, எப்படி பரமாத்மாக்கு உணவு படைப்பது என்று யோசித்தபடியே , பாத்திரத்தை எடுத்துப் பார்த்தாள், அதில் ஒரே ஒரு பருக்கை மட்டும் இருந்தது. மாயவனும் அதையே அவதானிப்படியே, ''தங்காய்''! அந்த பருக்கையை எனக்கு கொடுத்தால் என் பசி தீரும். '' என்றார். அவ்வாறே திரௌபதையும் மாயவனுக்கு கொடுக்க அவரின் பசியும் தீர்ந்தது. அன்றய தினம் திருதியை தினமாகும். கிருஷ்ண பகவான் துணையுடன், இந்த நிகழ்ச்சி நடந்த நாள் அட்சய திருதியை என்று போற்றப்படுகிறது.

கிருஷ்ண பரமாத்மாவுடன் ஒன்றாக இருந்தவர் குசேலர் ஏழையான குசேலர் பெரிய குடும்பஸ்தர் துவாரகை மன்னனாக இருந்த கிருஷ்ண பரமாத்மாவைப்பார்க்கக் குசேலன் அவலை எடுத்துகொண்டு சென்றார்.



இளமைக்கால நினைப்பு பள்ளித்தோழமை பரமாத்மாவுக்கு நினைவுக்கு வந்தது. அந்த நினைப்புடன் தோழன் கொண்டுவந்த அவலை இன்பமுடன் உண்டார்.

அதே நேரத்தில் குசேலர் வீட்டில் தாண்டவம் ஆடிய வறுமை அகன்றது. அட்ட இலக்குமிகளும் அங்கே செழிப்புடன் தோன்றினர் இந்த நிகழ்ச்சி நடந்த தினம் அக்ஷய திருதியை சோதிட ரீதியான இந்துக்களின் வருஷ ஆரம்யம் அக்ஷய வருஷமாகும் வைகாசி மாதத்திலே வரும் மூன்றாவது திதி நாள் அக்ஷய திருதியை நாள் ஆகும். இந்தத் திதி அன்றைய தினம் மதியம் வரை இருக்கவேண்டும். திருதியை திதி உள்ள நாளில் காலை நேரத்தில் துவிதியைத்திதி இருக்கக்கூடாது. இரண்டாவது திதி (துவிதியை ) நாளுடன் கூடியிருக்கும் திருதியை நாள் அக்ஷய திருதியை என்று சொல்லக் கூடாது. காலையில் இருந்து திருதியை இருக்கிறதோ அந்த நாள் தான் அட்சய திருதியை

துரியோதனன் சபையிலே பாஞ்சாலிக்கு துகில் அளித்து கண்ணன் மாணம் காத்த நாளும் அட்சய திருதியை நாளாகும் .

சுக்கிரனுடைய பாவம் போக்க களத்திரதோசம் நீங்க பரசுராமவதாரம் எடுத்த ஸ்ரீமந்நாராயணனை வணங்க வேண்டியநாள் அக்ஷய திருதியை நாளாகும். இந்த நாள் மகாவிஷ்ணு வுக்குரிய வழிபாட்டுநாளாகும்.

பலராம ஜெயந்தி நாளும் அக்ஷய திருதியை நாளாகும். பரசுராம பலராம ஜெயந்தி நாளாக விளங்குவது அக்ஷய திருதியை நாளாகும்.

அக்ஷய திருதியை என்பது வளர்ச்சிக்குரிய நாள், தொட்டது துலங்கும், வளரும் எனவே இன்றைய நாளில் தர்ம காரியங்களை செய்து பகவானை வழிபட்டு புண்ணியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். தான தர்மங்கள் மன ஈடுபாட்டுடன் செய்ய வேண்டிய நாள். அடுத்த உலகத்துக்கு வழிதேட வேண்டும். முன்னோரை மகிழ்விக்கவேண்டும்.

அக்ஷய திருதியை நாளன்று திதி தர்ப்பணம் செய்து நீர்க்கடன் ஆற்றி முன்னோர் வழிபாடு செய்வது நலம் தரும் பொருள் தேட நினைப்பவர்கள் அன்றய தினம் பொன்வாங்கலாம்.அட்சய திரதியையிலன்று ஏதாவது ஒரு தர்மத்தை தவறாமல் செய்ய வேண்டும். மகா இலக்குமியையும் மகாவிஷ்ணுவையும் அன்றய தினம் வழிபட்டு லக்குமி ஸ்தோத்திரங்கள் ஓதி இம்மையில் நற்பேறு பெற்று மறுமையில் நற்கதி அடைவீர்களாக.

பிரம்ம ஸ்ரீ ச.க சுதர்சனகுரு
பிரதமகுரு
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில்
புலோலி.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நியு பிரியங்கா
## நகைமாளிகை

அக்ஷய திருதியையில் தங்கத்தை கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

அக்ஷய திருதியை தினமான நாளை (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் நகை கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சிறப்புமிக்க அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்படும்.

தரமான 22 கரட் தங்க நகைகளை நவீன டிசைன்களிலும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# நியு பிரியங்கா நகை மாளிகை

2G ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 5644

இல.69, யாழ் வீதி, (A9)
(கிளிநொச்சி கச்சேரி முன்பாக)
கிளிநொச்சி.
021-2285433 / 0777175059.

குறையாத செல்வத்தையும், நிறைவான சுபீட்சத்தையும் அள்ளித்தரும் அக்ஷய திருதியை
நாளை 24.04.2012
பயன் பெறுங்கள்



# புதிய சோதி நகைத் தொழிலகம்
PUTHIYA SOTHY
Nagai Thollilagam

## தங்கப்பவுண் நகை வியாபாரம்

உரிமை . இ. தங்கவேல்
64, டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்

# நியூ கார்த்திகா
## நகைமாடம்



அசல் 22 காரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அக்ஷய திருநாளாம் நாளை 24.04.2012 சுபீட்சத்தையும் ஐஸ்வர்யத்தையும் பெற்றுக்கொள்ளலாம்



இல: 48, Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

உன்னத கலை நயம்மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு கேசத்திற்கேற்ற அதி நவீன மோஸ்தர்களில் தரம் குன்றா தங்கப் பவுண் நகைகளை செய்து பெற்றிட வாரீர்.

# அசோகா
## நகை அகம்

இல. 111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6290

ஓடர் நகைகள் குறித்த ... உத்தர...த்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்



தங்கத் திருநாளான எதிர்வரும் (24.04.2012) செவ்வாய்க்கிழமை எம்மிடம் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் அஹரீவாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்பார்ந்த பளிப்பு பொருள்கள் வழங்கப்படுவதோடு, சிறப்பு விலைக்கழிவும் வழங்கப்படும்.

அக்ஷய திருதியை நாளான நாளை (24.04.2012) செவ்வாய்க்கிழமை உங்கள் விருப்பம் போல் தங்கத்தை வாங்கிச் சென்று சுபீட்சத்தையும் ஐஸ்வர்யத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்



# துர்க்கா
## நகைப் பூங்கா



# THURKKA
## Jewellery Palace

No.256, Kannathiddy, Kasthuriar Road, Jaffna. Tel : 021 222 8831


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மனம் கவரும் நகைகள்
உறுதியுடனும் உத்தரவாதத்துடனும்
பெற்றுக்கொள்ள உகந்த இடம்

**நதியா நகை மாடம்**

இல.02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 3479

கிளை

**கவுசன் நகை மாடம்**

இல.129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தங்கத் திருநாளான நாளை (24.04.2012) செவ்வாய்க்கிழமை உங்கள் மனம் போல் தங்கத்தை வாங்கிச் சென்று ஐஸ்வரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.


## அனைவருக்கும் இனிய அக்ஷய திருதியை வாழ்த்துக்கள்

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தன் சுனைகள் அமைத்தல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்

என்ற பாரதியின் வாக்குக்கு அமைய இந்த அக்ஷய திருதியையாம் பொன்னாளிலே செய்யும் செயல்கள் சிறக்கும் என்பதும் வாங்கும் பொருள்கள் பெருகும் என்பது செய்யும் புண்ணியங்கள் கூடும் என்பது நம்பிக்கை. எனவே நகை வாங்க உகந்த நாளாக இத் திருநாள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. அதனிலும் மேலாக இல்லாத ஒருவருக்கு ஒரு வேளை உணவளிப்தோ ஒரு ஏழைக் குழந்தைக்கு புத்தகம் வாங்கிக் கொடுப்பதோ அல்லது வஸ்திரம் தானம் செய்வதோ நமக்குப் பெரும்புண்ணியத்தை ஈட்டித்தருவதுடன் அது எம்முடனே கூட வருவதுடன் மேலும் பல புண்ணியங்களைச் செய்யத் தூண்டுதலாகவும் அமையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி .

## உளநலம் பெருகிட வேண்டும்

சித்திரைத் திங்களில் சீர்பெருகு
வளர்பிறையில்
வற்றாத அக்ஷய திருதியையாம்
நன்நாளில்
தங்கத் திருநாளாம் இப் பொன்னாளிலே
நாம்
மங்காப் புகழுடன் மாண்புறவாழ வழி
சமைத்திடுவோம்
குறைவின்றி வாழ வழிகாட்டிடும்
திருநாளாம்
மறையிலாத் திருதியையிலே
மகிழ்வுடன்
சிறையிலா வாழ்வுபெற சித்தர்களும்
வாழ்ந்திட
இறையருள் வேண்டி இறைஞ்சிடு
வோம் குபேரனையே
அக்ஷய திருதியையின் அதிபதியாம்
குபேரன்
பக்தர்கள் வாழ்வில் பயன்பெறவே
செய்திடுவான்
எந்தருணமாயினும் எதிரில் நின்றே
ஏற்றமுடன்
எமக்கருள் தந்திடுவான் எழில்மிகு

வனப்புடனே

தெல்லியூர்த் தேவி


அண்டசராசரம் அதிர்ந்திட ஆனந்தத் தாண்டவம் ஆடிடும்
அக்ஷய திருதியையே வருக வருக
நன்னாளினை பொன் நாள் ஆக்கிட

இல. 46

**ஈஸ்வரி நகை அகம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்



மங்கையர் மனம் மகிழ்ந்திட 22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்

உரிமையாளர்:
ஆ. செல்வநாயகம்

பிரதான வீதி, பருத்தித்துறை. தோ.பே. 021 721 1152

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



தங்கத்திருநாளான அக்ஷய திருதியையில் நாளை (24.04.2012) தங்கத்தை கொள்வனவு செய்து உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.



ஸ்ரீ முத்து விநாயகர் துணை,
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

**சுகன்யா நகைத் தொழிலகம்**



டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
077 6737740



தங்கத்தை விரும்பும் நங்கையரே
தங்கத்துக்கு நிகரான அசல் தங்கம்
போல் ஜொலித்திடும் கோல்ட்
கவரிங் நகைகளுக்கும்,
ஆண்களுக்கான வெள்ளி செயின்,
கைச் செயின், பென்டன்கள்,
மோதிரம்



என்பவற்றை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

**தேனுஷா**

ஜுவல் அன்ட் கோல்ட் கவரிங் சென்ரர்
உத்தரவாதத்துடன்



கஸ்தூரியார் வீதி,
இல. 32, ஜும்மா பள்ளிவாசல் வீதி,
(செம்மாதெரு), யாழ்ப்பாணம்.
தொ.இல: 0774702219



அக்ஷய திருதியை நன் நாளினை
அலங்கரித்து நல் ஆசி கிடைத்திட

கோவில் மற்றும் விசேஷ வைபவங்களுக்குரிய பொருள்கள் முதன்மை விற்பனையில்...

**ஸ்ரீ சக்தி மாடம்**

உங்கள் வசதிக்காக

இதோ உங்கள் அருகில் அருக வருக

எம்மிடம் கோயில் சம்பந்தமான திருவாசி, குடை, விளக்கு வகைகள், சுவாமி சிலைகள், யந்திரங்கள் முதலியன ஓடருக்கும் மற்றும் உங்கள் இல்லங்களை மெருகூட்ட பித்தளை பொருள்கள், பொலிசிங் செய்து தரப்படும்.

விற்பனையாளர், பிரதான வீதி,
நெல்லியடி தொ.பே: 021 491 1830.





மங்கையர் மகிழ மணவாளன் கைப்பிடிக்க
இதோ உங்கள் முன்
தங்கத் தினகரனின் அக்ஷய திருதியை
ஆனந்தமாய் கொண்டாட

**வாணி நகை மாளிகையின்**

கோலாகல கொண்டாட்டம்
புதுவித நகைகளை கொள்வனவு செய்ய,
ஓடருக்கு குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரேஇடம்
மக்கள் மனங்கவர் மாளிகையே

**வாணி நகை மாளிகை**

பிரதான வீதி, பருத்தித்துறை,
தொடர்பு: 0778993696


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்ஷய திருதியையில் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வேண்டும்

அக்ஷய திருதியையை முன்னிட்டு தங்க நகை வாங்குவதில் இல்லத்தரசிகள்அதிக ஆர்வம் காட்டுவது வழமை. குறிப்பாக இந்த நாள்களில் பெரும் பாலானோர் ஏதாவது ஒரு தங்கப் பொரளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவர்.

வைகாசி மாதம், சுக்லபட்சம் திருதியை திதியில் விரதத்தை கடைப்பிடித்து எண்ணெய் தேய்த்து நீராடு தலை தவிர்த்தல் என்பது விதி. ஆனால் இந்த தினத்தில் எண்ணெய் தேய்த்து குளித்து விஷ்ணுவை நினைத்து வழிபட வேண்டுமென்பது ஐதீகமாக உள்ளது. அக்ஷய திருதியை தினத்தன்றுதான் இறைவன் விஷ்ணு அக்ஷய பாத்திரத்தை திரௌபதிக்கு கொடுத்தார் என்பதால், இந்த நாளில் தங்கம் வாங்கினால் அது மேலும் மேலும் பெருகும் என்பது சமீபகாலமாக வாடிக்கையாகி விட்டது.




## தங்கம்தான் வாங்க வேண்டும் என்பது நியதி இல்லை

படைப்புக் கடவுளான பிரம்மன் சித்திரை மாதத்தின் வளர்பிறை திருதியை நாளன்றுதான் உயிர்களை உருவாக்கும் தொழிலை தொடங்கினார் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவே அக்ஷய திருதியை நாளில் தொடங்கும் செயல் வளர்ச்சியடையும் என்பது அனைவரின் நம்பிக்கை.

நாளை அக்ஷய திருதியை தினமாகும் . இந்த நாளில் ஏழை, எளியோருக்கு தானம் செய்தால் அதற்கான புண்ணியம் பன்மடங்காக பெருகி நமக்கு திரும்பிக் கிடைக்கும் என்பது ஐதீகம்.

அக்ஷய என்ற சொல்லுக்கு அழிவின்றி வளர்வது என்று பொருள். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் அமாவாசைக்கு பின்வரும் மூன்றாம் பிறை நாள் (திருதியை) அக்ஷய திருதியை நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த நாளில் தான, தர்மங்கள் செய்தால் குறைவின்றி வாழலாம் என்பது முன்னோர் வாக்கு.

அக்ஷய திருதியை நாளினைப் பற்றி மகாபாரதத்தில் பல கதைகள் உண்டு.

பாண்டவர் வனவாசம் சென்ற போது, பசியால் அவதிப்பட்டனர். அதிலிருந்து விடுபட மகாவிஷ்ணுவை வழிபட்டனர். அப்போது அவர், சூரிய பகவானை வழிபட அறிவுறுத்தினார். அதன்படி வழிபாடு செய்தவுடன் சூரிய பகவான் அக்ஷய பாத்திரம் வழங்கினார். சித்திரை மாதத்தில் பாண்டவர்களுக்கு கிடைத்த அக்ஷய பாத்திரம் கேட்டதையெல்லாம் வழங்கியது என்கிறது மகாபாரதம்.

இதுபோல் மற்றொரு மகாபாரதக் கதை அக்ஷய திருதியை நாளின் சிறப்பை விளக்குகிறது.

கண்ணனின் நண்பரான குசேலரின் வாழ்க்கையில் வறுமை சூழ்ந்திருந்தது. தன் வறுமையை போக்க, ஒரு பிடி அவலோடு கண்ணனை காணச் சென்றார் குசேலர்.

அவலை எப்படி கொடுப்பது என்று குசேலர் யோசித்த போது, கண்ணன், அக்ஷய என்று சொல்லி அந்த அவலை எடுத்து உண்டார்.

வீடு திரும்பய குசேலர் தன் வீட்டையும், மனைவியையும் அடையாளம் காண முடியாத அளவிற்கு செல்வம் குவிந்திருந்தது என்கிறது இதிகாசக் கதை.

அக்ஷய திருதியை நாளில் அம்பிகையே அன்று தன் கையால் இறைவனுக்கு உணவளிக்கிறாள் என்றும், ஆகவே நாமும் சாப்பிடும் உணவை இறைவனுக்கு நிவேதனம் செய்து மாலையில் பசுமாட்டிற்கு உணவளித்துவிட்டு உணவுண்பது நல்லது என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

அக்ஷய திருதியைக்கு தங்கம்தான் வாங்க வேண்டும் என்பதில்லை. உப்பு, மஞ்சள், அரிசி, நவதானியம் உள்ளிட்ட பொருள்களை வாங்கி ஏழைகளுக்கு தானம் அளிக்கலாம். நமக்காக தங்கம் வாங்கி சேமிப்பதில் உள்ள மகிழ்ச்சியை விட ஏழைகளுக்கு நம்மால் முடிந்த பொருளுதவி செய்து இறைவனை நினைத்து பஜனை, ஹோமம் செய்து, அதன் மூலம் புண்ணியம் பெறுவோம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியைச் சிறப்பு மலர்


தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை நாளை (24.04.2012)
ஐஸ்வர்யத்தையும் சுபீட்சத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

M.T.S Jewellery Workshop

நவீன முறையில் அழகிய டிசைன்களில்
22 கரட் தங்கத்தில் உங்கள் எண்ணம்போல்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள

எம்.ரீ.எஸ்.
நகைத் தொழிலகம்

இல.42, Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

அக்ஷய திருதியை தங்கத் திருநாளில் சங்கானை நகரில்...

நவீன அழகிய தங்க ஆபரணங்களை
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள


புதிய வினோ
நகை மாடம்

இத்தினத்தில் நாளை 24.04.2012
எம்மிடம் தங்கம் வாங்கும்
உங்களுக்காக விசேட
விலைக்கழிவுகள்
வழங்கப்படும்.

ஐஸ்வர்யம் உங்கள் இல்லத்தில் நிலைத்திட அக்ஷய திருதியையில் தங்கம் வாங்கிச்
சென்றிட கைராசியானதும் நம்பிக்கையானதுமான ராசியான நகைக்கடை...

கிளை நிறுவனம்:
மொபைல் பிளாஷா
பிரதான வீதி, சங்கானை.
(HNB Bank அருகில்) தொ.பே:0779352902.

பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கிக்கு அருகில்)
தொ.பே: 0215672588,
0776002588.



அக்ஷய திருதியையை அலங்கரிக்க

இதோ பருத்தித்துறையில்
முன்னணி காஞ்சனா நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர், நகைகள், குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் அசல் 22 கரட்
நகைகளை தெரிவு செய்து
இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்

இந்நாளில் நகைகள் வாங்குபவர்களுக்கு
இலவசமாக விசேட அன்பளிப்பு வழங்கப்படும்

காஞ்சனா
நகைமாளிகை

பிரதான வீதி, பருத்தித்துறை. தொ.பே. 0771882119.



அக்ஷய திருதியை தங்கத்திருநாள்
நாளை (24.04.2012) செவ்வாய்க்கிழமை

தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்க
நகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும்
அதிர்ஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்

பிறேம் நகைமாடம்
PREM NAGAIMAADAM

பெறுமதியான நகைகளை வாங்குபவர்களுக்கு
பரிசில்கள் காத்திருக்கின்றன

உரிமையாளர்: இ.பிறேம்
No.171, Prem Plaza, Jaffna Road, Manipay.
T.P: 0777241485

குறையாத செல்வத்தை அள்ளித் தரும்
அக்ஷய திருதியை தினமான

நாளை
(24.04.2012) செவ்வாய்க்கிழமை
எம்மிடம்
நகை கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
சிறப்பு அன்பளிப்புப்
பொருள்களும்
விசேட விலைகழிவும்
வழங்கப்படும்



சிறி மதனா நகைமாளிகை
155 M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 7772

கிளை நிறுவனம்: மதனா ஜுவல்லரி
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 5526

ஆர்ப்பரிக்கும் மங்கையர் மனங்களை
கொள்ளை கொள்ளும் ஆபரண மாளிகை



வரும் அக்ஷய திருதியை
கொண்டாடி மகிழ்ந்திட
அனைவரையும் அன்புடன்
அழைத்திடும்

ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை

கன்னியர் கண்களை சிமிட்டிட செய்திடும் தங்க மாளிகையில்
(916 KDM) தங்க நகைகள், வெள்ளிப்பொருள்கள்
கிடைத்திடும் ஸ்தாபனம்.

அந்நாளினை பொன்நாளாக்கி தங்க நகைகளை
கொள்வனவு செய்வோருக்கு விசேட அன்பளிப்புகளை
வாரி வழங்கிட அனைவரையும் அழைக்கும்

ஸ்ரீ சுசீலா ஆபரண மாளிகை
வருக! வருக! வருக!

இல. 239, பிரதான வீதி, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியைச் சிறப்பு மலர்

I ஆம் பக்க தொடர்ச்சி பார்க்க

* சுவர்ணமயமானவளே! பொன், நவமணி ஆபரணங்களைச் சூடியிருப்பவளே! மகிழ்ச்சியைத் தந்தருள்பவளே! எல்லோராலும் விரும்பப்படுபவளே! பாவத்தைப் போக்கி நல்லருள் செய்பவளே! லட்சுமி தாயே! உன் அருளைப் பொழிவாயாக.

* பொன், பொருளைத் தருபவளே! பசுவின் உடம்பில் குடியிருப்பவளே! வாகன சுகத்தைக் கொடுப்பவளே! வள்ளல் போல் அள்ளித் தருபவளே! என்றும் என் இல்லத்தில் நீங்காது அருளாட்சி செய்ய வந்தருள வேண்டும்.

* குதிரை, யானை, தேர் என அனைத்து வாகனத்திலும் பவனி வருபவளே! அனைவருக்கும் புகலிடமாய்த் திகழ்பவளே. மந்தகாசப் புன்னகையுடன் பொன்மயமாய் ஜொலிப்பவளே! யானையால் பூஜிக்கப்படுபவளே! திருமகளே! உன் கடாட்சப்பார்வையை என் மீது காட்டுவாயாக.

* பக்தர்களை மகிழ்விப்பவளே! இருக்குமிடத்தை ஒளியால் பிரகாசிக்கச் செய்பவளே! தாமரைப் பூவில் வாழ்பவளே! ஸ்ரீ என்னும் திருநாமம் பெற்றவளே! அஷ்டதிக்கும் ஒளிவீசும் மலர்ந்த முகத்தைக் கொண்டவளே! உன் அருளை என்மீது பொழிவாயாக.

* தாமரை மலர் போன்ற இதயம் கொண்டவளே! அமிர்தத்தால் திருமஞ்சனம் செய்யப்படுபவளே! மகாவிஷ்ணுவின் மனதில் இடம்பிடித்தவளே! மலர் போன்ற மென்மையான திருவடிகளை எம் தலை மீது எப்போதும் வைத்து அருள்புரிவாயாக.

### அக்ஷய திருதியை அன்று நட வேண்டிய மரம்

நெல்லிமரத்தில் திருமகள் வாசம் செய்வதாக ஐதீகம். விஷ்ணுவின் அம்சமாக நெல்லிமரம் திகழ்கிறது. நெல்லிக்கனிக்கு 'ஹரிபலம்' என்ற பெயரும் உண்டு. லட்சுமி குபேரருக்கு உரிய மரமாகத் திகழ்வது நெல்லி. ஆதிசங்கரர் சந்நியாசியாக பிச்சை தேடிக் கிளம்பினார். ஒருவீட்டில் நின்று "பவதி பிக்ஷம்தேஹி' என்று மூன்று முறை சத்தமிட்டார். அவ்வீட்டுப் பெண்ணான தர்மசீலையிடம் தர்மம் கொடுப்பதற்கு உணவில்லை. வீட்டில் இருந்த ஒரு நெல்லிக்கனியை அவருடைய பிச்சைப் பாத்திரத்தில் இட்டாள். வறுமையிலும் தானம் செய்த அவள் மீது சங்கரருக்கு இரக்கம் உண்டானது. அவ்வீட்டில் லட்சுமி கடாட்சம் பெருக 'கனகதாராஸ்தவம்' என்னும் ஸ்தோத்திரம் பாடினார். திருமகளின் அருளால் பொன்மழை பொழிந்தது. வீட்டில் நெல்லிமரம் இருந்தால் அட்சயதிரிதியை அன்றும், வெள்ளிக்கிழமைகளிலும் மஞ்சள், குங்குமம் இட்டு வழிபாடு செய்யலாம். நெல்லிக்கனி குளிர்ச்சியும், புளிப்புச் சுவையும் கொண்டது. இதைச் சாப்பிட் டால் பார்வைக்குறைவு, நரைமுடி ஆகிய குறைகள் வராது. துவாதசி திதியில் (அமாவாசை அல்லது பௌர்ணமி கழிந்த பத்தாம் நாள்) உணவில் நெல்லிக்கனியைச் சேர்த்துக் கொள்வது சிறப்பு. முதுமையான வடிவம் கொண்டிருந்த சியவன முனிவர், நெல்லிக்கனியை சாப்பிட்டு இளமையைப் பெற்றதாகக் கூறுவர். இதனால் தான் இவரது பெயரால், நெல்லிக்கனி லேகியத்திற்கு 'சியவனப் பிராஸ்' என்ற பெயருண்டு. நெல்லிமரம் இருக்கும் வீட்டில் திருமகள் நித்யவாசம் புரிவாள். தெய்வீக அருள் நிறைந்திருக்கும். எவ்வித தீய சக்திகளும் அணுகமுடியாது. நெல்லிமரத்தடியில் கிடைக்கும் தண்ணீர் உவர் தன்மையில்லாமல் இருக்கும். குறைவில்லா செல்வம் வீட்டில் பெருக அட்சய திருதியை நாளில் நெல்லிமரத்தை வீட்டில் நடுவது சிறப்பு.

### அக்ஷய திருதியையில் என்ன பொருள் வாங்கலாம்?

'அட்சயம்' என்றால் 'குறைவில்லாதது' என்று பொருள். இந்த நாளில் எப்பொருளை வாங்கினாலும் அப்பொருள் நம் வீட்டில் குறைவில்லாமல் பெருகிவிடும். தர்மர் சூதாடித் தோற்ற நிலையில், கௌரவர்கள் திரௌபதியை சபையில் மானபங்கப்படுத்த முயன்றனர். அவள் கண்ணனை நினைத்து இருகரங்களையும் குவித்து நின்றாள். கண்ணனும் 'அக்ஷய' என்று அருள்பாலித்தார். இதனால், திரௌபதியின் புடவையை இழுத்து மலை போல குவித்தும் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருந்தது. தங்கம், உப்பு, மஞ்சள், கண்ணாடி, குடை, மளிகை சாமான்கள், ஆடை, ஆபரணங்கள், பாத்திரங்கள், தளபாடங்கள், கட்டுமானப் பொருட்கள், வாகனங்கள், அழகு சாதனப் பொருட்கள், புத்தகங்கள், மோட்டார்சைக்கிள், [illegible] புத்தகம், இலத்திரனியல் சாதன[illegible] எந்தப் பொருள்களையும் [illegible] வாங்குவதால், எப்போதும் [illegible] வில்லாமல் நிறைந்திருக்கும்.


நாளை மலரும் தங்கத் திருநாளில் தங்க நகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிர்ஸ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்

சாரங்கா நகைமாடம்

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, Fax. No: 222 8869



இணை நிறுவனங்கள்

சாரங்கா ஜுவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11,
TEL: 2434971. FAX: 0112434071

சிவா நகைமாடம்
இல.14, கண்டி வீதி, நவீன சந்தை, சாவகச்சேரி.
தொ.பே: 021 4922398



அக்ஷய திருதியை தங்கத் திருநாள் 24.04.2012

இப் புனித நாளிலே நகையினை கொள்வனவு செய்து ஐஸ்வர்யம் பெறுக.

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

சிறி சிவாஞ்சனா நகையகம்



இல. 149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 9227



அக்ஷய திருதியை தங்கத் திருவிழா ஏப்ரல்-24

தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்நாளில் தங்கநகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வர்யத்தையும் அதிஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள் இத்தருணத்தில் விஷேட கழிவுகள் மற்றும் அன்பளிப்பு பொருள்களும் வழங்கப்படும்

செல்வி நகை அகம்

நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.

(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 2229441



தங்கமான உறவுக்கு...

கன்னிஹா ஜுவல்லஸ்
Kanniha Jewels

இல.99E, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4448

தங்கத் திருநாளாம் அக்ஷய திருதியை நாளை (04.04.2012) முன்னிட்டு
எமது வாடிக்கையாளர்களுக்கு பொன்னான வாழ்த்துக்கள்.
அன்று எமது வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சலுகைகளை வழங்கி,
அன்றைய தினம் அன்பளிப்புகளை அள்ளி வழங்க உள்ளோம்.



பூரணி நகை மாடம்
1/4 கஸ்தூரியார் வீதி யாழ்
T.P- 021 222 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org